# நித்திலம் - II

இரண்டாமாண்டு - மூன்றாம் பருவம்

இடைக்கால இலக்கியமும் நாடகமும் - 22OU1TA1


Scan Me

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884
www.ncbhpublisher.in | email: info@ncbh.in

ISBN 978-81-2344-365-2

Code No. A 4719 ₹ 120/-

நித்திலம் - II



# நித்திலம் - II

இரண்டாமாண்டு - மூன்றாம் பருவம்

இடைக்கால இலக்கியமும் நாடகமும் - 22OU1TA1

தொகுப்பாசிரியர்கள்
முனைவர் திருமதி பா.பனிமலர்
முனைவர் திருமதி வை.நம்பித்தாய்
திருமதி தி.அனுசூயா

வெளியீடு
தமிழ்த்துறை
இ.மா.கோ. யாதவர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
மதுரை - 14.

# நித்திலம் - II

## முதலாமாண்டு – இரண்டாம் பருவம்

தொகுப்பாசிரியர்கள்

முனைவர் திருமதி பா. பனிமலர்

முனைவர் திருமதி வை. நம்பித்தாய்

திருமதி தி. அனுசூயா

இ.மா.கோ. யாதவர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
மதுரை – 14

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,

அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044 - 26251968, 26258410, 48601884

Language: Tamil

**Nithilam - II**

**First Year - Second Semester**

Compiled by: **Dr. Mrs. B. Panimalar, Dr. Mrs. V. Nambithai, Mrs. T. Anusuya**

**E.M.G. Yadava Woment's College (Autonomous), Madurai - 14**

First Edition: November, 2022

Copyright: Publisher

No.of Pages: 126

Publisher:

**New Century Book House Pvt. Ltd.,**

41-B, SIDCO Industrial Estate,

Ambattur, Chennai - 600 050.

Tamilnadu State, India.

email: info@ncbh.in

Online: www.ncbhpublisher.in

ISBN: 978 - 81 - 2344 - 365 - 2

Code No. A4719

**₹ 120/-**

**Branches**

**Ambattur (H.O.)** 044 - 26359906, **Spenzer Plaza (Chennai)** 044-28490027
**Trichy** 0431-2700885 **Pudukkottai** 04322- 227773 **Thanjavur** 04362-231371
**Tirunelveli** 0462- 2323990, 4210990, **Madurai** 0452-2344106, 4374106
**Dindigul** 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667
**Salem** 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 04343-234387
**Ooty** 0423- 2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800
**Pondicherry** 0413-2280101 **Nagercoil** 04652-234990

நித்திலம் - II

முதலாமாண்டு - இரண்டாம் பருவம்

தொகுப்பாசிரியர்கள் : முனைவர் திருமதி ப. பனிமலர், முனைவர் திருமதி வை.நம்பித்தாய், திருமதி தி. அனுசூயா

இ.மா.கோ. யாதவர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), மதுரை - 14

முதல் பதிப்பு: நவம்பர், 2022

*அச்சிட்டோர்:* **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,**

16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14

☎: 044-28482441

All rights reserved. No part of this book may be reprinted or reproduced or utilised in any form or by any electronic, mechanical, or other means, now known or hereafter invented, including photocopying and recording, or in any information storage or retrieval system, without permission in writing from the publishers.

## இ.மா.கோ. யாதவர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)

மதுரை - 14.

**முதலாமாண்டு - இரண்டாம் பருவம்**

**பாடத்திட்டம்**

# இடைக்கால இலக்கியமும் நாடகமும்

## பொருளடக்கம்


**அலகு : I - சமய இலக்கியங்கள்**

1. திரு ஆலவாய் - திருநீற்றுப்பதிகம் - (11 - பாடல்கள்)
   – திருஞானசம்பந்தர் 5
2. நமச்சிவாயப் பதிகம் - (10 - பாடல்கள்)
   – திருநாவுக்கரசர் 9
3. திருமழபாடி - (10 - பாடல்கள்) 13
   – சுந்தரர்
4. திருப்பாவை - (5 - பாடல்கள்)
   – ஆண்டாள் 17
5. குலசேகர ஆழ்வார் - (11 - பாடல்கள்) 20
6. இயேசு காவியம் - மலைப்பொழிவு (1 - 11 பாடல்கள்)
   – கண்ணதாசன் 25
7. பராபரக்கண்ணி - (1 - 15 பாடல்கள்)
   – குணங்குடி மஸ்தான் சாகிபு 29

**அலகு : II - சிற்றிலக்கியங்கள்**

1. கலிங்கத்துப்பரணி - பேய் முறைப்பாடு
   (12 - பாடல்கள்) 32
2. தமிழ்விடு தூது - (1 முதல் 26 கண்ணிகள் வரை) 38
3. திருக்குற்றாலக் குறவஞ்சி - குறத்தி மலைவளம் கூறுதல்
   (6 - பாடல்கள்) 46
4. முக்கூடற்பள்ளு - குடிமை - பெருமை 51
   (5- பாடல்கள்)

5. நந்திக்கலம்பகம் 55

1. புயவகுப்பு 55
2. மறம் 56
3. ஊசல் 57
4. காலம் 58
5. செலவழுங்குதல் 59

**அலகு : III - நாடகம்**

1. வைகையில் வெள்ளம் வரும் - சொ. சேதுபதி
(குறுநாடகங்கள்)

1. மௌனத்தின் குரலொன்று
2. வைகையில் வெள்ளம் வரும்
3. நீயேதான் இந்தப் பிரபஞ்சம்
4. அன்பின் மெய்
5. தெய்வம் நீ என்றுணர்

**அலகு : IV - இலக்கணம்**

1. பெயர்ச் சொல் - பொதுவிலக்கணம் - உயர்திணை, அஃறிணை, விரவுப்பெயர், ஆகுபெயர் 61
2. வினைச் சொல் - பொதுவிலக்கணம் - முற்று, பெயரெச்சம், வினையெச்சம் 68
3. வேற்றுமைகள் 71
4. வினா, விடை வகைகள் 76
5. மொழிபெயர்ப்புச் சொற்கள் 80

**அலகு : V - இலக்கிய வரலாறு**

1. சைவ இலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் 84
2. வைணவ இலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் 93
3. சிற்றிலக்கியங்கள்

1. பரணி 104
2. தூது 105
3. குறவஞ்சி 109
4. பள்ளு 113
5. கலம்பகம் 114

4. நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் 117

### அலகு : I - சமய இலக்கியங்கள்

## 1. திருஆலவாய் - திருநீற்றுப்பதிகம்

– திருஞானசம்பந்தர்

1. மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

### பொழிப்புரை:

*சிவந்த பவளம் போன்ற வாயினை உடைய உமைபங்கன்ஆகிய திருவாலவாயில் எழுந்தருளியிருக்கும் சிவபிரானது திருநீறு, மந்திரம் போல நினைப்பவரைக் காப்பது. வானவர் தம் மேனிமேல் பூசிக்கொள்ளப்படுவது. அழகு தருவது. எல்லா நூல்களாலும் புகழப்படுவது. ஆகமங்களில் புகழ்ந்து சொல்லப்படுவது. சிவமயத்தில் நிலைத்துள்ளது.*

2. வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

### பொழிப்புரை:

*குளிர்ந்த நீர் நிரம்பிய வயல்கள் சூழ்ந்த திரு ஆலவாயிலில் விளங்கும் சிவபிரானது திருநீறு, வேதங்களில் புகழ்ந்து ஓதப்பெறுவது. கொடிய துயர்களைப் போக்குவது. சிவஞானத்தைத் தருவது. அறியாமை முதலியவற்றைப் போக்குவது. புகழ்ந்து போற்றத்தக்கது. உண்மையாக நிலைபெற்றிருப்பது.*

3. முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே.

### பொழிப்புரை:

*திருஆலவாயான் திருநீறு வீடுபேறு அளிப்பது. முனிவர்களால் அணியப் பெறுவது. நிலையாக எப்போதும் உள்ளது. தக்கோர்களால் புகழப்படுவது. இறைவனிடம் பக்தியை விளைப்பது. வாழ்த்த இனியது. எண்வகைச் சித்திகளையும் தரவல்லது.*

4. **காண வினியது நீறு கவினைத் தருவது நீறு**
**பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு**
**மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு**
**சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே.**

### பொழிப்புரை:

*திருஆலவாயான் திருநீறு கண்களுக்கு இனிமை தருவது. அழகைக் கொடுப்பது. விரும்பி அணிவார்க்குப் பெருமை கொடுப்பது. இறப்பைத் தடுப்பது. அறிவைத் தருவது. உயர்வு அளிப்பது.*

5. **பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு**
**பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்**
**ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு**
**தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே.**

### பொழிப்புரை:

*திருஆலவாயான் திருநீறு, பூசுதற்கு இனிமையானது. புண்ணியத்தை வளர்ப்பது. பேசுதற்கு இனியது. பெருந்தவம் செய்யும் முனிவர்கட்கு ஆசையை அறுப்பது. முடிவான பேரின்ப நிலையை அளிப்பது. உலகோரால் புகழப்படுவது.*

6. **அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு**
**வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு**
**பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு**
**திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.**

### பொழிப்புரை:

*அழகிய மாளிகைகள் சூழ்ந்த திருஆலவாயான் திருநீறு செல்வமாக இருப்பது. துன்பம் போக்குவது. மனவருத்தத்தைத் தணிப்பது. துறக்க இன்பத்தை அளிப்பது. எல்லோருக்கும் பொருத்தமாக இருப்பது. புண்ணியரால் பூசப்பெறுவது.*

7. எயிலது அட்டது நீறு விருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் திருவால வாயான் திருநீறே.

## பொழிப்புரை :

*கூர்மைக்கு விளக்கம் தருகின்ற சூலப்படையினை ஏந்திய திருஆலவாயான் திருநீறு, திரிபுரங்களை எரிக்கச் செய்தது. இம்மை மறுமை இன்பம் தர இருப்பது. பிறரோடு பழகும் பயன் அளிப்பது. செல்வமாக விளங்குவது. உறக்க நிலையைத் தடுப்பது. தூய்மையை அளிப்பது.*

8. இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யால வாயான் றிருநீறே.

## பொழிப்புரை:

*பாம்புகள் வளைந்து தவழும் திருமேனியனாகிய திருஆலவாயான் திருநீறு. இராவணன் பூசிப் பயன்பெற்றது. நல்லவர்களால் எண்ணத்தக்கது. பராசக்தி வடிவமானது. பாவம் போக்குவது. தத்துவங்களாக இருப்பது. மெய்ப்பொருளை உணர்த்துவது.*

9. மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கும் மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் றிருநீறே.

## பொழிப்புரை:

*நஞ்சுண்ட கண்டனாகிய திருஆலவாயான் திருநீறு, திருமால் பிரமர்களால் அறியப்பெறாத தன்மையை உடையது. வானுலகில் வாழும் தேவர்கள் தங்கள் மேனிகளில் பூசிக்கொள்வது. பிறவியாகிய இடரைத் தவிர்த்து நிலையான இன்பம் அளிப்பது.*

10. குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து மால வாயான் றிருநீறே.

## பொழிப்புரை:

*மேல் உலகில் வாழ்வோர் பணிந்து போற்றும் திருஆலவாயான் திருநீறு, குண்டிகை ஏந்திய கையர்களாகிய சமணர்கள் சாக்கியர்களின் கண்களைத் திகைக்கச் செய்வது. தியானிக்க இனியது. எட்டுத் திசைகளிலும் வாழும் மெய்ப்பொருளுணர்வுடையோரால் ஏத்தப்பெறும் தகைமைப்பாடு உடையது.*

**11. ஆற்ற லடல்விடை யேறு மால வாயான்றிரு நீற்றைப்**
**போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்**
**தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்**
**சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.**

## பொழிப்புரை:

*ஆற்றலும், பிறரைக் கொல்லும் வலிமையும் உடைய விடையின் மீது ஏறிவரும் ஆலவாயான் திருநீற்றைப் போற்றிப் புகலியில் விளங்கும் பூசுரனாகிய ஞானசம்பந்தன், சைவத்தின் பெருமையைத் தெளிவித்துப் பாண்டியன் உடலில் பற்றிய தீமை விளைத்த பிணி தீருமாறு சாற்றிய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் ஓதவல்லவர் நல்லவராவார்.*

## உ. நமச்சிவாயப் பதிகம்

### நான்காம் திருமுறை

– திருநாவுக்கரசர்

1. சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

### பொழிப்புரை:

*வேதமான வாசகத்திற்கு நிகரான வாக்கியப் பொருளாக உள்ளவனாய்ப் பரஞ்சோதியாகிய அழியாத வீட்டுலகினனாய் உள்ள எம்பெருமானுடைய, பொலிவுடைய, தமக்குத்தாமே இணையான சேவடிகளை உள்ளம் பொருந்தக் கைதொழுதலால் கல்லைத் துணையாகச் சேர்த்து, அதனோடு இணைத்துக் கடலில் தள்ளிவிட்டாலும் எம்பெருமானுடைய திருவைந்தெழுத்தே நமக்குப் பெரிய துணையாகும்.*

2. பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கல நமச்சி வாயவே.

### பொழிப்புரை:

*பூக்களுக்குள் விலைமதிப்பரிய ஆபரணம் இதழ்கள் மிக்க தாமரையாகும். பசுக்களுக்கு விலைமதிப்பற்ற ஆபரணம் சிவபெருமான் அபிடேகத்துக்குப் பஞ்சகவ்வியம் உதவுதல். அரசனுக்கு விலை மதிப்பற்ற ஆபரணம் செங்கோல் வளையாமல் ஆட்சி செய்வதாம். நாவினுக்கு விலைமதிப்பற்ற ஆபரணம் திருவைந்தெழுத்தேயாகும்.*

3. விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே.

## பொழிப்புரை:

*வானளாவ அடுக்கிய விறகிலே கொடிய நெருப்பு அவற்றை உண்பதற்கு உள்ளே புகுந்தால், விறகினுள் ஒன்றும் மீதியிராது எல்லாம் சாம்பலாகும். இறைவனால் படைக்கப்பட்ட உலகில் மக்கள் பலகாலும் பழகிச் செய்த பாவத்தை நெருங்கி நின்று போக்குவது திருவைந்தெழுத்தேயாகும்.*

4. **இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்**
**விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்**
**அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னாமுற்ற**
**நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே.**

## பொழிப்புரை:

*எவ்வளவு வறுமைத் துன்பத்தால் நலிவுறினும் எம்பெருமானை விடுத்து வேறுயாரையும் இரந்து 'என் துன்பத்தைப் போக்கினால் நீ எம்பிரானே' என்று கூறித் துயரத்தைப் போக்கு எனக் கேட்போம் அல்லோம். மலையின் அடியில் அகப்பட்டுக் கிடந்தாலும் அருளினால் நமக்கு ஏற்படும் நடுக்கத்தை நீக்குவது திருவைந்தெழுத்தேயாகும்.*

5. **வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்**
**அந்தணர்க் கருங்கல மருமறை யாறங்கம்**
**திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி**
**நங்களுக் கருங்கல நமச்சி வாயவே.**

## பொழிப்புரை:

*விரதத்தை மேற்கொண்ட சான்றோர்களுக்குத் திருநீறு சிறந்த அணியாகும். நான்மறை ஆறங்கம் ஓதுதல் அந்தணர்களுக்குச் சிறந்த அணியாகும். பிறைக்குச் சிவபெருமானுடைய அழகிய சடை சிறந்த அணியாகும். எம்மைப் போன்ற அடியார்களுக்குச் சிறந்த அணி திருவைந்தெழுத்தேயாகும்.*

6. **சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்**
**நலமில னாடொறு நல்கு வானலன்**
**குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்**
**நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே.**

## பொழிப்புரை:

*மனக்கோட்டம் இல்லாது எல்லார்க்கும் நன்மையைச் செய்யும் சிவபெருமான், தன்னையே பற்றுக்கோடாகச் சார்ந்த அடியவர்களைத் தவிர மற்றவர்களுக்கு உயர்நலன் செய்யான். அவர்களுக்கு நாடோறும் விரும்பியதனை நல்காது வினைப்பயன்படி நுகருமாறு விடுப்பான். உயர்ந்த குடும்பத்தில் அடியவர்கள் பிறந்தவர் அல்லராயினும் நற்குலத்துக்குரிய நன்மைகளை மிகவும் கொடுப்பது எம்பெருமானுடைய திருவைந்தெழுத்தேயாகும்.*

7. **வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்கள்**
**கூடினா ரந்நெறி கூடிச் சென்றலும்**
**ஓடினே னோடிச்சென் றுருவங் காண்டலும்**
**நாடினே னாடிற்று நமச்சி வாயவே.**

## பொழிப்புரை:

*மேம்பட்ட தொண்டர்கள் உலகப் பற்றுக்களை நீக்கிவிட்டனர். அவர்கள் மேம்பட்ட வீட்டு நெறியையே அடைந்தனர். அடியவர்கள் கூட அடியேனும் ஓடிச்சென்று எம்பெருமான் திருவுருவத்தை அகக் கண்ணால் கண்டேன். அங்ஙனம் கண்டவுடன் திருவைந்தெழுத்தை நாடினேன். நாடிய என்னை அத்திருவைந்தெழுத்தும் நாடியது.*

8. **இல்லக விளக்கது விருள்கெ டுப்பது**
**சொல்லக விளக்கது சோதி யுள்ளது**
**பல்லக விளக்கது பலருங் காண்பது**
**நல்லக விளக்கது நமச்சி வாயவே.**

## பொழிப்புரை:

*வீட்டில் உள்ள விளக்கு ஆங்குள்ள இருளைப் போக்குவதாம். சொல்லின் அகத்து நின்று விளக்குவதாய், ஒளியுடையதாய், பல இடங்களையும் விளக்குவதாய்ப் பல சமயத்தாரும் தம்மை அறியாமலே காண நிற்பதாய் ஞானம் நிறைந்த உள்ளத்திற்கு விளக்குப் போல ஒளியை நல்குவது திருவைந்தெழுத்து மந்திரமே.*

9. **முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்**
**தன்னெறி யேசர ணாத றிண்ணமே**
**அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலாம்**
**நன்னெறி யாவது நமச்சி வாயவே.**

## பொழிப்புரை:

*முந்துறமுன்னம் வீடுபேற்றிற்கு வழிகாட்டிய முதல்வன் முக்கட்பிரானாவான். அவன் அருளிய வழியே உறுதியாகப் பற்றுக் கோடாவது. அந்த வழியிலே சென்று அப்பெருமானுடைய திருவடிகளை அடைபவருக்கு எல்லாம், சிறந்த வழியாக உதவுவது திருவைந்தெழுத்து மந்திரமே.*

**10. மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்**
**பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ**
**நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்**
**தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே.**

## பொழிப்புரை:

*மான்குட்டியைக் கையிலேந்திய, பார்வதி பாகனுடைய பூமாலைகள் சார்த்தப்பெற்ற திருவடிகளை உள்ளம் பொருந்தக் கைதொழுவதற்கு நாவை இணைந்து தழுவிய திருவைந்தெழுத்தைப் பற்றிய இப்பத்துப் பாடல்களை வழிபட வல்ல அடியவர்களுக்கு எத்தகைய துயரங்களும் ஏற்படமாட்டா.*

## 3. திருமழபாடி

– சுந்தரர்

1. **பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கைசைத்து**
**மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே**
**மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே**
**அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.**

### பொழிப்புரை:

*பொன்போலும் திருமேனியை உடையவனே, அரையின்கண் புலித்தோலை உடுத்து, மின்னல்போலும் சடையின் கண், விளங்குகின்ற கொன்றை மாலையை அணிந்தவனே, தலைவனே, விலையுயர்ந்த இரத்தினம் போல்பவனே, திருமழபாடியுள் திகழும் மாணிக்கம் போல்பவனே, எனக்குத் தாய்போல்பவனே, இப்பொழுது உன்னையன்றி யான் வேறு யாரை நினைப்பேன்?*

2. **கீளார் கோவணமுந் திருநீறுமெய் பூசியுன்றன்**
**தாளே வந்தடைந்தேன் தலைவாஎனை ஏன்றுகொள்நீ**
**வாளார் கண்ணிபங்கா மழபாடியுள் மாணிக்கமே.**
**கேளா நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே.**

### பொழிப்புரை:

*கீளின்கண் பொருந்திய கோவணத்தையும் உடுத்து, திருநீற்றையும் திருமேனியிற் பூசினவனே, யாவர்க்கும் தலைவனே, வாள்போலும் கண்களையுடைய உமாதேவியை உடைய ஒரு பங்கினனே, திருமழபாடியில் திகழும் மாணிக்கம் போல்பவனே, அடியேன், உனது திருவடியையே புகலிடமாக வந்து அடைந்தேன்; இனி உன்னையல்லாது வேறு யாரை எனக்கு உறவாக நினைப்பேன்? என்னை நீ ஏற்றுக்கொள்.*

3. **எம்மான் எம்மனையென் றனக்கெட்டனைச் சார்வாகார்**
**இம்மா யப்பிறவி பிறந்தேஇறந் தெய்த்தொழிந்தேன்**
**மைம்மாம் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே.**
**அம்மான் நின்னையல்லால் இனியாரை நினைக்கேன.**

### பொழிப்புரை:

*மேகம் தவழும் அழகிய மாஞ்சோலை சூழ்ந்த திருமழபாடியில் திகழும் மாணிக்கம் போல்வனே, எங்கள் தலைவனே, 'என் தந்தை என் தாய்' என்று இவர்கள் எனக்கு எள்ளளவும் துணையாக மாட்டார்; அவர்களைத் துணையாக நினைத்துத்தான் இந்த நிலையில்லாத பிறவியை எடுத்துப் பின் பிறந்து இளைத்துப் போனேன்; ஆதலின், இப்பொழுது உன்னையல்லாது வேறு யாரை நினைப்பேன்.*

4. **பண்டே நின்னடியேன் அடியாரடி யார்கட்கெல்லாம்**
**தொண்டே பூண்டொழிந்தேன் தொடராமைத் துரிசறுத்தேன்**
**வண்டார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே**
**அண்டா நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே.**

### பொழிப்புரை:

*வண்டுகள் ஆரவாரிக்கின்ற பூஞ்சோலைகள் சூழ்ந்த திருமழபாடியில் திகழும் மாணிக்கம் போல்பவனே, வானுலகில் வாழ்பவனே, உனக்கு அடியவனாகிய யான் அப்பொழுதே உன் அடியார், அவர்க்கு அடியராயினார் ஆகிய எல்லார்க்கும் தொண்டு செய்தலை மேற்கொண்டுவிட்டேன்; உன்னோடாயினும், உன் அடியாரோடாயினும் தொடர்புகொள்ளாத குற்றம் என்பால் இல்லாதவாறு அதனைக் களைந்தொழித்தேன்; ஆதலின் இனி, யான் உன்னை யன்றி வேறு யாரை நினைப்பேன்?*

5. **கண்ணாய் ஏழுலகுங் கருத்தாய அருத்தமுமாய்ப்**
**பண்ணார் இன்றமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே**
**மண்ணார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே**
**அண்ணா நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே.**

### பொழிப்புரை:

*ஏழுலகங்களிலும் உள்ள எல்லா உயிர்கட்கும் அறிவாகியும், அவை விரும்பப்படுகின்ற பொருள்களாகியும், பண் அமைந்த இனிய தமிழ்ப் பாடலாகியும், எல்லாப் பொருட்கும் மேலாயும் உள்ள மேலான ஒளியே, நிலம் நிறைந்த பூஞ்சோலைகள் சூழ்ந்த திருமழபாடியுள் திகழும் மாணிக்கம் போல்பவனே, தலைவனே, இப்பொழுது யான் உன்னைத் தவிர வேறு யாரை நினைப்பேன்?*

6. **நாளார் வந்தணுகி நலியாமுனம் நின்றனக்கே**
**ஆளா வந்தடைந்தேன் அடியேனையும் ஏன்றுகொள்நீ**
**மாளா நாளருளும் மழபாடியுள் மாணிக்கமே**
**ஆளாய் நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே.**

## பொழிப்புரை:

*அடியவர்கட்கு, முடிவில்லாத வாழ்நாளைக் கொடுக்கின்ற, திருமழபாடியில் திகழ்கின்ற மாணிக்கம் போல்பவனே, உனக்கு நான் ஆளாயினபின், உன்னை யல்லாது வேறு யாரை நினைப்பேன்? எனக்கு இறுதிநாள் வந்து நெருங்கித் துன்புறுத்துவதற்கு முன்பே உனக்கு நான் ஆளாதற்பொருட்டு வந்து உன்னை அடைந்தேனாதலின், அடியேனையும் உனக்கு உரியவனாக நீ ஏற்றுக்கொண்டருள்.*

7. **சந்தா ருங்குழையாய் சடைமேற்பிறை தாங்கி நல்ல**
**வெந்தார் வெண்பொடியாய் விடையேறிய வித்தகனே**
**மைந்தார் சோலைகள்சூழ் மழபாடியுள் மாணிக்கமே**
**எந்தாய் நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே.**

## பொழிப்புரை:

*பொருத்து வாய் உடைய குழையை அணிந்தவனே, சடையின்கண் பிறையைத் தாங்கியுள்ளவனே, வெந்து நிறைந்த நல்ல வெண்டிரு நீற்றை அணிந்தவனே, இடபத்தை ஏறும் ஊர்தியாகக் கொண்ட சதுரப்பாட்டினை உடையவனே, அழகு பொருந்திய சோலைகள் சூழ்ந்த திருமழபாடியுள் திகழும் மாணிக்கம் போல்பவனே, என் தந்தையே, நான் உன்னையல்லாது வேறு யாரை நினைப்பேன்?*

8. **வெய்ய விரிசுடரோன் மிகு தேவர்கணங்களெல்லாம்**
**செய்ய மலர்களிட மிகு செம்மையுள் நின்றவனே**
**மையார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே**
**ஐயா நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே.**

## பொழிப்புரை:

*வெப்பமான விரிகின்ற கதிர்களையுடைய பகலவன் முதலாக மிகுந்த தேவர் கூட்டங்கள் எல்லாம், நல்ல மலர்களை இட்டு வழிபட, அவர்கட்கு மிகவும் நேர் நின்று அருள் செய்கின்றவனே, இருள் நிறைந்த அழகிய சோலைகள் சூழ்ந்த திருமழபாடியுள் திகழ்கின்ற மாணிக்கம் போல்பவனே, என் தலைவனே, அடியேன் இப்பொழுது உன்னையல்லாது வேறு யாரை நினைப்பேன்?*

9. **நெறியே நின்மலனே நெடுமாலயன் போற்றிசெய்யும்**
**குறியே நீர்மையனே கொடியேரிடை யாள்தலைவா**
**மறிசேர் அங்கையனே மழபாடியுள் மாணிக்கமே**
**அறிவே நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே.**

## பொழிப்புரை:

*உயிர்களுக்கு நன்னெறியாய் நிற்பவனே, மலத்தாற் பற்றப்படாதவனே, நீண்ட திருமாலும் பிரமனும் ஏத்தெடுக்கும் தியானப் பொருளே, நற்பண்புடையவனே, கொடிபோலும் இடையினையுடைய உமாதேவிக்குக் கணவனே, மான் கன்று பொருந்திய அகங்கையையுடையவனே, திருமழபாடியுள் திகழும் மாணிக்கம் போல்பவனே, அறிவு வடிவானவனே, அடியேன், இப்பொழுது உன்னையல்லாது வேறு யாரை நினைப்பேன்?*

**10. ஏரார் முப்புரமும் மெரியச்சிலை தொட்டவனை**
**வாரார் கொங்கையுடன் மழபாடியுள் மேயவனைச்**
**சீரார் நாவலர்கோன் ஆரூரன் உரைத்த தமிழ்**
**பாரோர் ஏத்தவல்லார் பரலோகத் திருப்பாரே.**

## பொழிப்புரை:

*அழகு பொருந்திய மூன்று புரங்களும் எரிந்தொழியுமாறு வில்லை வளைத்தவனும், கச்சால் கட்டப்பட்ட தனங்களையுடையவளாகிய உமாதேவியுடன் திருமழபாடியுள் விரும்பி வீற்றிருப்பவனும் ஆகிய சிவபெருமானை, புகழ் நிறைந்த திருநாவலூரில் உள்ளார்க்குத் தலைவனாகிய நம்பியாரூரன் பாடிய இத்தமிழ்ப் பாடல்களைப் பாட வல்லவர்களாகிய மக்கள், சிவலோகத்தில் இனிது வீற்றிருப்பார்கள்.*

## 4. திருப்பாவை

**- ஆண்டாள்**

*பெரியாழ்வார் திருவில்லிபுத்தூரில் இறைவனுக்காக நாள்தோறும் மலர் கொய்யும் பூஞ்சோலையில் ஒரு நாள் துளசிச் செடியின் அருகில் சிறு பெண் குழந்தை ஒன்றைக் கண்டு அதிசயித்தார். அக்குழந்தையை அன்புடனும், பண்புடனும் வளர்த்தார். அக்குழந்தையே ஆண்டாள். இவர் கோதை என்றும் நாச்சியார் என்றும் அழைக்கப்பட்டார். இவர் பெரியாழ்வார் தொடுத்த மாலையினைத் தினந்தோறும் தன் கழுத்தில்சூடி அழகு பார்ப்பார். ஒருநாள் இதனை அறிந்த பெரியாழ்வார் வருத்தமுற்று, வேறு மாலை ஒன்றைத் தொடுத்து அதைப் பெருமானுக்குச் சூட்டினார். அன்றிரவு பெருமாள், பெரியாழ்வார் கனவில் ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலையினையே கொண்டு வருமாறு பணித்தார். ஆண்டாளின் பக்திச் சிறப்பினை உணர்ந்த பெரியாழ்வார், 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி' என்று பாராட்டினார். இவர் கண்ணனையே தன் மணாளனாக எண்ணி வழிபட்டார். இவர் பாடியவை திருப்பாவையும் (30 பாடல்கள்) நாச்சியார் திருமொழியும் (143 பாடல்கள்) ஆகும்.*

**ஸ்ரீமதே ராமானுஜாய நம:**

### ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த
### திருப்பாவை
### எட்டடி நாற்சீர் ஒரு விகற்பக் கொச்சகக் கலிப்பா

**(பிலஹரி ராகம்- அட தாளம்)**

1. மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
    நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கு மாய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
    கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
    கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே நமக்கே பறைதருவான்
    பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்!

*மாதங்களில் இது மார்கழி வானிலும் மண்ணிலும் ஒளி நிறைந்த நல்ல நாள். மங்கையரே, வாருங்கள். நீராடச் செல்வோம். சீர் நிறைந்த*

*ஆயர்பாடியைச் சேர்ந்த செல்வச் சிறுமியரே! கூரிய வேலும், கொடிய தொழிலும் கொண்ட நந்தகோபனுக்குக் குமாரனாக வந்தவன். அழகு வழியும் கருங்கண்ணாள் யசோதையின் இளஞ்சிங்கம், கறுத்த மேனியும், சிவந்த கண்ணும், சூரியன் போல் முகமும் கொண்டவன்! அவன் பெயர், நாராயணன்! அவனே நமக்கு நோன்புப் பரிசு தருவான். உலகம் புகழ அவன் புகழைப் பாடிக்கொண்டே இருப்போம், வாருங்கள்!*

*('பறை' என்ற சொல்லுக்கு 'அனுக்கிரகம்', 'அனுமதி' என்று பொருள்)*

2. **வையத்து வாழ்வீர்காள் நாமும் நம்பாவைக்குச்**
   **செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்**
   **பையத் துயின்ற பரமன் அடிபாடி**
   **நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி**
   **மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்**
   **செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்**
   **ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி**
   **உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்!**

*வாழப் பிறந்துவிட்டவர்களே! நாமும் நம் பாவை நோன்பில் செய்யக்கூடிய காரியங்களைக் கேளுங்கள்! பாற்கடலில் துயிலும் பரந்தாமனின் திருவடிகளைப் பாடுவோம். இந்த மார்கழித் திங்களில் நெய்யுண்ண மாட்டோம்; பாலுண்ண மாட்டோம்; அதிகாலையில் நீராடுவோம்; கண்ணுக்கு மையிட மாட்டோம்; கூந்தலுக்கு மலர் சூட மாட்டோம்; செய்யக் கூடாதவற்றைச் செய்ய மாட்டோம்; பொய் சொல்ல மாட்டோம்; காக்கைக்கும் நாய்க்கும் ஐயமிடுவோம்: கை நீட்டிக் கேட்பவர்க்குப் பிச்சையிடுவோம்; கண்ணனையே எண்ணிக் காலங்கழிப்போம். அதிலே வாழ்க்கைக்கு நல்லகதி கிடைத்துவிடும்.*

3. **ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி**
   **நாங்கள் நம்பாவைக்குச் சாற்றிநீ ராடினால்**
   **தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து**
   **ஓங்குபெருஞ் செந்நெல் ஊடு கயலுகளப்**
   **பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்டுபடுப்பத்**
   **தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி**
   **வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளற் பெரும்பசுக்கள்**
   **நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்!**

*உலகம் முழுவதையும் தன் ஒரே காலடியால் அளந்த உத்தமன் அவன். நாம் அவன் பேரைப் பாடி விரதமிருந்து நீராடினால், நாடெல்லாம் மாதம் மும்மாரி பெய்யும்; செந்நெல் வயலில் மீன்கள்*

*விளையாடும்; குவளை மலரில் வண்டுகள் நிம்மதியாகத் தூங்கும். பசு இனங்கள் வள்ளல்கள் போல் குடம் குடமாகப் பால் கொடுக்கும். குறையாத செல்வம் குவிந்து கிடக்கும்; வாருங்கள்.*

4. ஆழி மழைக்கண்ணா ஒன்றுநீ கைகரவேல்
   ஆழி யுட்புக்கு முகந்துகொ டார்த்தேறி
   ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
   பாழியந் தோளுடைப் பத்மநா பன்கையில்
   ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
   தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
   வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
   மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்!

*என் கண்ணா! கடலும் நீயே! மழையும் நீயே! ஒன்று சொல்கிறேன்; கடலிலே புகுந்து நீ தண்ணீரை எடுக்கிறாய்; மளமளவென வானத்தில் ஏறுகிறாய்; ஊழிக் காலத்தின் முதல்வனாகிய திருமாலைப் போல் கார் கறுத்து மேகமாகிவிடுகிறாய்; அந்தத் திருமாலாகிய பத்மநாபன் கையிலுள்ள சக்ராயுதம் போல் மின்னி, சங்கு போல் ஒலி எழுப்பி, எப்போதுமே தாழ்ந்து பழக்கமில்லாத அவனது சாரங்க வில்லில் இருந்து புறப்பட்ட அம்புகள் போல் பூமியில் மழையாகப் பொழிகிறாய்! இப்போதும் பொழிய வாராய், நாங்களும் மார்கழி நீராட வேண்டுமல்லவா!*

5. மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
   தூய பெருநீர் யமுனைத் துறைவனை
   ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கைத்
   தாயைக் குடல்விளக்கம் செய்ததா மோதரனைத்
   தூயோமாய் வந்துநாம் தூமலர்த்தூ வித்தொழுது
   வாயினாற் பாடி மனத்தினாற் சிந்திக்கப்
   போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
   தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்!

*அந்த மாயவனை வடமதுரையின் இளங்குமரனை, வெள்ளம் பெருக்கெடுக்கும் யமுனைக்குத் தலைவனை, யாதவர் குலத் திருவிளக்கை, தாயின் வயிற்றில் பால் வார்த்த தாமோதரனை, தூயவர்களாக வந்து, நாம் மலர் தூவித் தொழுது, வாயாரப் பாடுவோம்; மனதாரச் சிந்திப்போம்; அவன் நமது கடந்த காலத் தவறுகளை மன்னிப்பான். எதிர்காலத்தில் நமது அறியாமையையும் மன்னிப்பான். நமது தவறுகளெல்லாம் தீயினில் விழுந்த தூசு போலாகும்.*

## 5. குலசேகர ஆழ்வார்

(கி.பி. 9ஆம் நூற்றாண்டு)

### பெருமாள் திருமொழி - நான்காம் திருமொழி

### திருவேங்கடத்தில் பிறத்தலும் இருத்தலும் போதியது எனல்

ஊன் ஏறு செல்வத்து உடற்பிறவி யான் வேண்டேன்
ஆனேறு ஏழ் வென்றான் அடிமைத் திறம் அல்லால்
கூன் ஏறு சங்கம் இடத்தான் தன் வேங்கடத்துக்
கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே 1

*நப்பின்னைப் பிராட்டியை மணப்பதற்காக ஏழு எருதுகளை வென்ற கண்ணனின் அடிமையாய் வாழும் நல்வாழ்க்கையை அன்றி வலிமை மிக்க உடலில் அருமையான அழகிய புஜங்களும் மார்புகளும் கொண்ட வீர வாழ்க்கையை நான் வேண்டேன். வளைந்திருக்கும் சங்கினைத் தன் இடக்கரத்தில் ஏந்தியிருக்கும் திருவேங்கடத்தானின் கோனேரித் தீர்த்தத்தில் வாழும் கொக்காய் பிறப்பேன்.*

ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வான் ஆளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்
தேன் ஆர் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதி உடையேன் ஆவேனே 2

*கொக்காய்ப் பிறப்பேன் என்றேன். ஆனால் கொக்காய்ப் பிறந்தால் ஏதோ ஒரு நேரத்தில் திருவேங்கடத்தை விட்டுப் பறந்து போக வாய்ப்புண்டு. அதனால் கொக்காய் பிறப்பதைக் காட்டிலும் மீனாய்ப் பிறப்பது மேல்.*

*அளவில்லாத செல்வத்துடன் அரம்பையர்களால் சூழப்பட்டு வானுலகத்தை ஆளும் பெரும் வாய்ப்பையும் மண்ணுலகத்தில் அரசாள்வதையும் நான் வேண்டேன். தேனால் நிரம்பியப் பூக்களைக் கொண்ட சோலைகள் உடைய திருவேங்கடத்தில் இருக்கும் நீர்ச்சுனையில் மீனாய்ப் பிறக்கும் பெரும் வாய்ப்பு உடையவன் ஆவேன்.*

பின்னிட்ட சடையானும் பிரமனும் இந்திரனும்
துன்னிட்டுப் புகல் அரிய வைகுந்த நீள் வாசல்
மின் வட்டச் சுடர் - ஆழி வேங்கடக்கோன் தான் உமிழும்
பொன் - வட்டில் பிடித்து உடனே புகப் பெறுவேன் ஆவேனே 3

*மீனாய்ப் பிறந்தாலும் வேங்கடவன் அருகாமை கிடைக்காது. அது மட்டுமின்றி என்றாவது அந்த நீர்ச்சுனை வற்றிப் போனால் மீனாய் எடுத்தப் பிறவியும் வீணே போகும்.*

*பின்னலுடைய சடையணிந்த சிவபெருமானும் பிரமனும் இந்திரனும் விரைந்து உன்னைக் காண்பதற்காக வைகுந்தத் திருவாசலில் குழுமி நிற்கின்றனர். நீ மின்னலைப் போல் சுழலும் வட்ட வடிவு கொண்ட சக்கரத்தைக் கொண்டுள்ளாய். திருவேங்கடத்தலைவா. நீ உன் எச்சிலை உமிழும்போது அதனைத் தாங்குவதற்காக பொன்வட்டிலைப் பிடித்து நின்று என்றும் உன்னுடனே எல்லா இடத்திற்கும் செல்லும் பேற பெறுவேன் ஆவேனே.*

**ஒண் பவள வேலை உலவு தண் பாற்கடலுள்**
**கண் துயிலும் மாயோன் கழலிணைகள் காண்பதற்கு**
**பண் பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்து**
**செண்பகமாய் நிற்கும் திரு உடையேன் ஆவேனே** 4

*நீ உமிழும் பொன்வட்டிலைத் தாங்கும் அடிமையாய் இருப்பேன் என்றேன். ஆனால் அதனால் உன் திருமுகத்தைக் காணும் பேறு மட்டுமே கிடைக்கும் திருவடிகள் அல்லவா அடியவர்க்குப் பெரும்பேறு.*

*அருமையான பவளங்களை அலைகள் கரையினில் தினமும் சேர்க்கும் குளிர்ந்தத் திருப்பாற்கடலில் அறிதுயில் புரியும் மாயவா உன் கழலிணைகள் காண்பதற்கு வழி தெரிந்துவிட்டது. பாடல்களைப் பாடியபடி வண்டுக் கூட்டங்கள் திரியும் திருவேங்கட மலையில் ஒரு செண்பக மரமாய் நிற்கும் பெரும்பேறு உடையேன் ஆவேனே. தினந்தோறும் உன் திருவடிகளுக்கு அர்ச்சனையாய் செண்பக மலர்கள் தந்து எப்போதும் உன் திருவடிகளில் நிலையாக இருப்பேன்.*

**கம்ப மத யானைக் கழுத்தகத்தின்மேல் இருந்து**
**இன்பு அமரும் செல்வமும் இவ் அரசும் யான்வேண்டேன்**
**எம்பெருமான் ஈசன் எழில் வேங்கட மலைமேல்**
**தம்பகமாய் நிற்கும் தவம் உடையேன் ஆவேனே** 5

*செண்பக மரமாய் நிற்கும் பேறு பெரும் புண்ணியம் செய்தவர்க்கே கிட்டுமோ என்னவோ? அப்படியென்றால் திருவேங்கட மலைமேல் ஒரு முள்செடியாயாவது பிறக்கும் பேறு பெறுவேன்.*

*வலிமையும் அழகும் மிகுந்த பட்டத்து யானையின் கழுத்தின் மீதேறி இன்பத்தை நுகரும் செல்வத்தையும் அரசாட்சியையும் நான் வேண்டேன். எனக்கும் இந்த ஈரேழ் உலகங்களுக்கும் தலைவனான திருவேங்கட நாதனின் திருமலை மேல் ஒரு முள்செடியாய் நிற்கும் தவமுடையேன் ஆவேனே.*

**மின்னனைய நுண்ணிடையார் உருப்பசியும் மேனகையும்**
**அன்னவர்தம் பாடலொடும் ஆடல் அவை ஆதரியேன்**
**தென்ன வென வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துள்**
**அன்னனைய பொற்குவடு ஆம் அருந்தவத்தன் ஆவேனே** 6

*முள்செடியாய் நின்றால் எனக்கு மட்டுமே பயன் எம்பெருமானுக்கோ அடியவர்களுக்கோ எந்தப் பயனும் இல்லை. அதனால் திருவேங்கட மலையில் இருக்கும் பல சிகரங்களுக்குள் ஒரு சிகரமாக நான் நின்றால் இறைவன் இருக்கும் இடம் இது என்று அடியவர்களுக்கு உணர்த்தும் பேறு கிடைக்கும் (சிகரம் என்றால் மலைச் சிகரம் என்றும் கோபுரம் என்றும் பொருள் தரும்).*

*மின்னலைப் போன்ற நுண்ணிய இடையினை உடைய ஊர்வசியும் மேனகையும் அவர்களைப் போன்றவர்களும் பாடியும் ஆடியும் மகிழ்விக்கும் இன்பங்களை நான் விரும்பேன் அவர்களின் பாடல் ஆடலைவிட இனிமையான தேனினைப் போல் (தென்ன வென) வண்டுக் கூட்டங்கள் பண்களைப் பாடி ஆடும் திருவேங்கடத்துள் அழகு மிகுந்த பொற்சிகரமாக ஆகும் அரிய தவத்தை உடைவன் ஆவேனே.*

**வான் ஆளும் மா மதி போல் வெண் குடைக்கீழ் மன்னவர்தம்**
**கோன் ஆகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வு அறியேன்**
**தேன் ஆர் பூஞ்சோலைத் திருவேங்கட மலைமேல்**
**கானாறாய்ப் பாயும் கருத்து உடையேன் ஆவேனே** 7

*மலைச்சிகரமாய் நின்றாலும் யாருக்கும் பயனின்றிப் போகலாம் எத்தனையோ சிகரங்கள் இருக்கின்றன; அதனால் அடியார்க்கும் பயனின்றிப் போகலாம். ஆனால் திருவேங்கட மலையில் ஒரு காட்டாறாய் நான் இருந்தால் உன் திருமுழுக்குக்கும் ஆவேன்; அடியார்களின் தாகத்திற்கும் ஆவேன்.*

*வானத்தில் இருக்கும் விண்மீன்களையெல்லாம் தன் ஒளியால் வென்று வானத்தை ஆளும் முழுமதியைப்போல் வெண்கொற்றக் குடையின் கீழ் அரசாளும் மன்னவர்களை எல்லாம் திறத்தால் வென்று அவர்கள் தலைவனாக வீற்றிருக்கும் பெருமையையும் நான் வேண்டேன். தேன் நிரம்பும் பூக்கள் உடைய சோலைகளைக் கொண்ட திருவேங்கட மலை மேல் ஒரு காட்டாறாய் பாயும் எண்ணத்தைக் கொண்டவன் ஆவேனே.*

பிறை ஏறு சடையானும் பிரமனும் இந்திரனும்
முறையாய பெரு வேள்விக் குறை முடிப்பான் மறை ஆனான்
வெறியார் தண் சோலைத் திருவேங்கட மலைமேல்
நெறியாய்க் கிடக்கும் நிலை உடையேன் ஆவேனே 8

*பொற்சிகரமாய் நின்றாலும் உன் கோயிலைச் சுற்றி அடர்ந்த காடுகள் இருப்பதால் அடியார்களால் உன் கோயிலை அடைய முடியாமல் போகலாம். அதனால் அவர்கள் உன் கோயிலை அடையும் வழியாக நான் ஆவேன்.*

*பிறையினை தன் சடையில் வைத்திருக்கும் சிவபெருமானும் பிரமனும் இந்திரனும் முறையுடன் உன்னை வேண்டிச் செய்யும் பெரும் வேள்விகளுக்கான பயன்களைத் தந்து அவர்களின் குறை தீர்ப்பாய். அவர்கள் முறை என்ன என்று அறியும் வகை சொல்லும் வேதங்களாய் நின்றாய். நறுமணம் கமழும் குளிர்ந்த சோலைகளைக் கொண்ட திருவேங்கட மலை மேல் அடியவர்கள் உன் திருக்கோயிலை அடையும் வழியாகக் கிடக்கும் நன்னிலை உடையவன் ஆவேனே.*

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா நின் கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்து இயங்கும்
படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே 9

*உன் கோயிலுக்கு வரும் வழிகள் பல இருக்கலாம் அதனால் உன்னைக் காண வரும் அடியார்களில் சிலர் நான் வழியாய்க் கிடந்தாலும் என் மேல் வராமல் வேறு வழியாய் உன் கோயிலை அடையலாம். அவர்கள் எல்லோருடைய திருவடிகளும் என் மேல் படவேண்டும் என்றால் உன் திருக்கோயிலின் படியாய் கிடக்கும் பேறு வேண்டும்.*

*பற்பல பிறவிகளாய் செய்த ஒன்றுடன் ஒன்று பிணைந்த காட்டுச் செடிகளைப் போல் இருக்கும் என் வலிய வினைக்கூட்டங்களைத் தீர்க்கும் திருமகள் மணாளா. நான் என்றோ செய்த சிறிய நல்வினையை நினைவில் நெடுங்காலம் கொண்டு எனைக் காப்பவனே நெடியவனே திருவேங்கடவா என் கோயிலின் 'வாசலின் அடியவர்களும்' வானவர்களும் அரம்பையர்களும் வந்து உன்னைக் காணுமாறு ஒரு படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே.*

உம்பர் உலகு ஆண்டு ஒரு குடைக்கீழ் உருப்பசிதன்
அம்பொற் கலை அல்குல் பெற்றாலும் ஆதரியேன்
செம் பவள - வாயான் திருவேங்கடம் என்னும்
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே 10

*நான் ஏன் இப்படி இது ஆவேன்; அது ஆவேன் என்று உன்னை வேண்டிக் கொண்டிருக்கிறேன். அடியவனுக்கு அழகு தன் தலைவன் தன்னை எந்த நிலையில் வைத்தாலும் அதில் மகிழ்ந்திருந்து தலைவனுக்குத் தொண்டு செய்வதே. அதனால் நீ என்னை எந்த நிலையில் வைத்தாலும் அதற்கிணங்க ஏதேனும் ஒன்றாய் திருவேங்கட மலைமேல் நான் ஆவேன்.*

*தேவர்கள் உலகங்களை ஒரு குடை கீழ் ஆண்டு ஊர்வசியின் அழகிய பொன்னாடைகள் அணிந்து இடையிலிருந்து கிடைக்கும் இன்பத்தைப் பெற்றாலும் அதனை விரும்பேன். சிவந்த செம்மையான் திருப்பவள வாயானின் திருவேங்கடமென்னும் எம்பெருமானுடைய பொன் மலையில் அவன் திருவுள்ளப்படி ஏதேனும் ஆவேனே.*

**மன்னிய தண் சாரல் வட வேங்கடத்தான் தன்**
**பொன் இயலும் சேவடிகள் காண்பான் புரிந்து இறைஞ்சிக்**
**கொல் நவிலும் கூர்வேல் குலசேகரன் சொன்ன**
**பன்னிய நூற் தமிழ் - வல்லார் பாங்காய பத்தர்களே** 11

*என்றென்றும் குளிர்ந்த சாரல் வீசும் வடவேங்கடத்தை உடைய எம்பெருமானின் பொன்னைப் போன்ற செவ்விய திருவடிகளைக் காண்பதற்கு இறைஞ்சி எல்லா எதிரிகளையும் வெல்லும் கூரிய வேலினைக் கைக் கொண்ட குலசேகரன் சொன்ன இந்தத் தமிழ்ப் பாடல்களை சொல்லி மனத்தில் வைத்தவர்கள் இறைவனுக்கு மிகவும் நெருக்கமான பக்தர்கள் ஆவார்கள்.*

## 6. இயேசு காவியம்

- கண்ணதாசன்

### மலைப்பொழிவு

அன்றுதம் சீடர்க் கெல்லாம்
அறிவுரை கூற எண்ணிக்
குன்றின்மேல் ஏறி நின்று
கொடைக்கரம் விரித்து நீட்டி
ஒன்றிரண் டென்று நெஞ்சில்
உள்ளதை எண்ணி வைத்து
மன்றினைத் தொடங்கி வைத்தார்
மாரிபோல் இயேசு நாதர்! 1

இந்தஓர் மலையும் பின்னாள்
இறுதிநாள் மலையும் பார்த்தால்
அந்தக மனிதர்க் கெல்லாம்
அறிவினை ஊட்டும் தோற்றம்!
விந்தைசேர் உலகில் இயசேு
வெடித்ததோர் புரட்சி ஓசை
சிந்திய முத்தோ மக்கள்
ஜீவனைக் காக்கும் பானம்! 2

எண்வகை மனிதர் தம்மை
இயல்புற விரித்துச் சொன்னார்
நுண்ணிய புலன்க ளோடும்
நுவலரும் சீடர் கேட்டார்
புண்ணியம் உலகில் எய்தப்
புகுந்தது புதிய வெள்ளம்!
கண்ணியன் இயேசு சொன்ன
கணக்கினைக் கீழே பார்ப்போம்! 3

எளிய மனத்தோர் பேறுபெற் றோரென
எடுத்ததும் அவர்சொன்னார் - இதில்
எளிமை என்பது பற்றில் லாமை
இறைவனை நம்புவதே!

வளமிகு செல்வம் மனையாள் சொந்தம்
வரவினை எண்ணாது - ஒரு
வஞ்சமில் லாத நெஞ்சத் துடனே
பிறர்பழி சொல்லாது
விளம்பிய வேதம் வகுத்தது போலே
வாழ்பவர் இவராவார் - அந்த
விண்ணர செல்லாம் இவருக் குரியது
அடைபவர் இவராவார்! 4

துயரம் உறுவோர் பேறுபெற் றோரெனத்
தூயமகன் சொன்னார் - அந்தத்
துயரம் அடைவோர் ஆறுதல் பெறுவர்
துன்பங்களை எண்ணார்!
அயராச் சுகமும் மதுவும் கீதமும்
ஆயிரம் இன்பங்கள் - அதை
அடைவது தானே பெருமையென் றெண்ணும்
மானிட உள்ளங்கள்!
வயிறே பெரிதாய் வாழ்ந்திடும் வாழ்வில்
ஓடிடும் எண்ணங்கள் - இது
வாழ்வல என்பது இயேசுவின் வார்த்தை
கூறிடும் சின்னங்கள்! 5

சாந்தம் உடையோர் பேறுபெற் றோரெனத்
தத்துவமும் சொன்னார் - இந்தத்
தாரணி முழுவதும் அவர்களுக் குரியது
தலைவர்கள் அவரென்றார்!
ஏந்தும் கோபம் பழிவாங் கும்குணம்
எத்தனை எத்தனையோ - இங்கே
இடறி விழுந்தால் கொடுமை நடத்தும்
வித்தகர் எத்தனையோ!
மாந்தரின் வாழ்வில் தேவைப் படுவது
சாந்தம் தானென்றார் - அது
மண்ணையும் ஆளும் விண்ணையும் ஆளும்
மகத்துவம் பாரென்றார்! 6

நீதியின் பாலே தாகங்கொண் டோரே
பேறுபெற் றோரென்றார் - அவர்
நிறைவே பெற்று முறையாய் வாழ்பவர்
அறமே தலையென்றார்!
சாதிக ளாலும் பேதங்க ளாலும்
தள்ளாடும் உலகம் - அது
தர்மம் ஒன்றை நம்பிய பிறகே
அடங்கிவிடும் கலகம்!
ஓதும் பொருளா தாரம் தனிலும்
உன்னத அறம்வேண்டும் - புவி
உயர்வும் தாழ்வும் இல்லா தான
வாழ்வினைப் பெறவேண்டும்! 7

இரக்கம் உடையோர் பேறுபெற் றோரென
இயேசுபிரான், சொன்னார் - அவர்
இரக்கம் காட்டி இரக்கத்தைப் பெறுவர்
இதுதான் பரிசென்றார்!
சுரக்கும் வட்டி பணத்தில் பற்று
தொழிலில் பெருங்கொள்ளை - யார்
தொழில் செய்தாலும் கூலி தராது
செய்வது பெருந்தொல்லை
இறக்கும் மனிதன் தண்ணீர் கேட்டால்
ஊற்றுவதும் இல்லை - இங்கு
எல்லாம் இருந்தும் மனிதர்கள் நெஞ்சில்
இரக்கம் தானில்லை! 8

தூயமனத் தோர் பேறுபெற் றோரெனத்
தூயமகன் சொன்னார் - அவர்
தோன்றும் கடவுளை நேரில் காண்பார்
சொர்க்கம் வருமென்றார்!
காயும் உடலை வாட்டி யெடுப்பது
காமம் களவுகளே - ஒரு
காலம் மயக்கும் இன்பங்கள் எல்லாம்
மறுநாள் கவலைகளே!

வாயும் வயிறும் ஆசையில் விழுந்தால்
வாழ்க்கை பாலைவனம் - அவர்
தூய மனத்தில் வாழ நினைத்தால்
எல்லாம் சோலைவனம்! 9

அமைதி கொடுப்போர் பேறுபெற் றோரென
அன்புமகன் சொன்னார் - இங்கு
ஆண்டவன் பெற்ற பிள்ளைகள் எல்லாம்
அவர்கள் தானென்றார்1
தமையும் வாட்டிப் பிறரையும் வாட்டும்
சண்டை சச்சரவு - தினம்
தன்னா டென்றும் பிறர்நா டென்றும்
பேசும் பொய்யுறவு!
இமைக்கும் போதில் ஆயிரம் போட்டி
எத்தனை வீண்கனவு - தினம்
இவை இல்லாது அமைதிகள் செய்தால்
இதயம் மலையளவு! 10

நீதிக் காகத் துன்பம் உறுவோர்
பேறுபெற் றோரென்றார் - அவர்
நேரே அடைவர் விண்ணர சென்றே
நிச்சயமாய்ச் சொன்னார்!
மோதும் கொடுமை கண்ணில் கண்டும்
மூச்சுவிடா திருந்து - சுய
மோகம் தீர்த்து வாழ்வார் சிலபேர்
சுயநலமே நிறைந்து!
வேதனை தீர்க்கத் தம்மை வருத்தும்
ஞானிகள்தாம் எவரோ - அந்த
விண்ணக அரசை என்றும் அடைந்து
வாழ்பவர்கள் அவரே! 11

## 7. பராபரக்கண்ணி

– குணங்குடி மஸ்தான் சாகிபு

அண்ட புவனமென்றும் ஆடுதிருக் கூத்தினையான்
கண்டு மகிழ்ந்திடவே காட்டாய் பராபரமே. 1

*பராபரப்பொருளே! அண்டத்திலும், உலகத்திலும் எக்காலத்தும் ஆடுகின்ற திருக்கூத்தைத் தெரிசித்துச் சந்தோஷிக்கும்படி காட்ட வேண்டும்.*

ஆதியாய் ஆண்டவனாய் அஃததுவாய் நின்றபெருஞ்
சோதியாய் நின்மலமாய்ச் சூழ்ந்தாய் பராபரமே. 2

*பராபரப்பொருளே! முதற்பொருளாகியும், ஆண்டவனாகியும், அகதுகதுவாகியும், சோதிப்பொருளாகியும், நிர்மலப்பொருளாகியும் வளைந்தனை.*

வேத மறைப்பொருளை வேதாந்தத் துஉட்கருவை
ஓதி உனையறிந்தார் உண்டோ பராபரமே. 3

*பராபரப்பொருளே! வேதப்பொருளையும், வேதாந்தத்தின் உட்கருவையும், ஓதி உன்னையறிந்தவர்கள் யாவரிருக்கின்றனர்.*

அண்ட புவனமுடன் ஆகாச மென்று உசும்பிக்
கொண்டாடும் மெய்ஞ்ஞானக் கூத்தே பராபரமே. 4

*பராபரப்பொருளே! அண்டங்களும், உலகங்களும், ஆகாசவாசி களும் துதித்துக்கொண்டாடுகின்ற உண்மை ஞானக் கூத்தே!*

நாவாற் புகழ்க்கெட்டா நாயகனே நாதாந்தம்
பூவாய் மலர்ந்திருக்கப் பூத்தாய் பராபரமே. 5

*பராபரப்பொருளே! நாவினாற் புகழ்வதற்கு எட்டாத நாயகனே! நாதாந்தப்பூவாய் மலர்ந்திருக்கும்படி பூத்தாய்.*

பேரால் பெரிய பெரும்பொருளே பேதைதனக்கு
ஆரா ரிந்தும்பலன் ஆமோ பராபரமே. 6

*பராபரப்பொருளே! பேரினாற் பிரபலமாயிருக்கின்ற பெரிய பொருளே! ஏழையாகிய எனக்கு யாரிருந்து என்ன பிரயோசனம்?*

**மாராய நற்கருணை மாவருள்சித் தித்திடவே**
**பாராயோ ஐயா பகராய் பராபரமே. 7**

*பராபரப்பொருளே! ஐயனே! எனக்கு அந்நியமான உயர்ந்த திருவருளானது எனக்குக் கைகூடும்படி திருக்கண் சாத்தியருள் மாட்டாயோ?*

**ஆனாலு முன்பாதம் யாசித்து இருப்பதற்குத்**
**தானாய் இரங்கியருள் தாராய் பராபரமே. 8**

*பராபரப்பொருளே! எப்படியானாலும் உன்னுடைய திருவடிகளை யாசித்திருப்பதற்குத் தானாகவே கிருபைதந்து அருள் செய்ய வேண்டும்.*

**நாதாந்த மூல நடுவீட்டுக்குள் இருக்கும்**
**மாதவத்தோர்க்கு ஆன மருவே பராபரமே. 9**

*பராபரப்பொருளே! நாததத்துவத்திற்கு அந்தமான மூலநடு வீட்டுக்குள்ளே எழுந்தருளியிருக்கின்ற மகத்தாகிய தவசிரேஷ்டர் களுக்கான சிநேக வஸ்துவே!*

**உடலுக்கு உயிரேஎன் உள்ளமே உன்பதத்தைக்**
**கடலுமலை யும்திரிந்தும் காணேன் பராபரமே. 10**

*பராபரப்பொருளே! சரீரத்திற்குள்ளிருக்கின்ற என்னுடைய உயிரே! என்னுடைய மனமே! உன்னுடைய திருவடிகளை கடலிலும், மலைகளிலும் திரிந்தும் காண்கிலேன்.*

**மாந்திரத்துக்கு எட்டா மறைப்பொருளே மன்னுயிரே**
**சேர்ந்தஎழு தோற்றத்தின் சித்தே பராபரமே. 11**

*பராபரப்பொருளே! சர்வமந்திர பீஜங்களாலும் உணரமுடியாத வேதப்பொருளே! நிலைபெற்ற உயிரே! சேர்ந்திருக்கின்ற எழுவகைப் பிறவிகளிலும் ஆடுகின்ற சித்துப்பொருளே!*

**தனியேனுக்கு ஆதரவு தாரணியில் இல்லாமல்**
**அனியாயம் ஆவதுனக்கு அழகோ பராபரமே. 12**

*பராபரப்பொருளே! தனிமையானவனான நான் இவ்வுலகத்தின் கண் யாதொரு ஆதரவுமில்லாமல் அநியாயமாய்க் கெடுவது உனக்கு அழகுதானோ?*

**ஓடித் திரிந்துஅலைந்தும் உன்பாதம் காணாமல்**
**வாடிக் கலங்குகிறேன் வாராய் பராபரமே. 13**

*பராபரப்பொருளே! நான் அநேக இடங்களெல்லாம் ஓடியோடித் திரிந்து அலைந்தும் உன்னுடைய திருவடிகளைக் காணாமல் மனம்வாடிக் கலங்குகிறேன். ஆகையால் இனியாவது தேவரீர் இவ்வேழையின்முன் எழுந்தருளி வரவேண்டும்.*

**தூராதி தூரம் தொலைத்துமதில் உன்பாதம்**
**பாராத பாவத்தால் பயந்தேன் பராபரமே. 14**

*பராபரப்பொருளே! அதிக தூரங்களெல்லாம் போய்ப் போய்த் தொலைத்தும், அதில் உன்னுடைய திருவடிகளைப் பாராமல் (தெரிசனஞ் செய்யாமல்) வீண்வேலையினால் பயமடைந்தேன்.*

**தேடக் கிடையாத திரவியமே தேன்கடலே**
**ஈடுனக்கும் உண்டோ இறையே பராபரமே. 15**

*பராபரப்பொருளே! தேடினாலுங் கிடைக்காத செல்வமே! தேன் சமுத்திரமே! தலைவனே! உனக்கு ஒப்பானவர்கள் யாவரிருக்கின்றனர்?*

## அலகு : II - சிற்றிலக்கியங்கள்

# கலிங்கத்துப்பரணி

## அ) பேய் முறைப்பாடு

*(பேய்கள் காளியிடம் தங்கள் குறைகளைக் கூறித் தம் விருப்பத்தை நிறைவு செய்விக்குமாறு வேண்டிக் கொண்ட தன்மையை இப்பகுதி தெரிவிக்கின்றது).*

### பேய்களாகப் பிறந்து கெட்டோம்!

*பேய்கள் காளியை நோக்கி கீழ்க்காணுமாறு தம் குறையை முறையிட்டன.*

*அழகிய சடைமுடியிலே, கங்கையாற்றை அணிந்துள்ள சிவபிரானது திருவருளைப் பெற்ற காளி தேவியே! நாங்கள் முதற் குலோத்துங்க சோழனால் காப்பாற்றப்படுகின்ற பேறுபடைத்த பூதங்களாகப் பிறவாமல், கேவலம் பேய்களாகப் பிறந்து, அதனால் கேட்டை அடைந்தோம்.*

**ஆறுடைய திருமுடியான் அருளுடைய**
**பெருந்தேவி அபயன் காக்கும்**
**பேருடைய பூதமாய்ப் பிறவாமல்,**
**பேய்களாகப் பிறந்து கெட்டோம்!**

*ஆறு-கங்கை, திரு-அழகிய, முடியான் என்றது சிவனை. அபயன்-சோழன், பேறு-பாக்கியம் (பூதங்கட்குப் படையல்கள் முதலியவை கிடைக்கும். ஆனால் பேய்களுக்கோ, போர் நிகழ்ந்தால்தான் உணவாகப் பிணம் கிடைக்கும் என்பர்).*

### எங்களை யார் காப்பார்?

*தேவி! நீ எங்களுடைய பசிக் கொடுமை அறிந்து அருள் புரிந்து காப்பாற்றாவிட்டாலும், வேறு யார்தாம் எங்களைக் காப்பாற்றப் போகிறார்கள்? பாழடைந்த ஊரைக் காப்பதற்கு மதிற்சுவர்கள் வேண்டியதில்லை. அது போல் எங்களுடைய பயனற்ற உயிரைக் காக்க உடம்பும் வேண்டாம். ஆகவே, இப்பொழுதே உயிர் காக்கும் எங்கள் உடலைக் கைவிட்டு இறந்துவிடுகிறோம்.*

**ஆர்காப்பார், எங்களை நீ அறிந்து அருளிக்**
**காப்பதல்லால்? அடையப் பாழாம்**
**ஊர்காக்க மதில் வேண்டா; உயிர் காத்த**
**உடம்பினை விட்டு, ஓடிப் போதும்! 214**

*அடைய முழுதும், ஓடிப்போதும்-இறந்துவிடுகிறோம், 'அடையாப் பாழ்த்த, உயிர் பாழ்த்த' எனவும் பாடங்கள்.*

## பிழைக்க மாட்டோம்

*தேவி! பசியின் மிகுதியால் நாங்கள் நாளுக்கு நாள் மெலியும் வகையால் மெலிந்து தளர்ச்சி அடைந்துள்ளோம். இனி, மேலும் வலுவில்லாதவராகிவிட்டோம். இனி, மேலும் தளர்ச்சியடையத் தாங்க மாட்டோம். அவ்வளவு தூரம் நாங்கள் பிழைக்க மாட்டோம். வலுவில்லாதவராகிவிட்டோம். நீ கோபித்துக் கொண்டாலும் நாங்கள் பிழைக்க மாட்டோம்.*

**ஓய்கின்றோம்! ஓய்வுக்கும் இனி ஆற்றேம்!**
**ஒரு நாளைக்கு ஒருநாள் நாங்கள்**
**தேய்கின்றபடி தேய்ந்து, மிடுக்கு அற்றேம்!**
**செற்றாலும் உய்ய மாட்டோம்! 215**

*ஓய்கின்றேம் - தளர்ந்துள்ளோம், ஆற்றேம் - பொறுக்க மாட்டோம், மிடுக்கு அற்றேம் - வலிமையில்லாதவரானோம், செற்றாலும் - சினந்தாலும்; பகைத்தாலும், உய்ய மாட்டோம் பிழைக்க மாட்டோம்.*

## பசிக்கு ஒன்றும் இல்லேம்!

*தேவி! கீழோராகிய நாங்கள் முன்னால் செய்த பாவத்தால், நான்கு முகத்தினையுடைய பிரமன், இந்நாளில், எங்கள் வயிற்றினிலே பசித்தீயைப் பற்றவைத்துவிட்டான். பாவிகளாகிய நாங்கள் பசியைப் போக்கிக்கொள்வதற்கு எவ்வித உணவும் கிடைக்கப் பெறாதவர்களாய் இருக்கின்றோம். பெரியோர் இட்ட என்ன என்ன தீங்குகளைப் பெறப் போகின்றோமோ? ஏதும் தெரியவில்லையே!*

**'சாவத்தால் பெறுதுமோ - சதுமுகன்தான்,**
**கீழ்நாங்கள் மேனாள் செய்த**
**பாவத்தால், எம் வயிற்றில் பசியை வைத்தான்;**
**பாவியேம் பசிக்கு ஒன்று இல்லேம்! 217**

*சாவம்-சாபம், சதுமுகன்-நான்முகன்; பிரமன், கீழ்-கீழோர்; மேல்நாள் முன்னாளில் பசிக்கல்லேம் எங்கட் கல்லேம்! எனவும் பாடம்.*

## நற்குறியால் பொறுத்துள்ளோம்

*தேவி! எங்களுடைய மூக்குகளுக்கு அருகே நிணநாற்றமும், புலால் நாற்றமும் வீசுகின்றன. உதடுகள் துடிக்கும் வண்ணம் எங்கள் வாய்களில் ஈக்கள்வேறு மொய்க்கின்றன. இத்தகைய நல்ல சகுனங் களாலேயே-நாங்கள் பிழைத்திருக்கின்றோம். இல்லாவிட்டால், இப்பொழுதே இறந்துவிடுவோம்.*

**'மூக்கு அருகே வழு நாறி, முடை நாறி**
**உதடுகளும் துடிப்ப, வாயை**
**ஈக் கதுவும் குறியால், உய்ந்து இருக்கின்றோம்;**
**அன்றாகில், இன்றே சாதும்!'** 220

*வழு - நிணநீர், நாறி - தோன்றி, முடை - புலால், நாறி - வீசி, கதுவும் - மொய்க்கும், குறி - சகுனம், உய்ந்து - பிழைத்து, சாதும் - இறப்போம்.*

## முதுபேய் வணங்கிக் கூறல்

*அந்த முதுபேய், காளி தேவியைத் தன் கைகளால் தொழுது, தலையால் வணங்கிற்று. பிறகு, தேவி! அடியேனாகிய நான் வடகலிங்க நாட்டிற்குச் சென்றிருந்தேன். அப்போது, அங்கு சில சகுனங்கள் தோன்றின. அவற்றைக் கூறுகிறேன். கேட்டருள்க! என்று கூறிச் சொல்லத் தொடங்கிற்று.*

**கைதொழுது இறைஞ்சி**
**அடியேன் வடகலிங்கத்து**
**எய்திய இடத்து உள**
**நிமித்தம் இவை கேண்மோ;** 222

*இறைஞ்சி - வணங்கி, எய்திய - இடத்து அடைந்தபோது, நிமித்தம் - சகுனம், கேண்மோ - கேட்பாயாக.*

## தீய சகுனங்கள்

*மதம் பொழியும் ஆண் யானைகளினுடைய கொம்புகள் முறிந்து போயின; அவற்றின் மதநீரும் வற்றிப்போயிற்று! இளம் பெண் யானைகளுக்குக் கொம்புகள் முளைத்துள்ளன. மதநீர் மிகுதியாகத் தங்கி இருந்தது! கதிர் பரப்பி ஒளி வீசும் விளக்குகள் வலிகுன்றி எரிந்தன. பருவகாலத்தில் தவறாது பெய்யும் மேகங்கள் சிவந்த இரத்தத்தை மழைத் துளிகளாகப் பொழிந்தன.*

*தோலால் கட்டப்பட்ட முரசங்கள், இருந்த இடத்திலேயே இருந்து, அறைவார் இன்றித் தாமாகவே வீணாக - வெறுமனே எவ்விதப் பயனும் இன்றி ஒலித்தன! இரவு நேரத்தில் வானவில் வந்து தோன்றிற்று! ஊரிலுள்ள வீடுகளில் பெரிய ஆந்தைகள் வந்து தோன்றலாயின. நரிகள் ஊளையிடலுமாயின! ஒளி வீசி நறுமணம் கமழ்ந்து எரியவேண்டிய ஓமத்தீ, சுடலையில் எரியும் தீயைப் போல் நாற்றத்தை வீசிற்று!*

*நறுமணம் கமழும் மலர்ந்த பூமாலைகள், புலால் நாற்றத்தை வீசின! பொன்னால் செய்யப்பட்ட மணிமாலைகளின் ஒளி, முற்றும் அழிந்தது! சித்திரங்களிலுள்ள படங்கள் எல்லாம் உடலில் வேர்வை உண்டாகும்படி தோன்றின! ஊறி வரும் நல்ல நீர் முழுவதும் இரத்தவாடையுடன் வரத் தொடங்கிற்று.*

**மதக்கரி மருப்புஇற மதம் புலரு மாலோ!**
**மடப்பிடி மருப்பு எழுமதம் பொழியு மாலோ!**
**கதிர்ச்சுடர் விளக்கு ஒளி கறுத்து எரியுமாலோ!**
**கால முகில் செங்குருதி கால வருமாலோ! 223**

## விளைவு? என்ன ஆகும்

*முதுபேய் தான் கண்ட சகுனங்களைக் காளியிடம் கூறிவிட்டு, இந்தச் சகுனங்களால் நிகழக்கூடியன யாவை? என்று கேட்டு நின்றது. காளி தேவி பதில் சொல்லத் தொடங்கினாள்.*

**எனா, உரை முடித்ததனை,**
**'என்கொல் விளைவு?' என்றே**
**வினா உரை தனக்கு எதிர்**
**விளம்பினள், அணங்கே 226**

*எனா- என்று, உரை-சொல், விளைவு - விளையும் நன்மை, விளம்பினள் - சொன்னாள், அணங்கு - காளி.*

*குறி - நிமித்தம், அழகு - நன்மை தரும், கணிதப் பேய் - சோதிடப் பேய், நனவு - விழிப்பில் கண்டவை.*

## பரணிப் போர் உண்டு!

*'பகை மன்னர்களுடைய படை வரிசையினை அழித்து வெற்றி கொண்ட முதற் குலோத்துங்க சோழனுடைய மதம் பொழியும் யானைகள், கால் விலங்குகளோடு கட்டுத்தறியில் போருக்குத் தயாராய் நிற்கின்றன.*

*அதனால் உறுதியாக ஒரு பரணிப் போர் உண்டு!' என்று சோதிடப் பேய்கள் என்னிடம் கூறியுள்ளன. அவை சொல்லியபடி நிச்சயமாக உங்களுக்கு இந்தப் பரணிப்போர் கிடைக்கும் என்று காளி பேய்களிடம் சொன்னாள்.*

**'நிருபர் அணிவென்ற அகளங்கள் மதயானை**
**நிகளங்களொடு நிற்பன; அதற்கு**
**ஒரு பரணி உண்டு' என உரைத்தன; உரைப்படி**
**உமக்கு இது கிடைக்கும் எனவே- 228**

*நிருபர் - பகை மன்னர், அணி - படை, யானையின் காலைக் கட்டும் சங்கிலி.*

## பசியை மறந்தன

*'பசிக் கொடுமையால் உண்டாக்கிய கூத்தை முற்றும் தவிர்த்து விடுங்கள்' என்று பேய்கள் ஒன்றோடு ஒன்று சொல்லிக்கொண்டு, மகிழ்ச்சி அடைந்தன. அவற்றினுடைய மெலிந்த விலா எலும்பு களெல்லாம் முறிந்துபோகுமளவுக்கு விழுந்து விழுந்து அடிக்கடி சிரித்தன. தங்களை வருத்திக்கொண்டிருந்த கொடிய பசியையும், அப்போது மறந்துவிட்டன!*

**'விலக்குக, விலக்குக! விளைத்தன!'**
**எனக்களி விளைத்தன. இளைத்தன விலா**
**அலக்குஉக அலக்குஉக அடிக்கடி சிரித்தன**
**அயர்த்தன பசித்த பசியே 230**

*விலக்குக - தவிர்க்க, விளைத்தன - விளைத்த கூத்தை, களி விளைத்தன - மகிழ்ச்சியடைந்தன, இளைத்தன - இளைத்தனவாகிய, அலக்கு - எலும்பு, உக - முறிந்துபோக, அயர்த்தன - மறந்தன.*

## வயிறு நிரம்பப் போதுமா?

*இவ்வாறு பேரிரைச்சலிட்டுக் கூத்தாடி மகிழ்ந்திருந்த பேய்க் கூட்டங்கள் காளியைப் பார்த்து, 'தேவி! கலிங்கப் போரில் கிடைக்கப் போகும் அந்த நிணக்கூழுணவை நாங்களெல்லாம் ஒன்றுசேர்ந்து இரைச்சலிட்டுக் குடித்தால் எங்களுடைய கூடுகள் போன்ற வயிறு நிரம்பிவிடுமோ?' என்று கேட்டன.*

**ஆடி இரைத்து எழு கணங்கள்,**
**'அணங்கே! இக் கலிங்கக் கூழ்**
**கூடி இரைத்து உண்டுழி, எம்**
**கூடு ஆரப் போதுமோ?' 231**

*இரைத்து - இரைந்து, இரைச்சலிட்டபடி, கணங்கள் - பேய்க் கூட்டங்கள், அணங்கு - தேவி, கூழ் - உணவு, உண்டுழி - உண்டால், ஆர - நிறைய,*

## ஒட்டிக்கு இரட்டி!

*உடனே காளி, "போதுமா? போதாதா?" என்று என் அருகிலிருந்து கூட்டம் போட்டுப் பேசாதீர்கள். இப்பொழுது நடைபெற இருக்கிற கலிங்கப் போரானது, முன்பு இலங்கையில் நடந்த இராம இராவணப் போரைவிட, ஒன்றுக்கு இரண்டு மடங்கு மிகுதியாகும் என்று கூறினாள்.*

**'போதும் போதாது,' எனவே**
**புடைப் படலம் இட வேண்டா;**
**ஓதம் சூழ் இலங்கைப் போர்க்கு!**
**ஒட்டிரட்டி கலிங்கப் போர்! 232**

*புடை - பக்கம், படலம் - கூட்டம், ஓதம் - கடல், ஒட்டிரட்டி - ஒன்றுக்கு இரண்டு மடங்கு.*

# 2. தமிழ்விடு தூது

- மதுரை சொக்கநாதர்

## 1. தமிழின் சிறப்பு (1 - 16)

### 1. 1. கடவுள் உறையும் கூடல் மாநகரம் (1 - 4)

1. சீர்கொண்ட கூடற் சிவராச தானிபுரந்து
ஏர்கொண்ட சங்கத் திருந்தோரும் - போர்கொண்டு

2. இசையுந் தமிழரசென் றேத்தெடுப்பத் திக்கு
விசையஞ் செலுத்திய மின்னும் - நசையுறவே

3. செய்யசிவ ஞானத் திரளேட்டில் ஓரேடு
கையி லெடுத்த கணபதியும் - மெய்யருளாற்

4. கூடல் புரந்தொருகாற் கூடற் புலவரெதிர்
பாடல் அறிவித்த படைவேளும் - வீடகலா

*கூடல் மாநகர், சிவராசதானி என்ற போற்றிப் புகழப்படும் மதுரையிலிருந்து அருள் பாலிப்பவர், தமிழ் வளர்த்த மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் புலவராய் இருந்து தமிழாய்ந்தவர் சோமசுந்தரக் கடவுள். தமிழுக்கு அரசி என்னும் பெரும் பெயருடன் எல்லாத் திசைகளிலும் தன் புகழை நாட்டியவள் எல்லோராலும் புகழ்ந்து வணங்கப்படும் மின்னல் போன்ற இடையை உடையவள், மீனாட்சி அம்மை.*

*சோமசுந்தரர் சிவாகமத்தை மீனாட்சி அம்மைக்குப் போதித்தபோது, அம்மையார் கவனமின்றிக் கேட்டுக்கொண்டிருக்க இறைவனுக்கு சினம் பொங்கியது. அப்போது, ஆகமச் சுவடியைச் சிவன் கடலில் எறிந்தார். கணபதி அவ்வேடுகளைச் சேகரித்தார். மதுரையை ஆளும்போது, உக்கிர குமாரபாண்டியன் என்னும் பெயரைப் பெற்றவர், பின்னர் உருத்திர சன்மனாகச் சங்கத்தில் அமர்ந்து பாடற் பொருள் உரைத்தவர், வேற்படையைக் கொண்டிருக்கும் முருகக் கடவுள்.*

## அரும்பொருள் விளக்கம்

*கூடல் - நான்மாடக் கூடல்; மதுரை; சிவராசதானி - மதுரை; திக்கு - திசை; விசையம் - செய்தி; சிவஞானத்திரள் - சிவாகமங்கள்.*

## 1. 2. நாயன்மார் நால்வர் (5 - 8)

5. மன்னுமூ வாண்டில் வடகலையுந் தென்கலையும்
அன்னைமுலைப் பாலி னறிந்தோறும் - முன்னரே

6. மூன்றுவிழி யார்முன் முதலையுண்ட பிள்ளையைப்பின்
ஈன்றுதரச் சொல்லி னிசைத்தோருந் - தோன்றயன்மால்

7. தேடிமுடி யாவடியைத் தேடாதே நல்லூரிற்
பாடி முடியாப் படைத்தோரும் - நாடிமுடி

8. மட்டோலைப் பூவனையார் வார்ந்தோலை சேர்த்தெழுதிப்
பட்டோலை கொள்ளப் பகர்ந்தோரும் - முட்டாதே

*இல்லத்தை விட்டு தானாகச் செல்ல முடியாத மூன்று வயதுப் பருவத்திலேயே வடகலைக்குத் தாயாகிய வடமொழி நூல்களையும் தென் கலைக்குத் தாயாகிய தமிழ்மொழி நூல்களையும் கற்றவர்; உமையம்மையின் பாலை உண்டு ஞானம் பெற்றவர், திருஞானசம்பந்தர்.*

*சில ஆண்டுகளுக்கு முன் நீர் நிலையில் விளையாடிய சிறுவனை முதலை ஒன்று விழுங்கியது. கொங்கு மண்டலம் அவிநாசி சென்ற போது இந்த நிகழ்ச்சியை அறிந்து, முக்கண்ணராகிய சிவபெருமானை வணங்கிப் பதிகம் பாடி, முதலை வாயிலிருந்து மீட்டுத் தந்தவர் சுந்தரமூர்த்தி நாயனார்.*

*நான்முகனாகிய பிரமன், சிவபெருமானின் முடியைக் காண விண்ணுக்கும் திருமால் பூமிக்குள்ளும் சென்று காணாது திகைத்தனர். திருநல்லூர்த் திருத்தலத்தில் உறங்கும்போது, இறைவனின் திருப்பாதம் முடியாகச் சூடப்பட்டவர் அப்பர் எனப் போற்றப்படும் திருநாவுக்கரசர்.*

*தாழம்பூ சொன்ன ஒரு பொய்யைக் காரணமாகக் கொண்டு அதனை முடியில் சூடிக்கொள்ளாதவர் சிவபெருமான். இருப்பினும் தாழை மடலில் அருளிய பாடல்களை ஆர்வத்தோடு எழுதிக் கொண்டார். இறைவன் எழுதிக்கொள்ள திருக்கோவையார் என்னும் நூலைப் பாடியவர் மாணிக்கவாசகர்.*

### அரும்பொருள் விளக்கம்

*அன்னை - உமையம்மை; அறிந்தோர் - திருஞானசம்பந்தர்; மூன்றுவிழியார் - சிவபெருமான்; இசைத்தோர் - சுந்தரமூர்த்தி நாயனார்; அயன் - பிரமன்; மால் - திருமால்; படைத்தோர் - திருநாவுக்கரசர்; பகர்ந்தோர் - மாணிக்கவாசகர்.*

## புராணக் கதை: மட்டோலைப் பூ அனையார் (8)

*சிவபெருமானின் முடியைக் காண படைப்புக் கடவுள் அன்னப் பறவையாக வடிவெடுத்து மேலே போகிறார். பல காலம் கடந்தும் முடியைக் காணமுடியவில்லை. அப்போது ஒரு தாழம்பூ கீழ்நோக்கி வருகிறது. அதனைச் சிவபெருமான் முடியிலிருந்து பிரமன் எடுத்து வருவதாகப் பொய் கூறச் சொன்னபடியே தாழம்பூ சொல்கிறது. அதனால் சிவபெருமான் தாழம்பூவைச் சூடுவதில்லை. பொய் சொன்னதற்காகப் பிரமன் ஐந்து தலையில் ஒன்றை இழந்து நான்முகன் ஆகிறார். பன்றி உருவெடுத்து, சிவபெருமானின் அடியைத் தேடிப் பாதாளம் சென்ற திருமால், காணமுடியாமல் தோல்வியுடன் மேலே வருகிறார்.*

## 1. 3. தொல்காப்பியரும் பிறரும் (9 - 12)

9. **ஒல்காப் பெருந்தமிழ் மூன் றோதியருண் மாமுனியும்**
**தொல்காப் பியமொழிந்த தொல்மொழியும் - மல்காச்சொற்**

10. **பாத்திரங்கொண்டே பதிபால் பாய்பசுவைப் பன்னிரண்டு**
**சூத்திரங்கொண்டே பிணித்த தூயோரும் - நேத்திரமாம்**

11. **தீதில் கவிதைத் திருமா ளிகைத் தேவர்**
**ஆதி முனிவ ரனைவோரும் - சாதியுறும்**

12. **தந்திரத்தி னாலொழியாச் சார்வினையைச் சாற்றுதிரு**
**மந்திரத்தி னாலொழித்த வல்லோரும் - செந்தமிழில்**

*குறைவற்ற பெருமைக்கு உரிய இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழைத் தந்தவர் அகத்திய முனிவர். எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் மூன்றையும் விளக்கும் தொல்காப்பியத்தைத் தந்தருளியவர் தொல்காப்பியர்.*

*செம்மையான பா அமைப்புடன் கூடியது சிவஞான போதம். பதியாகிய தலைவன்மீது பாயும் பசுவாகிய ஆன்மாவை இழுத்துக் கட்டுவதுபோல பன்னிரண்டு பாடல்களால் ஆகிய சைவ சித்தாந்த சாத்திர நூலை இயற்றியவர் மெய்கண்ட தேவர்.*

*சைவ சமய வளர்ச்சிக்குப் பன்னிரு திருமுறைகளில் ஒன்பதாம் திருமுறையை இயற்றியவர்கள், திருமாளிகைத் தேவர் முதலான ஒன்பது பேர். உயிர்களைச் சார்ந்துள்ள வினைகளை ஒழிப்பதற்காகப் பத்தாம் திருமுறையாகத் திருமந்திரத்தைத் தந்தவர் திருமூலர்.*

### அரும்பொருள் விளக்கம்

*மாமுனி - அகத்தியர்; தொல்முனி - தொல்காப்பியம்; பாத்திரம் - பாடலின் வன்மை*

### ஆதிமுனிவர் அனைவோரும் (11)

## ஒன்பதாம் திருமுறை

*1. திருமாளிகைத் தேவர்*
*2. சேந்தனார்*
*3. கருவூர்த் தேவர்*
*4. பூந்துருத்தி காடவநம்பி*
*5. கண்டராதித்தர்*
*6. வேனாட்டடிகள்*
*7. திருவாலியமுதனார்*
*8. புருடோத்தம நம்பி*
*9. சேதிராயர்*

*இது திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என இரு பகுதி. ஒன்பதின்மரும் பாடியவை திருவிசைப்பா. சேந்தனார் மட்டும் பாடியது திருப்பல்லாண்டு.*

## 1. 4. சங்கப் புலவர்களும் பிறரும் (13 - 14)

13. பொய்யடிமை யில்லாப் புலவரென்று நாவலர்சொல்
மெய்யடிமைச் சங்கத்து மேலோரும் - ஐயடிகள்

14. காடவருஞ் செஞ்சொற் கழறிற் றறிவாரும்
பாடவருந் தெய்வமொழிப் பாவலரும் - நாவருங்

*இயற்கை இறந்த நிகழ்ச்சிகளைப் புனைந்து உரைக்காமல் உள்ளதை உள்ளவாறே பெருமக்களால் போற்றப்படும் கபிலர், பரணர் போன்றோரும் ஐயடிகள் காடவர்கோனும் கழறிற்றறிவார் எனப்படும் சேரமான் பெருமாள் நாயனாரும் உலகத் திருமறை, தெய்வத் திருமறை எனப் போற்றப்படும் திருக்குறளை எழுதிய திருவள்ளுவரும் தமிழாகிய உன்னால் நிலைத்த புகழ்பெற்று வாழ்கின்றார்கள்.*

### அரும்பொருள் விளக்கம்

*சங்கம் - தமிழ்ச் சங்கம்; நாவலர் - கற்றறிந்தோர்.*

## 1. 5. தமிழ்த் தெய்வமே (15- 16)

15. கல்லாதார் சிங்கமெனக் கல்விகேள் விக்குரியர்
எல்லாரு நீயா யிருந்தமையாற் - சொல்லாரும்

16. என்னடிக ளேயுனைக்கண் டேத்தினிடர் தீருமென்றுன்
பொன்னடிக ளேபுகலாப் போற்றினேன் - பன்னியமென்

*கல்வி, கேள்வியிற் சிறந்த சான்றோர்கள் தம் அறிவாற்றலால் படிப்பறிவில்லாதவர்களுக்கு முன்னால் சிங்கமெனத் திகழ்வார்கள். அவர்கள் அவ்வாறு இருப்பதற்குக் காரணம் நீயாக இருப்பதேயாகும்.*

*அளவிட முடியாத புகழைக் கொண்டுள்ள தமிழ்த் தெய்வமே! தாயே! அடைக்கலம் ஆகி உன்னைத் துதித்துப்போற்றி வணங்கினால் என்னைப் பற்றியுள்ள இடர் போகுமென்று உன் திருவடிகளைப் பற்றுகின்றேன்.*

### அரும்பொருள் விளக்கம்

*ஆய் - ஆகி; புகலா - புகலாக.*

## 2. தமிழ் மொழி ( 17 - 35)

*தொன்மையான இலக்கிய, இலக்கணங்களையும் கவிதை மரபுகளையும் தமிழ்மொழி பெற்றுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக வாழ்க்கையை அகம், புறம் எனப் பகுத்து அவற்றுக்கு இலக்கணம் எழுதப்பட்டுள்ளது. வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்து விளக்கும் முறை தமிழில் மட்டுமே உள்ளது. தமிழ்விடு தூது என்னும் தூது இலக்கியத்தை எழுதியவர் பெயர் தெரியாவிட்டாலும் அவரின் புலமை நூல் முழுவதும் வெளிப்படுகின்றது.*

## 2.1. தமிழ்ச் செய்யுள் (17 - 19)

17. பஞ்சிபடா நூலே பலர்நெருடாப் பாவேகீண்
டெஞ்சியமுக் கேறா வியற்கலையே - விஞ்சுநிறந்

18. தோயாத செந்தமிழே சொல்லே ருழவரகந்
தீயாது சொல்விளையுஞ் செய்யுளே - வீயா

19. தொருகுலத்தும் வாரா துயிர்க்குயிராய் நின்றாய்
வருகுலமோ ரைந்தாயும் வந்தாய் - இருநிலத்துப்

*தமிழே! ஒழுங்குபடுத்தப்பட்ட பஞ்சிலிருந்து நூற்கப்படாத நூலைப் பெற்றிருக்கிறாய்! பிறரால் நெருடி முருக்கப் பெறாத பாவைப் பெற்றிருக்கிறாய். நைந்து போகாமலும் சிதைந்து போகாமலும் அழுக்கு ஏறாமலும் பரந்துபட்ட கலையாக இருக்கின்றாய்.*

*நிறம் மங்காமல் செழுமையுடன் விளங்கும் செந்தமிழே! சொல்லேர் உழவர்களின் சொல்லாற்றல் குறையாது விளையவைக்கும் செய்யுளாக இருக்கின்றாய். வேறு சில மொழிபோல் ஓர் இனத்திற்கு உரிமையாகாமல் எல்லோர்க்கும் உயிருக்கு உயிராய் விளங்குகின்றாய்!*

*பா வகைகளாகிய வெண்பா ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்னும் ஐந்தாகவும் விளங்குகின்றாய்.*

## அரும்பொருள் விளக்கம்

*பஞ்சி - பஞ்சு; கீண்டு - கிழிந்து; வியல் - அகலம்; சொல்லேர் , உழவர் - புலவர்; தீயாது - குறையாது.*

## 2.2. தமிழ் எழுத்துக்கள் சிறப்பு வகை (20 - 22)

**20. புண்ணியஞ்சே ருந்திப் புலத்தே வளிதரித்துக்**
**கண்ணிய வாக்காங் கருப்பமாய் - நண்ணித்**

**21. தலைமிடறு மூக்குரத்திற் சார்ந்திதழ்நாத் தந்தம்**
**உலைவிலா வண்ணத் துருவாய்த் - தலைதிரும்பி**

**22. ஏற்பமுதன் முப்பதெழுத் தாய்ச்சார் பிருநூற்று**
**நாற்ப தெழுத்தா நனிபிறந்தாய் - மேற்படவே**

*பரந்து அகன்ற இம்மண்ணில் நன்மை மிக்க உடம்பிலுள்ள உந்தி என்னும் பகுதியிலிருந்து மேல் எழும் காற்றால் வாக்கு என்னும் மொழி கருத்தரிக்கின்றது. அவ்வாக்குக்கான ஒலிகள் உந்தியில் தோன்றிய காற்று தலையிலுள்ள வாய், மிடறு எனப்படும் கண்டம், மூக்கு, உரம் எனப்படும் நெஞ்சிலுள்ள நுரையீரல் ஆகிய அறைகளில் தங்கி இதழ், நாக்கு, தந்தம் எனப்படும் பல், அண்ணம் என்னும் உறுப்புகளின் செயற்பாட்டால் பிறக்கின்றன.*

*அவ்வாறு பிறக்கும் பேச்சு ஒலிகளில் முதல் எழுத்துகள் முப்பதாகவும், சார்பெழுத்துக்கள் இருநூற்று நாற்பதாகவும் அன்னைத் தமிழே நீ இருக்கின்றாய்.*

## அரும்பொருள் விளக்கம்

*மிடறு - கண்டம்; உரம் - நெஞ்சு; தந்தம் - பல்.*

**பேச்சு உறுப்புகள் (21)**

| காற்று அறைகள் | ஒலிப்பான்கள் |
|---|---|
| *1. தலை (வாய்)* | *1. இதழ்* |
| *2. மிடறு* | *2. நாக்கு* |
| *3. மூக்கு* | *3. தந்தம் (பல்)* |
| *4. உரம் (நுரையீரல்)* | *4. அண்ணம்* |

**தமிழ் எழுத்துக்கள் (22)**

| முதல் எழுத்து - 30 | சார்பெழுத்து - 240 | | |
|---|---|---|---|
| | *1. உயிர்மெய்* | - | *216* |
| | *2. ஆய்தம்* | - | *1* |
| | *3. உயிரளபெடை* | - | *7* |
| | *4. ஒற்றளபெடை* | - | *11* |
| *1. உயிர் - 12* | *5. குற்றியலிகரம்* | - | *1* |
| *2. மெய் - 18* | *6. குற்றியலுகரம்* | - | *1* |
| | *7. ஐகாரக்குறுக்கம்* | - | *1* |
| | *8. ஔகாரக்குறுக்கம்* | - | *1* |
| | *9. மகரக் குறுக்கம்* | - | *1* |
| *30* | | | *240* |

*தமிழ்விடு தூதார் இருநூற்று நாற்பது சார்பெழுத்துக்கள் என்கின்றார். ஆய்தக் குறுக்கம் இல்லாமல்தான் இந்த எண்ணிக்கை வருகின்றது. பவணந்தி முனிவர் (நன்னூல் - 61) சார்பெழுத்தின் விரி முந்நூற்று அறுபத்து ஒன்பது என்கின்றார்.*

## 2.3. தமிழின் எழுத்திலக்கணமும் வளர்ப்பும் (23 - 27)

23. எண்முதலா கப்பகரு மீரா றெனும்பருவம்
மண்முதலோர் செய்து வளர்க்குநாள் - கண்மணியேற்

24. பள்ளிக்கூ டத்தசையாம் பற்பலதொட் டிற்கிடத்தித்
தள்ளிச் சிறார்கூடித் தாலாட்டி - உள்ளிலகு

25. மஞ்சட் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய் - மஞ்சரையே

26. பன்னியொரு பத்துப் பருவமிட்டு நீவளர்த்தாய்
உன்னை வளர்த்துவிட வொண்ணுமோ - முன்னே

*தமிழே! உன்னுள் இருக்கும் எழுத்திலக்கணத்தைத் தமிழ்ச் சான்றோர்கள் பன்னிரண்டாகப் பகுத்து வளர்க்கின்றார்கள். உன்னைக் கண்ணின் மணியைப் போல காக்கும் சிறுவர்கள், சுவடிகள் இருக்கும் பலகையில் வைத்துப் படித்துத் தாலாட்டி மகிழ்கின்றனர். சுவடியாக இருக்கும் உனக்கு (விழா நாட்களில் மஞ்சள் பூசுவர்; (படிப்பதற்காக) மையிட்டு முப்பாலையும் புகட்டி வளர்ப்பர்.*

*ஆர்வத்தோடு குழந்தைகளைப் பத்துப் பருவங்களாகப் பகுத்துக் கவனமோடு வளர்க்கின்றாய். மக்களை வளர்க்கும் உன்னை மற்றவர்களால் வளர்க்க முடியுமா? உன்னிடம் உள்ள இலக்கியம், இலக்கணம், கலைகள் என எல்லாவற்றையும் கற்பவர்களால் உனக்குச் கற்றுக் கொடுக்க முடியுமோ?*

### அரும்பொருள் விளக்கம்

*அசை - படிப்பதற்காகச் சுவடியை வைக்கும் பலகை; மஞ்சர் - மைந்தர்; முப்பால் - தாய்பால், ஆவின் பால், ஆட்டுப்பால்; அறம், பொருள், இன்பம்.*

### எழுத்திலக்கணப் பகுப்பு : எண் முதலாகப் பகரும் ஈராறு (23)

*1. எண், 2. பெயர், 3. முறை, 4. பிறப்பு, 5. உருவம், 6. மாத்திரை, 7. முதனிலை, 8. இடைநிலை, 9. ஈற்று நிலை, 10. போலி, 11. பதம், 12. புணர்ச்சி*

| பிள்ளைப்பருவம் | கன்னி ஒரு பத்துப் பருவம் (26) |
|---|---|
| *1. காப்பு* | *6. வருகை* |
| *2. செங்கீரை* | *7. அம்புலி* |
| *3. தால்* | *8. சிறுபறை* |
| *4. சப்பாணி* | *9. சிற்றில்* |
| *5. முத்தம்* | *10. சிறுதேர்* |

# 3. திருக்குற்றாலக் குறவஞ்சி

– திரிகூடராசப்பக்கவிராயர்

## குறத்தி மலைவளம் கூறுதல்

## எங்கள் மலையே!

*ஆண்குரங்குகள் பலவகையான பழங்களையும் பறித்துக்கொண்டு வந்து கொடுத்துத் தம் மந்திகளோடு கொஞ்சிக்கொண்டிருக்கும்; அப்போது, அம்மந்திகள் கீழே சிந்துகின்ற கனிகளுக்காக எதிர்பார்த்துத் தேவர்களும் கெஞ்சிக் கொண்டிருப்பார்கள். கானவராகிய வேடுவர்கள், தம் கண்களால் உறுத்து நோக்கி அந்த வானவர்களைக் கீழே வருமாறு அழைத்துக்கொண்டிருப்பார்கள். வானிலே இயங்கும் சித்தர்கள் பலரும் அடிக்கடி வந்துவந்து காயசித்தி மூலிகைகளை வளர்த்துக் கொண்டிருப்பார்கள். தேனருவியானது அலைகள் மேலே எழுப்பிச் சென்று வானின் வழியாக ஒழுகிக்கொண்டிருக்க, அதனால் செங்கதிரோனின் தேர்க் கால்களும் தேர்ச்சக்கரங்களும் வழுக்கி விழவும் நேரும். வளைந்த இளம்பிறையினைத் தம் சடையிலே முடிந்திருக்கும் அழகினையுடையவரான குற்றாலநாதரின் அத்தகைய வளமுடைய திரிகூட மலைதான் எங்களுடைய மலையுமாகும்.*

**இராகம் – புன்னாகவராளி** **தாளம் – ஆதி**

### கண்ணிகள்

வானரங்கள் கனிகொடுத்து மந்தியோடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பார்
கமனசித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பார்,
தேனருவித் திரைஎழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலை எங்கள் மலையே.

*முழக்கமிடும் அலைகளையுடைய நீர்வீழ்ச்சியானது தானும் கழங்காடுவது போல முத்துகளைச் சொரிந்துகொண்டிருக்கும். கானவர் மனைகளின் முற்றங்களிலெல்லாம் பரவிப் பெண்களின் சிற்றில்களையும்*

*அவ்வருவி நீரானது கொண்டு ஓடிக்கொண்டும் இருக்கும். மலைச் சாரல்களிலே கிழங்குகளைக் கிள்ளி எடுத்தும், தேன் இறால்களை எடுத்தும், மலைவளங்களைப் பாடியும் நாங்கள் நடனமாடுவோம். களிற்றி யானைகளின் கொம்புகளை ஒடித்துக் கொணர்ந்து, பூண்கட்டி, அதனாலே வறுத்த தினையினை உரலிலே இட்டு இடிப்போம். குரங்குகள் இனிய மாமரத்தின் வளமான பழங்களைப் பறித்துப் பறித்துப் பந்தாடுவது போல எறிந்து கொண்டிருக்கும். தேன் பெருகியிருக்கும் செண்பக மலர்களின் வாசமோ வானுலகிலும் சென்று பரவும். அருளோடு அடியவர்களும் வழங்கும் கொடைத்தன்மையினையுடைய மகராசர் திருக்குற்றால நாதர், குறும்பலாவினடியிலே கோவில் கொண்டிருக்கும் ஈசராகிய அக்குற்றாலநாதருடைய, வளம் பெருகிக் கொண்டிருக்கும் திரிகூட மலையே எங்கள் மலையுமாகும்.*

**முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்**
**முற்றம்எங்கும் பரந்து பெண்கள்**
**சிற்றிலைக் கொண்டோடும்**
**கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்**
**கிம்புரியின் கொம்பொடித்து**
**வெம்புதினை இடிப்போம்**
**செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்**
**தேனலர்சண் பகவாசம்**
**வானுலகில் வெடிக்கும்**
**வழங்குகொடை மகராசர் குறும்பலவில் ஈசர்**
**வளம் பெருகும் திரிகூட**
**மலை எங்கள் மலையே.**

*ஆடும் நாகப் பாம்புகள் நாகரத்தினங்கள் கோடி கோடியாகக் கிடந்து ஒளிபரப்பிக்கொண்டிருக்கும். வெண்ணிலாவைத் தாம் உண்ணும் வெண்சோற்றுக் கவளமென நினைத்து, யானைகள் அதனை வழிமறித்து நிற்கும். வேடுவர்கள் தினைப்பயிரினை விதைப்பதற்காகப் பண்படுத்தும் தினைப்புனங்கள்தோறும் அவர்கள் காடழித்து நெருப்பிடலால், வியப்பான அகில் முதலியவற்றின் நறுமணம் கமழ்ந்து கொண்டிருக்கும். காட்டின் எம்மருங்கும் வரையாடுகள் துள்ளிக் குதித்துப் பாய்ந்து ஓடிக் கொண்டிருக்கும். காகமும் அணுகாத உயர்ந்த மலையுச்சிகளிலே, மேகக்கூட்டங்கள் வந்து படிந்து கொண்டிருக்கும். நெடிய குறும்பலாவினடியிலே இருக்கும் ஈசர்; கயிலாச மலையினைத் தமக்கு வாசமாகக் கொண்டவர்; அவர் நிலையாகத் தங்கியிருக்கும் திரிகூட மலைதான் எங்கள் மலையுமாகும்.*

**ஆடுமர வீனுமணி கோடி வெயில் எறிக்கும்**
**அம்புலியைக் கவளமென்று தும்பிவழி மறிக்கும்**
**வேடுவர்கள் தினைவிரைக்கச் சாடுபுனந் தோறும்**
**விந்தை அகில் குங்குமமுஞ் சந்தனமும் நாறும்**
**காடுதொறும் ஓடிவரை ஆடுகுதி பாயும்**
**காகமணு காமலையில் மேகநிரை சாயும்**
**நீடுபல வீசர்கயி லாசகிரி வாசர்**
**நிலைதங்கும் திரிகூட மலை எங்கள் மலையே.**

*கயிலைமலை என்று போற்றப்படுகின்ற வடதிசையிலுள்ள மலைக்கு ஒப்பாகத் தென்திசையிலே விளங்கும் மலை இந்தத் திரிகூட மலையேயாகும். 'பொன்னிறமான மகா மேரு மலைபோலும்' என்று சொல்லும்படியாக உயர்ந்து நிற்கும் மலை, இந்த மலையேயாகும். சிவசயிலமலை என்று கூறப்படும் தென்திசையிலேயுள்ள மலைக்கு வடதிசையிலே இருக்கும் மலை இந்த மலையேயாகும். சகல மலைகளும் கொண்டிருக்கும் சிறப்புகள் எல்லாவற்றையும் தனக்குள்ளே அடக்கிக் கொண்டிருக்கும் மலையும், இந்த மலையேயாகும். வயிரக் கற்களும் மாணிக்கங்களும் விளைகின்ற மலையும் இந்த மலையேயாகும். வானத்துக் கதிரவன் மலைக் குகைகள்தோறும் நுழைந்து நுழைந்து ஒளிபரப்பும் மலையும் இந்த மலையேயாகும். திருப்பாற்கடலிலே பாம்பணைமேல் துயில் கொண்டிருப்பவரான திருமாலும் கண் விழித்துக் கொண்டவராகி, அகிலமெல்லாம் தேடித்திரிகின்ற மேன்மையாளராகிய திருக்குற்றால நாதரின், இந்தத் திரிகூட மலையே எங்கள்மலையுமாகும்.*

**கயிலை எனும் வடமலைக்குத் தெற்குமலை அம்மே**
**கனகமகா மேரு என நிற்குமலை அம்மே**
**கயிலமலை தென்மலைக்கு வடக்குமலை அம்மே**
**சகலமலை யுந்தனக்குள் அடக்குமலை அம்மே**
**வயிரமுடன் மாணிக்கம் விளையுமலை அம்மே**
**வானிரவி முழைகள் தொறும் நுழையுமலை அம்மே**
**துயிலுமவர் விழிப்பாகி அகிலமெங்கும் தேடும்**
**துங்கர்திரி கூடமலை எங்கள் மலை அம்மே.**

*கொல்லிமலை என்பது எனக்கு இளையவளாகப் பிறந்த என் தங்கையான செல்லி என்பவள் இருக்கும் மலையாகும். என் கொழுநனுக்குக் காணியாட்சியான மலை பழநிமலையாகும் கதிரவன் படிந்து செல்லும் விந்தியமலை என் தந்தைக்குரிய மலையாகும்.*

*இமயமலை என்னுடைய தமையனுக்குரிய மலையாகும். சொல்வதற்கு அருமையுடையதான சுவாமி மலை என்னுடைய மாமியின் மலையாகும். என் தோழியின் மலை நாஞ்சில் நாட்டிலுள்ள வேள்வி மலையாகும். மேகக் கூட்டங்கள் முழவுகளைப் போல இடி முழக்கினைச் செய்ய, அதற்கிணங்க மயிலினங்கள் ஆடிக்கொண்டிருக்கும் திரிகூட மலையே எங்கள் மலையாகும்.*

**கொல்லிமலை எனக்கிளைய செல்லிமலை அம்மே**
**கொழுநனுக்குக் காணிமலை பழநிமலை அம்மே**
**எல்லுலவும் விந்தைமலை எந்தைமலை அம்மே**
**இமயமலை என்னுடைய தமையன்மலை அம்மே**
**சொல்லரிய சாமிமலை மாமிமலை அம்மே**
**தோழிமலை நாஞ்சிநாட்டு வேள்விமலை அம்மே**
**செல்லினங்கள் முழவுகொட்ட மயிலினங்கள் ஆடும்**
**திரிகூட மலையெங்கள் செல்வமலை அம்மே!**

*(சொல்லரிய சொல்லால் போற்றுதற்கும் அருமையுடைய செல்லினங்கள் - மேகக் கூட்டங்கள். எல். சூரியன்.)*

*எங்கள் குலத்தைத் தவிர வேறொரு குலத்திலே பெண் கொடுக்கவும் மாட்டோம். பெண் கொள்ளவும் மாட்டோம். எங்கள் சாதியினரை ஒருவர் உறவு பிடித்துக் கொண்டனரென்றால், எந் நாளும் அந்த உறவை நாங்கள் கைவிடவும் மாட்டோம். அப்படிப்பட்ட குறவர் குலத்தவர். நாங்கள் அச்சங்கொண்டு நடுங்கும்படியாகத் தினைப்புனத்திலே வந்த பெரிய மிருகமாகிய யானையை விலக்கி, வேங்கைமரமாகி நின்று எமக்கு நிழல் செய்த அந்த நன்மையினை எண்ணியே அருளாளரான இலஞ்சி வேலவர்க்கு, எம்குலத்துப் பெண்களுள் ஒருத்தியை மனைவியாக நாங்கள் கொடுத்தோம். அதற்காக, எங்கள் தினத்திலிருந்த பிற மலைகளையெல்லாம் அவளுக்குச் சீதனமாகவும் கொடுத்தோம். ஞாயிறும் திங்களும் சுற்றி வருகின்ற மகாமேரு மலையினைத் துருவன் என்பவனுக்குக் கொடையாகக் கொடுத்து உதவினோம். அத்தகைய பெருமையுடைய எங்களுடைய மலையானது, பரமனாகிய குற்றாலநாதர்க்கு உரிய திரிகூட மலையாகிய பழைய மலையேயாகும்.*

**ஒருகுலத்தில் பெண்கள் கொடோம் ஒரு குலத்திற் கொள்ளோம்**
**உறவுபிடித் தாலும்விடோம் குறவர்குலம் நாங்கள்**
**வெருவிவருந் தினைப்புனத்திற் பெருமிருகம் விலக்கி**
**வேங்கையாய் வெயில் மறைத்த பாங்குதனைக் குறித்தே**

அருளிலஞ்சி வேலர்தமக்கு ஒரு பெண்ணைக் கொடுத்தோம்
ஆதினத்து மலைகளெல்லாம் சீதனமாகக் கொடுத்தோம்
பருதிமதி சூழ்மலையைத் துருவனுக்குக் கொடுத்தோம்
பரமர்திரி கூடமலை பழையமலை அம்மே.

*(ஒரு பெண் - ஒப்பற்ற பெண்ணாகிய வள்ளிநாயகி. ஆதினத்து மலை - ஆட்சியிலிருக்கும் மலைகள்.)*

## 4. முக்கூடற்பள்ளு

### குடிமை - பெருமை

### நகர்வளம்

### மூத்த பள்ளி

1. கொண்டல் கோபுரம் அண்டையிற் கூடும்
கொடிகள் வானம் படிதர மூடும்
கண்ட பேரண்டந் தண்டலை நாடும்
கனக முன்றில் அனம்விளை யாடும்
விண்ட பூமது வண்டலிட் டோடும்
வெயில்வெய் யோன்பொன் னெயில்வழிதேடும்
அண்டர் நாயகர் செண்டலங் காரர்
அழகர் முக்கூடல் ஊரெங்கள் ஊரே.

***(இ - ள்.)*** *மேகக்கூட்டங்கள் அந்நகர்க் கோபுரங்களின் பக்கத்தில் வந்து அடையும்; அங்குக் கட்டப்பெற்றுள்ள கொடிகள் அந்த மேகக் கூட்டங்கள் கீழே வந்து படியும்படி மேற்சென்று அசைந்து மூடும்; அங்குள்ள சோலைகள் மேல்நோக்கி வளர்ந்து தாம் மேலே கண்ட பேரண்டங்களாகிய மேலுலகத்தை அடைய விரும்பி மேலும் வளரும்; பொன்வண்ணமான முற்றங்களில் அன்னப் பறவைகள் சேவலும் பேடையுமாக விளையாடும்; இதழ் விரிந்த பூக்களிலிருந்து ஒழுகும் தேன், வெள்ளமாகிய பூந்தாதாகிய வண்டலினால் திரடு செய்து கொண்டு ஓடும்; வெயில் வீசுகின்ற கதிரவன் அங்கு உள்ள பொன் வண்ணமான கோட்டைகளில் அம்பு எய்ய அமைத்துள்ள துளை வழியே நுழைந்து போவதற்கு வழி தேடிக்கொண்டிருக்கும்; தேவர் களுக்கெல்லாந் தலைவரும், செண்டு என்ற படைக்கலக் கருவியைக் கைப்பிடித்த அழகருமாகிய முக்கூடலழகரின் திருமுக்கூடல் ஊர் எங்கள் ஊராகும்; (எ-று.)*

### இளைய பள்ளி

2. சங்கம் மேடைகள் எங்கும் உலாவும்
தரங்க மீன்பொன் னரங்கிடை தாவும்
திங்கள் சோலை மரங்களை ராவும்
தெருக்கள் தோறும் மருக்களைத் தூவும்

**பொங்க ரூடிளம் பைங்கிளி மேவும்**
**பூவை மாடப் புறாவினங் கூவும்**
**வங்க வாரிதி வெங்கடு உண்ட**
**மருதீசர் மருதூ ரெங்கள் ஊரே.**

***(இ - ள்.)*** *சங்குகள் மேடைகள் முதலிய எல்லா இடங்களிலும் உலாவித் திரியும்; நீரில் கொந்தளிக்கின்ற அலைகளிலுள்ள மீன்கள் அழகிய பொன்னரங்கங்களிலே தாவிப் பாயும்; நிலாவானது சோலை யிலுள்ள மரங்களை அராவிக்கொண்டு செல்லும்; அத்தகைய உயர்ந்த சோலைகள் தெருக்கள் தோறும் மருவாகிய பூந்தாதுகளைத் தூவும்; பொங்கர் எனப்படும் சோலைகளினூடே பச்சைக் கிளிகள் துணையுடன் அமர்ந்திருக்கும்; அதைக் கண்ட நாகணவாய்ப்புட்களும் மாடப் புறாக்களும், பிரிந்துசென்ற தங்கள் துணைப் பறவையைக் கூவும்; மரக்கலஞ் செல்லுங் கடலில் தோன்றிய வெப்பமான நஞ்சினையுண்டு திருமால் முதலியவர்களைக் காத்த மருதீசருடைய திருமருதூர் எங்கள் ஊராகும்; (எ-று.)*

## நகர்வளம்

## மூத்த பள்ளி

3. **கறைபட் டுள்ளது வெண்கலைத் திங்கள்**
**கடம்பட் டுள்ளது கம்பத்து வேழம்**
**சிறைபட் டுள்ளது விண்ணெழும் புள்ளு**
**திரிபட் டுள்ளது நெய்படுந் தீபம்**
**குறைபட் டுள்ளது கம்மியர் அம்மி**
**குழைபட் டுள்ளது வல்லியங் கொம்பு**
**மறைபட் டுள்ளது அரும்பெருட் செய்யுள்**
**வளமை ஆசூர் வடகரை நாடே.**

***(இ - ள்.)*** *வளப்பம் மிகுந்த ஆசூர் வடகரை நாட்டின் கண்ணே வெண்மையான கலையையுடைய மதிதான் கறையாகிய கருமையைத் தன்னிடத்தே பொருந்தப் பெற்றுள்ளது; அதுவன்றி மக்களின் ஒண்மையான கலை நிரம்பிய மதியில் கறையாகிய குற்றம் இல்லை; கம்பத்தில் பிணிக்கப்பட்டுள்ள யானைகள் தாம் கடமாகிய மதநீர் பொருந்தியுள்ளனவே யன்றி, அவ்வூரில் உள்ள யானை போன்ற மக்கள் கடம்பட்டு வாழ்தல் இல்லை; யானைதான் கடம்பட்டுக் கம்பத்தில் பிணிக்கப்பட்டுள்ளது; மக்கள் கடன்பட்டுக் கடன்கொடுக்க முடியாமல் பிணிக்கப்பட்டிருத்தல் இல்லை; விண்ணில் எழுந்து பறக்கும் பறவைகள்*

*தாம் சிறையாகிய சிறகின் இடையிற் பொருந்தியுள்ளனவேயன்றி, அந்த மண்ணில் வாழும் மக்கள் குற்றம் செய்து சிறையிடைப்படுதல் இல்லை; நெய் பொருந்திய தீபமே அங்கே திரிபொருந்தப் பெற்றுள்ளது; அதுவன்றி, அங்கு வாழும் அருளுடன் கூடிய அறிவுச்சுடர் உடையாரது அறிவு திரிபுபடுதல் இல்லை; அங்குள்ள மக்களும் திரிதல் ஆகிய அலைந்து படுதல் இல்லை; கல்லுளித் தச்சரால் அடிக்கப்பட்ட அம்மிதான் குறைபட்டுள்ளதேயன்றி அங்கு வாழும் தொழில் செய்வோர் யாதொரு குறைபாடும் உடையரல்லர்; (கம்மம்-தொழில், கருமம் என்பதின் திரிபு. தொழில்களிற் சிறந்த சிற்பவேலை முதலியன செய்வாரைக் கம்மியர் என்றல் இயல்பு.) கொடிகளும் அவற்றால் தழுவப்பட்ட அழகிய பூங் கொம்புகளுமே அங்கே குழையாகிய இலைகள் பொருந்தியுள்ளன; அவையன்றிக் கொடி போன்ற இடையுள்ள நங்கையர்களும் அவரால் முயங்கப்படும் பசிய கொழுகொம்பு போன்ற தலைவர்களும் துன்பத்தால் மனங்குழைந்து மெலிவது இல்லை; அங்கே செய்யுளாகிய பாடலின்கண் அருமையான பொருள்கள் மறைபட்டிருக்குமேயன்றிச் செய்யுள் எனப்படும் வயலினிடத்து வளைந்த அரிய பொருள்களைப் பிறருக்கு ஈயாமல் மறைத்து வைத்தல் இல்லை; (எ-று.)*

## இளைய பள்ளி

4. **காயக் கண்டது சூரிய காந்தி**
**கலங்கக் கண்டது வெண்தயிர்க் கண்டம்**
**மாயக் கண்டது நாழிகை வாரம்**
**மறுகக் கண்டது வான்சுழி வெள்ளம்**
**சாயக் கண்டது காய்குலைச் செந்நெல்**
**தனிப்பக் கண்டது தாபதர் உள்ளம்**
**தேயக் கண்டது உரைத்திடுஞ் சந்தனம்**
**சீவல மங்கைத் தென்கரை நாடே.**

***(இ - ள்.)*** *சீவல மங்கைத் தென்கரை நாட்டிலே சூரிய காந்தியாகிய வெயில்தான் காயக் காணப்பட்டது; அதுவன்றி ஞாயிறு போன்ற நடுநிலையாளர் காய்வது (சீற்றங் கொள்வது) இல்லை; வெண்மையான நிறமுள்ள தயிர்க்கண்டமாகிய தயிர்த் துண்டுகளே கலங்கக் காணப்பட்டது, அதுவன்றி நோய்க் கண்டங்களினாற் கலங்குபவர் காணப்பட்டிலர்; வாரமும் நாழிகையுமாகிய காலமென்று சொல்லப் படும் காலன்தான் மாயக் கண்டோமேயன்றி, ''ஒரு வாரத்திற்கு முன்புதான் மாய்ந்துபோனான்'' ஒரு நாழிகைக்கு முன்புதான் மாய்ந்து போனான்'*

*என்று கூறும்படி இடைவழித்தட்டில் மாய்பவர் இல்லை; சிறந்த நீர்ச்சுழி வெள்ளந்தான் சுழன்று சுழித்து மறுகிக்கொண்டு ஓடக் கண்டோமே யன்றிப் பொல்லாத படைச்சுழி வெள்ளம் திரண்டு வந்து பொருது மோதிச் சுழித்து மறுகுதல் காணப்படுதலில்லை; அங்கே காய்த்த நெற்குலைகளை யுடைய செந்நெற் கதிர்கள் தாம் சாயக் கண்டோமேயன்றிக் காயப்பட்டுக் குலை குலைந்து சாய்பவரைக் கண்டிலேம். அங்கே தவஞ் செய்வோரது உள்ளம்தான் பற்றற்றுத் தனித்திருப்பக் கண்டோமேயன்றி, காதல் அன்பிற் பிணைந்த அன்புள்ள இல்லறத்தாரது உள்ளம் பற்றற்றுப் பிரிந்திருப்பக் கண்டோமில்லை; உரைத்திடுகின்ற சந்தனம் தாம் தேயக் கண்டோமே யன்றித் தூதாகச் சென்று தூது உரைக்கின்ற அன்னம் போன்ற பெண்கள் நற்சொற் கேளாமல் தேய்ந்து மெலிவது காணேம்; (எ-று.)*

## மூத்த பள்ளி

**5. சோதி மாமணி வீதி நெருக்கும்**
**சுரும்பு பாடி இரும்பும் உருக்கும்**
**சாதி நால்வளம் நீதி பெருக்கும்**
**தடத்து வாளை குடத்தை நெருக்கும்**
**போதில் மேய்ந்திள மேதி செருக்கும்**
**புனமெல் லாந்தண் மலர்விண் டிருக்கும்**
**ஆதி நாதர் அனாதி யொருத்தர்**
**அழகர் முக்கூடல் ஊரெங்கள் ஊரே.**

***(இ - ள்.)*** *ஒளி பொருந்திய முத்து நீலமணி மாணிக்கம் முதலியன விற்கும் மணிக்கடைவீதி, கொள்வோர் கொடுப்போர் முதலியவரின் கூட்டத்தாலும் பொருள்களின் மிகுதியாலும் நெருக்கம் உடைத்தா யிருக்கும்; வண்டின் கூட்டங்கள் இன்னிசை பாடி இரும்பினையும் உருகச் செய்யும்; குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற ஐவகை நிலங்களுள் பாலை முல்லையினுங் குறிஞ்சியினும் அடங்குமாதலின் பாலை நீங்கலாக ஏனை நால்வகை நிலத்து மக்களினமும் நால்வகை வளத்தையும் நீதியையும் பெருகச் செய்யும்; நீர்த்தடாகத்திலுள்ள வாளைமீன்கள் வந்து மொய்த்துத் தண்ணீர் முகக்கும்போது குடத்தினை நெருக்கும்; மற்றும் அந்நீர்நிலையிலுள்ள நீர்ப்பூக்களை மேய்ந்து இளமையான எருமை மாடுகள் செருக்கடைந்திருக்கும்; அங்ஙனம் நீர்நிலத்திலேயன்றி மேட்டு நிலங்களெல்லாவற்றினும் குளிர்ந்த மலர் இதழ் விரித்துக் காட்சியளிக்கும்; இவ்வளவு வளம் நிரம்பியதும், ஆதி நாதரும் அனாதி ஒருத்தருமாகிய அழகர் வாழ்கின்ற திருமுக்கூடல் ஊர்தான் எங்கள் ஊர்; (எ-று.)*

# 5. நந்திக்கலம்பகம்

## 1. புயவகுப்பு

### (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

*(இப்பாடல் பாடாண்திணை என்னும் புறத்திணை வகையைச் சார்ந்தது. துறை: பாடாண் பாட்டு ஆகும். கலம்பக இலக்கியத்துள் இடம்பெறும் உறுப்புக்களில் ஒன்று புயம் என்பது ஆகும். புயம் என்றால் தோள் என்று பொருள். நூலினுள் இடம்பெறும் தலைவனின் புயத்தின் அழகையும் ஆற்றலையும் புகழ்ந்து கூறுவதாக இந்த உறுப்பு அமைகின்றது. முத்துவீரியம் என்னும் பாட்டியல் நூல் புயம் என்ற உறுப்பை வாகு, வகுப்பு என்கின்றது. இன்னொரு பாட்டியல் நூல் ஆகிய பிரபந்த தீபிகை இந்த உறுப்பைப் புய வகுப்பு என்கின்றது.)*

**“மறமத கரிதிசை நிறுவின மணிநகை அவர்மனம் நகுவன**
**விறலர சர்கள்மனம் நெகிழ்வன விரைமலர் களிமுலை பொருவன**
**திறலுடை யனதொடை புகழ்வன திகழொளி யனபுகழ் ததைவன**
**நறுமல ரணியணி முடியன நயவர நினதிரு புயமதே.”**

***(இ-ள்):*** *நயங்களுக்கு அடைக்கலமாக உள்ளவனே! உனது இரு தோள்களும் வீரத்தையும் மதத்தையும் கொண்ட யானைகளைத் திசைகள்தோறும் நிலைநிறுத்தியன. முத்துப்போன்ற பற்களையுடைய மகளிரது மனம் களிக்கும் தன்மையுடையன; வலிமையுடைய அரசர்களது மனம் தளரத்தக்கன; மணமுள்ள மலர்களும் மகளிர் கொங்கைகளும் பொருந்துவன; வலிமையுடைய பாமாலைகளால் புகழப்படுவன; விளங்குகின்ற ஒளியையுடையன; புகழ் நிறைவன; நல்ல மலரை அணிந்த அழகிய முடியையுடையன.*

*மறமதகரி - வீரமும் மதமும் கொண்ட யானை, மணிநகை - முத்துப் போன்ற பல், நகுவன - களிக்கும் தன்மையன, விறல் - வலிமை, நெகிழ்வன - தளர்வன, விரை - மணம், பொருவன - பொருந்துவன, தொடை - பாமாலை, ததைவன - நிறைவன, அணி - அழகு.*

***(வி-ம்):*** *மன்னன், தோள்வலிமையால் பகைவரை வென்று முடிசூடுவான். ஆகையால், தலையில் அணியும் முடியைத் தோளில் ஏற்றிக் கூறப்பட்டது. இந்தப் பாடலில், நந்திவர்மனின் தோள்களின்*

*ஆற்றல், வெற்றிச் சிறப்பு, அழகு, ஒளி, புகழ் என்பன கூறப்படுகின்றன. பெண்களுக்கு இன்பம் கொடுக்கும் தோள்கள். பகைவர்களுக்கு அச்சம் செய்யும் தோள்கள் என்று தோள்களின் மென்மையும் வலிமையும் புகழப்படுகின்றன. இவ்வாறு தோள்களின் பெருமை களைக் கூறும் உறுப்பாகத் தோள் வகுப்பு என்ற உறுப்பு அமைகின்றது.*

## 2. மறம்

## (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

*(மறம் என்றால் வீரம் என்று பொருள். புறத்துறைகளில் ஒன்று மகள் மறுத்து மொழிதல் என்ற துறை ஆகும். மறவர் குலத்தில் பிறந்தவள் ஒரு பெண். அவளைத் திருமணம் செய்ய வேண்டும் என்று ஒரு மன்னன் விரும்புகின்றான். எனவே, மறவர்களிடம் ஒரு தூதுவனை அனுப்புகிறான். தூதுவன் மறவர்களிடம் சென்று மன்னன் கூறிய செய்தியைக் கூறுகின்றான். அதனைக் கேட்ட மறவர்கள், அந்தத் தூதுவனிடம் தங்கள் வீரத்தைச் சிறப்பித்துக் கூறுகின்றனர். தூது அனுப்பிய மன்னனின் வீரத்தை இகழ்ந்து கூறுகின்றனர். இறுதியில் மன்னனுக்குத் தம் குலத்துப் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்க மறுக்கின்றனர். இதுவே மகள் மறுத்து மொழிதல் என்ற துறையின் பொருள். மறவர்கள், தம் மறப் பண்பை அதாவது வீரத்தைப் புகழ்ந்து கூறுவதே மறம் என்ற கலம்பக உறுப்பு ஆகும்.)*

**அம்பொன்று வில்லொடிதல் நாண் அறுதல்**
**நான்கிழவன் அசைந்தேன் என்றோ**
**வம்பொன்று குழலாளை மணம்பேசி**
**வரவிடுத்தார் மன்னர் தூதர்**
**செம்பொன்செய் மணிமாடத் தெள்ளாற்றில்**
**நந்திபதம் சேரார் ஆனைக்**
**கொம்பன்றோ நம்குடிலில் குறுங்காலும்**
**நெடுவளையும் குனிந்து பாரே.**

***(இ-ள்):*** *மன்னன் அனுப்பிய தூதனே! என் வில் ஒடிந்துள்ளது. அதன் பூட்டுக் கயிறு அறுந்து உள்ளது. நான் மூப்பு அடைந்து விட்டேன் என்று எண்ணியா உன் மன்னன் உன்னை இங்கு அனுப்பினான்? நறுமணம் மிக்க கூந்தலை உடையவள் என் மகள். இவளைத் திருமணம் செய்ய வேண்டி உன்னை அனுப்பி உள்ளான் உன் மன்னன். என்னுடைய இந்தச் சிறிய குடிசையைப் பார், இந்தக் குடிசையில் சிறிய தூண்களும் நீண்ட வளைச் சட்டங்களும் உள்ளன.*

*அவை எவற்றால் ஆக்கப்பட்டுள்ளன என்று தெரியுமா? நந்திவர்மன் ஆகிய என் மன்னன் தெள்ளாறு என்ற இடத்தில் போர் செய்தான். பகை மன்னர்களுடைய யானைகள் அப்போரில் இறந்தன. அந்த யானைகளின் கொம்புகளே இந்தத் தூண்களும் நெடிய வளைச் சட்டங்களும் ஆகும். நான் கூறுவதில் உனக்குச் சந்தேகம் இருக்கலாம். எனவே, இந்தக் குடிசையில் நீ குனிந்து பார்.*

*(ஒன்று - கொள்ளும், நாண் - அம்பின் பூட்டுக்கயிறு, அசைந்தேன் - தளர்ந்தேன், வம்பு - நறுமணம், குழலாள் - கூந்தலை உடைய பெண், மணம் - திருமணம், பதம் - அடிகள் (பாதங்கள்), குறுங்கால் - சிறிய தூண், நெடுவளை - நீண்ட வளைச்சட்டங்கள்)*

***(வி-ம்):*** *இப்பாடலில் நந்திவர்மனின் வீரமும் அவன் படை வீரர்களின் வீரமும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. குடிசைகளில் தூண்களாகவும் வளைச் சட்டங்களாகவும் பயன்படுத்தும் அளவுக்குப் பல யானைகள் இறந்துள்ளன என்பது தெளிவுறுத்தப்படுகிறது.*

## 3. ஊசல்

## (எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

*(ஊசல் என்பது கலம்பக உறுப்புக்களில் ஒன்றாகவும் அமைகின்றது. நந்திவர்ம மன்னனிடம் பெண்கள் காதல் கொள்கின்றனர். அவர்கள் எல்லோரும் ஒன்றுகூடினர். அப்பெண்களுள் ஒருத்தி நந்திவர்மனின் புகழை ஊசல் ஆடிக்கொண்டு பாடுவோம் என்று தோழிகளைப் பார்த்துக் கூறுவதாக இந்தப் பகுதி அமைகின்றது.)*

**ஓடரிக்கண் மடநல்லீர் ஆடாமோ ஊசல்**
**உத்தரியப் பட்டாட ஆடாமோ ஊசல்**
**ஆடகப்பூண் மின்னாட ஆடாமோ ஊசல்**
**அம்மென்மலர்க் குழல்சரிய ஆடாமோ ஊசல்**
**கூடலர்க்குத் தெள்ளாற்றில் விண்ணருளிச் செய்த**
**கோமுற்றப் படைநந்தி குவலயமார்த் தாண்டன்**
**காடவர்க்கு முன்தோன்றல் கைவேலைப் பாடிக்**
**காஞ்சிபுர மும்பாடி ஆடாமோ ஊசல்.**

***(இ-ள்):*** *செவ்வரி படர்ந்த கண்களையுடைய இளமையான மங்கை நல்லீர்! ஊசல் ஆடுவோமோ! மேலாடையான பட்டு அசையும்படி ஊசல் ஆடுவோமோ! ஆடகம் என்னும் பொன்னால் செய்த அணிகலன்கள் ஒளிவீச ஊசல் ஆடுவோமோ! அழகிய மென்மையான*

*மலரணிந்த கூந்தல் அவிழ்ந்து விழும்படி ஊசல் ஆடுவோமோ! தெள்ளாறு என்னும் இடத்தில் பகைவர்க்கு வானுலகத்தைத் தந்தருளிய அரசர்கள் தங்கிய முற்றத்தையும் படையையும் உடைய நந்திவர்ம மன்னனும் புகழால் உலகில் தோன்றிய சூரியன் போன்றவனும் காடவர்கோனுக்குத் தமையனுமாகிய நந்திவர்மனின் கையில் உள்ள வேலினைப் பாடி ஊசல் ஆடுவோமோ! அவனுடைய தலைநகரான காஞ்சிபுரத்தையும் பாடி ஊசல் ஆடுவோமோ!*

*அரி - செவ்வரி, உத்தரியம் - மேலாடை, ஆடி - அசைய, ஆடகம் - பொன்னின் வகையில் ஒன்றன் பெயர், பூண் - அணி, மின்னாட - ஒளிவீச, அம் மென்மலர்க்குழல் - அழகிய மென்மையான மலரணிந்த கூந்தல், சரிய - அவிழ்ந்து, கூடலர்க்கு - பகைவர்க்கு, கோ - அரசர், முற்றப்படை - முற்றத்தையும் படையையும், குவலயம் - உலகம், மார்த்தாண்டன் - சூரியன் தோன்றல் - நந்திவர்மன்.*

***(வி-ம்):*** *மகளிர் ஊஞ்சலாடும்போது நிகழும் நிகழ்ச்சிகள், தோன்றும் தோற்றம் ஆகியவை இதிலிருந்து விளங்குகின்றன. மகளிரின் உயர்ந்த ஆடை அணிகலன்கள், அலங்காரங்கள் ஆகியவை புலனாகின்றன. ஊசலாடும் ஆடலும் ஆடையணியும் அக்காலத்தின் மிகச் சிறந்த நாகரிக நிலையைக் காட்டுகின்றன. மகளிரின் விளையாட்டுக்களில் மன்னனின் வீரச் செயலும் இடம்பெற்றிருப்பது சிறப்பாக உள்ளது. இதில், 'காடவர்க்கு முன்தோன்றல்' என்ற வரியின் மூலம் நந்திவர்மனின் தம்பியின் பெயர் காடவர் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.*

*ஊசல் ஆடுதல் அல்லது ஊஞ்சல் ஆடுதல் என்பது பெண்கள் விளையாடும் விளையாட்டுகளில் ஒன்று ஆகும். நாட்டுப்புறப் பெண்கள் விளையாடும் ஊசல் என்பதைப் புலவர்கள் இலக்கியங் களில் அமைத்துப் பாடுவது மரபு. சிலப்பதிகாரத்திலும் ஊசல் வரி என்ற பகுதி உள்ளது. திருவாசகத்தில் மாணிக்கவாசகர் திருப்பொன் ஊசல் என்ற பகுதியை அமைத்துள்ளார்.*

## 4. காலம்

*தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லும்போது வேனில் காலத்தில் வந்து விடுவதாகக் கூறுகிறான். வேனில் காலம் வந்துவிட்டது. எப்படிப்பட்ட வேனில் காலம்! பருவ காலங்களில் மிகுந்த இன்பம் தருவது வேனில் காலம். இந்தக் காலத்தில் மரங்களில் உள்ள முதிர்ந்த இலைகள் உதிர்ந்து விடும். தளிர்கள் தோன்றும். செடி கொடிகளும் தளிர்க்கும் காலம். மலர்கள் மலர்ந்து மணம் வீசும் காலம். கணவனுடன் சேர்ந்து வாழும் பெண்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும் காலம். வண்டுகள்*

*மலர்களில் போய் அமர்ந்து பாடல் பாடும் காலம். குயில்கள் மாமரத்தின் இளந்தளிர்களைக் கௌவும் காலம். கணவனுடன் சேர்ந்து வாழும் பெண்களுக்குத் தென்றல் காற்று இன்பத்தை அளிக்கும் காலம். கணவனைப் பிரிந்து வாடும் பெண்களுக்குத் தென்றல் தீயைப்போன்று துன்பம் செய்யும் காலம். இளம் பெண்கள் முத்துகளைப் பொறுக்கி எடுத்து விளையாடும் காலம். கணவனைப் பிரிந்து வாடும் பெண்கள் மன்மதனைப் பழி கூறும் காலம். இத்தகைய வேனில் காலம் வந்து விட்டது. ஆனால், வேனில் காலத்தில் வந்து விடுவேன் என்று கூறிச் சென்ற தலைவர் வரவில்லை. நான் என்ன செய்வேன் என்று தலைவி வருந்துவதாகக் காட்டப்படுகிறது. வேனில் காலத்தைப் புலவர் நன்றாக வருணிப்பதை நாம் அறியமுடிகிறது.*

மலர்ச்சூழல் அமர்ந்தினிய வண்டார்க்கும் காலம்
வரிக்குயில்கள் மாவிலிளம் தளிர்கோதும் காலம்
சிலர்க்கெல்லாம் செழும்தென்றல் அமுதுஅளிக்கும் காலம்
தீவினையேற்கு அத்தென்றல் தீவீசும் காலம்
பலர்க்கெல்லாம் கோன்நந்தி பன்மாடக் கச்சிப்
பனிக்கண்ணார் பருமுத்தம் பார்த்தாடும் காலம்
அலர்க்கெல்லாம் ஐங்கணைவேள் அலர்தூற்றும் காலம்
அகன்றுபோ னவர்நம்மை அயந்துவிட்ட காலம்

- நந்திக் கலம்பகம் - 60

*(ஆர்க்கும் - ஆரவாரிக்கும்; மாவில் - மாமரத்தில்; கோதும் - கௌவும்; கோன் - மன்னன்; கச்சி - காஞ்சி நகரம்; பனி - குளிர்ந்த; கண்ணார் - கண்களை உடைய பெண்கள்; முத்தம் - முத்துகள்; ஆடும் - விளையாடும்; அலர் - மலர்; வேள் - மன்மதன்; அலர் - பழிச்சொல்; அயர்ந்து - மறந்து)*

## 4. செலவழுங்குதல்

## (என்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

*(இப்பாடல் பொருள்வயிற் பிரியத் தொடங்கிய தலைமகன் தன்நெஞ்சொடு கூறிச் செலவழுங்குதல் துறையில் அமைந்துள்ளது).*

“மயில்கண்டால் மயிலுக்கே வருந்தி யாங்கே
மான் கண்டால் மானுக்கே வாடி மாதர்
குயிற்கண்டால் குயிலுக்கே குழைதி யாகிற்
கொடுஞ்சுரம்போக் கொழிநெஞ்சே கூடாமன்னர்

**எயில் கொண்டான் மல்லையங்கோன் நந்திவேந்தன்**
**இகல்கொண்டார் இருங்கடம்பூர் விசும்புக்கேற்றி**
**அயில் கொண்டான் காவிரிநாட் டன்னப்பேடை**
**அதிசயிக்கும் நடையாளை அகல நூற்றேன்.''**

***(இ - ள்) :*** *நெஞ்சமே! பகை மன்னரின் மதிலைக் கைக் கொண்டவனும் அழகிய மாமல்லபுரத்திற்குத் தலைவனும் பெரிய கடம்பூர் மக்களைத் தேவருலகத்துக்குக் குடியேறச் செய்த வேலைக் கையில் கொண்டவனுமான நந்திவர்ம மன்னனின் காவிரி பாயும் நாட்டிலுள்ள பெண் அன்னமும் கண்டு அதிசயிக்கும் படியான நடையை உடைய தலைவியைப் பொருள் தேடும் பொருட்டுப் பிரிய எண்ணினேன். பொருள் தேடப் போகும் அவ்விடத்தில் மயிலைப் பார்த்தால் அதன் சாயல் இவளை ஒக்கம் என்று அதனைப் பார்த்து வருந்தியும் மானைக் கண்டால் அதன்கண் இவள் கண்ணை ஒக்கும் என்று அதனைக் கண்டு சோர்ந்தும் குயிலைக் கண்டால் அதன் குரல் இவள் குரலை ஒக்கும் என்று அதனை எண்ணியும் உருகுவாயானால், கொடிய காட்டு வழியில் செல்லுதலை விட்டுவிடுவாயாயக.*

*கூடா மன்னர் - பகைவர், பயில் - மதில், இகல் - பகை, விசும்பு - தேவருலகம், அயில் - வேல், பேடை - பெண், அகல - பிரிய, நூற்றேன் - எண்ணினேன், ஆங்கே - அவ்விடத்தில், குழைதல் - உருகுதல், கொடுஞ்சுரம் - கொடிய காடு, போக்கு - செல்லுதல் , ஒழி - ஒழிவாயாக.*

***(வி-ம்) :*** *பொருள் தேடச் செல்லும் வழியின் இடையில் அல்லது பொருள் தேடும் இடத்தில் மயில், குயில், மான் ஆகியவற்றைக் காண நேரும். கண்டால் அவை போன்ற தலைவியை நினைத்து வருந்த நேரும். வருந்துவதால் பொருள் தேட இயலாமல் போகும். ஆகையால் 'நெஞ்சே கொடுஞ்சுரம் போக்கு ஒழிதி' என்று தலைவன் நெஞ்சிற்குக் கூறினான்.*

*இப்பாடலில் 'இகல்கொண்டார் இருங்கடம்பூர் விசும்புக்கேற்றி' என்று நந்திவர்மன் கடம்பூரை அழித்து வென்றமை கூறப்பட்டது. மயில் மகளிரின் சாயலுக்கும், மான் மகளிரின் கண்ணுக்கும், குயிலின் குரல் மகளிரின் குரலுக்கும் ஒப்பாகும். இவற்றைக் கண்டால் தலைவனுக்குத் தலைவியின் நினைவு வருதலும் வருத்தம் தோன்றுதலும் இயல்பு.*

## அலகு : IV - இலக்கணம்

# 1. பெயர்ச் சொல் - பொதுவிலக்கணம்
# உயர்திணை, அஃறிணை, விரவுப்பெயர், ஆகுபெயர்

**1. தமிழ்ச் சொற்களின் வகைகளைக் குறிப்பிடுக.**

*தமிழ்ச்சொற்களை நான்காக வகைப்படுத்தியுள்ளனர்; அவை முறையே பெயர், வினை, இடை, உரி என்பனவாம். ஒரு பொருளின் பெயரைக் குறிப்பது பெயர்ச் சொல்லாகும். அப்பொருளின் செய்கையைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும். பெரும்பாலும் தனித்து வராது; ஒரு பெயரிடத்தோ அல்லது வினையிடத்தோ சேர்ந்துவரும் சொல் இடைச்சொல்லாகும். ஒன்றற்கு உரிமை பூண்டுவரும் சொல் உரிச்சொல் எனப்படும். இந்நான்கனுள் பெயர், வினை ஆகிய இரண்டுமே அடிப்படைச் சொற்களாம்.*

## 2. I. பெயர்ச் சொற்களின் இலக்கணம்

*ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறனுள் ஒன்றைக் குறித்தே பெயர்ச்சொல் வழங்கும். ஆதலின் பொருட்பெயர் : முருகன், மாடு, மரம், கல்; இடப்பெயர்: நாடு, நகரம், ஊர்; காலப்பெயர்: காலை, மாலை, நாள்; சினைப்பெயர்: கை, வாய், இலை, கிளை; குணப்பெயர்: கருமை, தீமை, நன்மை; தொழில்பெயர்: உண்ணல், உறங்கல், படித்தல், வருதல் எனப் பெயர்ச் சொல் அறுவகையாகப் பகுக்கப்படும்.*

## II. பெயர்ச் சொற்களின் சிறப்பிலக்கணம்

### அ. பெயர்ச்சொற்கள் வேற்றுமைகளை ஏற்று வரும்.

**எ.டு:**

*கண்ணனைத் தொழு;*

*கண்ணனுக்குத் தந்தேன்;*

*கண்ணனால் வாழ்ந்தேன்.*

### ஆ. எழுவாயாகத் தொழிற்படும்.

**எ.டு:**

*கண்ணன் வந்தான்.*

**இ. அடைகளை ஏற்கும்.**

**எ.டு:**

*அழகிய மாலதி*

**ஈ. உயர்திணை, அஃறிணை, விரவுத்திணை மூன்றற்கும் உரிமை உடையதாய் வரும்.**

**எ.டு:**

*சாத்தன் (வந்தான்), சாத்தி (வந்தாள்)*

*சாத்தன் (வந்தது)*

**உ. பெயர்ச் சொற்கள் காலம் காட்டுவதில்லை.**

**3. உயர்திணை, அஃறிணை:**

*பொருள்களை நம் முன்னோர் இரண்டு திணைகளாக வகுத்துள்ளனர். அவை உயர்திணை, அஃறிணை என்பனவாம். திணை என்பது இனம் அல்லது வகுப்பு எனப் பொருள்படும்.*

*உயர்ந்த குலமும், சிறந்த ஒழுக்கமும், பகுத்தறிவும் படைத்த இனப்பொருள்களை உயர்திணை எனக் கூறினர். உயிருள்ளவற்றுள் மக்கள், தேவர் இவர்களைக் குறிக்கும் சொற்கள் உயர்திணைச் சொற்கள்.*

*உயர்ந்த குலமும், சிறந்த ஒழுக்கமும், பகுத்தறிவும் இல்லாத உயிர் இல்லாப் பொருள்களையும் அஃறிணை எனக் கூறினர். பறவை, பசு, குதிரை முதலிய உயிருள்ள பொருள்களையும், கல், கட்டில் போன்ற உயிரில்லாத பொருள்களையும் குறிக்கும் சொற்கள் அஃறிணைச் சொற்கள் ஆகும்.*

**“மக்கள் தேவர் நரகர் உயர்திணை**
**மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை”**

**4. விரவுப் பெயர்கள் என்றால் என்ன? விளக்குக.**

*பெயர்களை உயர்திணைப் பெயர் என்றும், அஃறிணைப் பெயர் என்றும் தமிழிலக்கணங்கள் இரண்டு வகையாகப் பிரிக்கும். சில பெயர்கள் அஃறிணைக்கும் உயர்திணைக்கும் பொதுவாக இரண்டு திணையிலும் விரவி வரும். இப்படி இருதிணையிலும் விரவி வரும் பெயர்களை விரவுப் பெயர் என்பர். உயர்திணைக்கே உரிய பெயர் அஃறிணைப் பொருளையும் குறிக்கப் பயன்பட்டு, இருதிணையிலும் விரவி வருமாயின் அதனை உயர்திணை விரவுப்பெயர் என்பர். அஃறிணைக்கே உரிய பெயர் உயர்திணைப் பொருளையும் குறிக்கப் பயன்பட்டு, இருதிணையிலும் விரவி வருமாயின் அதனை அஃறிணை விரவுப் பெயர் என்பர்.*

**எ.டு:**

*சாந்தி வந்தாள், சாந்தி வந்தது.*

*கொற்றன் வந்தான், கொற்றன் வந்தது.*

*மணி வந்தான், மணி வந்தது.*

*யானை வந்தான், யானை வந்தது.*

## ஆகுபெயர்

*ஒரு பொருளின் இயற்பெயர் அதனை உணர்த்தாமல், அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்குத் தொன்றுதொட்டுப் பெயராகி வருவது ஆகுபெயர் எனப்படும்.*

**எடுத்துக்காட்டு:** *காளை வந்தான்.*

*இதில் உள்ள காளை என்னும் சொல் எருதினைச் சுட்டாமல் காளையைப் போன்ற வீரமிக்க ஆண்மகன் என்னும் பொருளைத் தருகிறது. ஆகுபெயர் பல வகைப்படும்.*

**“பொருள்முதல் ஆறோடு அளவைசொல் தானி**
**கருவி காரியம் கருத்தன் ஆதியுள்**
**ஒன்றன் பெயரான் அதற்கு இயை பிறிதைத்**
**தொன்முறை உரைப்பன ஆகுபெயரே”** **(நன்- 290)**

### 1. பொருளாகுபெயர்

**எடுத்துக்காட்டு:** *மாலதி மல்லிகை சூடினாள்.*

*இத்தொடரில் உள்ள ‘மல்லிகை’ என்னும் சொல் வேர், கொடி, இலை, பூ ஆகிய உறுப்புகள் அனைத்தும் சேர்ந்த முழுப் பொருளைக் குறிக்கிறது. ஆனால் அடுத்துள்ள ‘சூடினாள்’ என்னும் பயனிலையால் மல்லிகை என்னும் பெயர், முழுப் பொருளை உணர்த்தாது. அதன் ஓர் உறுப்பாகிய மலரை மட்டும் உணர்த்துகிறது.*

*இவ்வாறு ஒரு முழுப்பொருளின் பெயர், தன்னைச் சுட்டாமல், தன்னோடிணைந்த ஓர் உறுப்பை (சினை) மட்டும் குறிப்பது, பொருளாகுபெயர் எனப்படும் (பொருள் - முதற்பொருள் முழுப் பொருள்).*

### 2. இடவாகுபெயர்

**எடுத்துக்காட்டு:** *கூடைப் பந்தாட்டத்தில் மதுரை வென்றது.*

*இந்தச் சொற்றொடரில் உள்ள ‘மதுரை’ என்னும் இடப்பெயர், அப்பெயரால் அமைந்த ஊரைக் குறிப்பிடாது அவ்வூரில் இருந்து வந்து விளையாடிய பந்தாட்டக் குழுவினரை உணர்த்துகிறது. மதுரையைச் சேர்ந்த குழுவினர் வென்றனர் என்பது இதன் பொருள்.*

*இவ்வாறு ஓர் இடப்பெயர், அதனைக் குறிக்காமல் அவ்விடத்தோடு தொடர்புடைய வேறு பொருளுக்கு ஆகி வருவது இடவாகு பெயர் ஆகும்.*

### 3. காலவாகு பெயர்

***எடுத்துக்காட்டு:*** *மணிமொழி மார்கழி சூடினாள்.*

*‘மார்கழி’ என்னும் சொல் தமிழ்த் திங்களைக் குறிக்கும் காலப்பெயராகும். ஆனால், இச்சொல் ‘சூடினாள்’ என்னும் குறிப்பால் மார்கழித் திங்களில் மலர்ந்த மலரை (திசம்பர் எனப்படும் நீலக்கனகாம்பரம்) உணர்த்துகிறது.*

*இவ்வாறு காலப்பெயர், அக்காலத்தோடு தொடர்புடைய வேறு பொருளுக்கு ஆகி வருவதைக் காலவாகு பெயர் என்கிறோம்.*

### 4. சினையாகு பெயர்

***எடுத்துக்காட்டு:*** *ஆசிரியர், தலைக்கு ஒரு வினாத்தாள் தந்தார்.*

*‘தலை’ என்பது நம்முடலின் ஓர் உறுப்பு. ஆனால் இத்தொடரில் உள்ள ‘தலை’ என்னும் உறுப்பின் (சினையின்) பெயர், அடுத்துள்ள குறிப்புச் சொற்களால் மாணவனைக் குறிக்கிறது.*

*ஆசிரியர் ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரு வினாத்தாள் தந்தார் என்பது இத்தொடரின் பொருள்.*

*இவ்வாறு ஒரு சினையின் பெயர், அதனோடு தொடர்புடைய முழுப் பொருளுக்கு ஆகி வருவது சினையாகு பெயர் எனப்படும்.*

### 5. பண்பாகு பெயர்

***எடுத்துக்காட்டு:*** *இளங்கோ இனிப்பு வழங்கினான்.*

*‘இனிப்பு’ என்பது சுவையைக் குறித்த பண்புப் பெயராகும். இத்தொடரில் ‘இனிப்பு’ என்னும் பண்புப் பெயர், வழங்கினான் என்னும் குறிப்பால் இனிப்புச் சுவையுடைய பண்டத்தை (பொருளை) உணர்த்துகிறது.*

*இவ்வாறு பண்புப் பெயர், அப்பண்பைக் கொண்ட பொருளுக்கு ஆகி வருவது பண்பாகு பெயர் எனப்படும். இதனைக் குணவாகு பெயர் என்றும் வழங்குவர்.*

## 6. தொழிலாகு பெயர்

***எடுத்துக்காட்டு:*** *அழகன் அவியல் உண்டான்.*

*இத்தொடரில் உள்ள 'அவியல்' என்னும் 'சொல்' காய்கறிகளை அவித்தலாகிய தொழிலைக் குறிப்பதாகும். ஆனால், 'உண்டான்' என்னும் பயனிலையால் அவிக்கப்பட்ட காய்கறியினை உண்டான் என்னும் பொருளைத் தருகிறது.*

*இவ்வாறு தொழிற்பெயர், அத்தொழிலிருந்து பெறப்படும் பொருளுக்கு ஆகி வருவது தொழிலாகு பெயர் எனப்படும்.*

## 7. தானியாகு பெயர்

***எடுத்துக்காட்டு:*** *கழல் பணிந்தான்*

*கழல் அணியப்பெற்ற காலைப் பணிந்தான். கழல் என்பது அது அணியப் பெற்ற இடமாகிய காலுக்கு ஆகி வந்தது.*

*தானியின் பெயர் தொடர்புடைய தானத்திற்கு ஆகி வருவது தானியாகு பெயர் எனப்படும், தானி - தானத்தை உடையது. தானம் - இடம்.*

## 8. உவமை ஆகுபெயர்

***எடுத்துக்காட்டு:*** *காளை வந்தான்*

*காளை மாட்டைக் குறிக்கும் பெயராகிய காளை என்பது காளை மாடு போன்ற வலிமையும் வீரமும் வாய்ந்த ஆண்மகனுக்கு ஆகி வந்தது. காளை போன்றவன் வந்தான்.*

*உவமானப் பெயர், தொடர்புடைய உவமேயப் பொருளுக்கு ஆகி வருவது உவமை ஆகுபெயர் எனப்படும்.*

## 9. கருவியாகு பெயர்

***எடுத்துக்காட்டு:*** *குழல் கேட்டு மகிழ்ந்தான்*

*குழல் என்னும் இசைக் கருவியின் பெயர், அதனால் உண்டான இசைக்கு ஆகி வந்தது. குழல் ஓசைகேட்டு மகிழ்ந்தான்.*

*கருவியின் பெயர், அதனால் உண்டாகிய காரியப் பொருளுக்கு ஆகி வருவது கருவியாகுபெயர் எனப்படும்.*

### 10. காரியவாகுபெயர்

**எடுத்துக்காட்டு:** *களவியல் படித்தான்*

*களவியல் என்னும் (காரியத்தின்) பெயர் அதனை உணர்த்துதற்குக் கருவியாகிய நூலிற்கு ஆகி வந்தது - களவியல் என்னும் அகத்திணை இலக்கணத்தைப் படித்தான்.*

*காரியத்தின் பெயர், அது உண்டாவதற்குக் காரணமாக கருவிப் பொருளுக்கு ஆகி வருவது, காரியவாகு பெயர் எனப்படும் (இது கருவியாகு பெயர்க்கு எதிர்மறை ஆகும்).*

### 11. கருத்தா ஆகு பெயர்

**எடுத்துக்காட்டு:** *திருவள்ளுவர் கற்றாள்.*

*திருவள்ளுவர் என்னும் கருத்தாவின் பெயர், அவர் இயற்றிய திருக்குறளுக்கு ஆகி வருவது கருத்தா ஆகு பெயர் எனப்படும்.*

### 12. சொல்லாகுபெயர்

**எடுத்துக்காட்டு:** *பாட்டுக்கு உரை எழுதுக.*

*உரை என்னும் சொல்லின் பெயர், அதன் பொருளுக்கு ஆகி வந்தது.*

*சொல்லின் பெயர், தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது சொல்லாகு பெயர் எனப்படும்.*

### 13. எண்ணல் அளவை ஆகுபெயர்

**எடுத்துக்காட்டு:** *தலைக்கு ஒன்று கொடு.*

*ஒன்று என்னும் எண்ணுப் பெயர், தொடர்புடைய (பழம், இனிப்பு, புத்தகம், பேனா...) பொருளுக்கு ஆகி வருவது, எண்ணல் அளவை ஆகுபெயர் எனப்படும்.*

### 14. எடுத்தல் அளவை ஆகுபெயர்

**எடுத்துக்காட்டு:** *கிலோ என்ன விலை?*

*கிலோ என்னும் எடுத்தல் அளவைப் பெயர், (அரிசி, பருப்பு, சருக்கரை...) தொடர்புடைய பொருளுக்கு ஆகிவருவது எடுத்தல் அளவை ஆகுபெயர் எனப்படும்.*

### 15. முகத்தல் அளவை ஆகுபெயர்

**எடுத்துக்காட்டு:** *இரண்டு லிட்டர் கொடு.*

*லிட்டர் என்னும் முகத்தல் அளவைப் பெயர், (பால், மண்ணெண்ணெய்).*

*தொடர்புடைய பொருளுக்கு ஆகிவருவது முகத்தல் அளவை ஆகுபெயர் எனப்படும்.*

## 16. நீட்டல் அளவை ஆகுபெயர்

***எடுத்துக்காட்டு:*** *சட்டைக்கு இரண்டு மீட்டர் வேண்டும்.*

*மீட்டர் என்னும் நீட்டல் அளவைப் பெயர், (துணி)*

*தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது நீட்டல் அளவை ஆகுபெயர் எனப்படும்.*

## உ. வினைச்சொல் - பொதுவிலக்கணம்
## முற்று, பெயரெச்சம், வினையெச்சம்

### 1. வினைச் சொற்களின் இலக்கணம், வகைகள்:

*ஒன்றன் தொழிலை உணர்த்தி, காலத்தைக் காட்டி நிற்கும் சொல் 'வினைச்சொல்' எனப்படும். அது திணை, பால், எண், இடம் ஆகியவற்றை ஏற்கும்; வேற்றுமை உருபை ஏற்காது. இந்த வினைச் சொல் வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என மூன்று வகைப்படும்.*

***எ.டு:***

*செய்தான், செய்கிறான், செய்வான்.*

"அவைதாம்,
முற்றும் பெயர்வினை யெச்சமு மாகி
ஒன்றற் குரியவும் பொதுவும் ஆகும்."

### வினைமுற்று:

*தொழிலையும், காலத்தையும் உணர்த்தி திணை, பால், எண், இடம் காட்டும் விகுதியோடு முற்றுப்பெற்று நிற்கும் வினைச்சொல் வினைமுற்று எனப்படும். அது இரண்டு வகைப்படும். 1. தெரிநிலை வினைமுற்று, 2. குறிப்பு வினைமுற்று.*

***எ.டு:***

*செங்குட்டுவன் படையெடுத்தான்*

*மாடுகள் சென்றன.*

#### தெரிநிலை வினைமுற்று:

"செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய்பொரு ளாறும் தருவது வினையே"

*தொழிலைச் செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படு பொருள் ஆகிய ஆறனையும் உணர்த்தும்; தொழிலையும், காலத்தையும் வெளிப்படையாய் காட்டும். இவ்வாறு வரும் வினைமுற்று தெரிநிலை வினைமுற்றாகும்.*

***எ.டு:***

*ஓவியன் சித்திரம் தீட்டினான் - இச்சொற்றொடரில் தீட்டினான் என்பது வினைமுற்று.*

*ஓவியன் - செய்பவன்*

*தூரிகை, வண்ணம் - கருவி*

*சுவர் - நிலம்*

*தீட்டினான் - செயல் (இறந்தகாலம்)*

*சித்திரம் - செயப்படுபொருள்.*

## குறிப்பு வினைமுற்று:

*குறிப்பு வினைமுற்று பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறுவகைப் பெயர்களின் அடியாய் பிறக்கும். செய்பவனை மட்டும் வெளிப்படையாய் உணர்த்தி தொழிலையும், காலத்தையும் குறிப்பாய் காட்டும்.*

***எ.டு:***

| | |
|---|---|
| *பொன்னன் இவன்* | *- பொருள்* |
| *குற்றாலத்தான் இவன்* | *- இடம்* |
| *சித்திரையான் இவன்* | *- காலம்* |
| *செங்கண்ணன் இவன்* | *- சினை* |
| *நல்லன் இவன்* | *- குணம்* |
| *இன்சொல்லன் இவன்* | *- தொழில்* |

**"பொருள் முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்**
**வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே"** (நூற்பா. 321)

## பெயரெச்சம்:

**"செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டில்**
**காலமும் செயலும் தோன்றிப் பாலொடு**
**செய்வ தாதி அறுபொருட் பெயரும்**
**எஞ்ச நிற்பது பெயரெச்சமே."**

*திணை, பால் காட்டும் விகுதி குறைந்து, எச்ச வினையாய் நின்று பெயரைக்கொண்டு முடியும் வினைச்சொல் பெயரெச்சம் எனப்படும். பெயர் எஞ்ச நிற்பதால் பெயரெச்சம் எனப்பட்டது.*

***எ.டு:***

*நான் படித்த புத்தகம் - பெயர் தழுவி வருவது.*

*பார்த்த முகம் - இறந்தகாலம்*

*கற்கின்ற மாணவர் - நிகழ்காலம்*

*பாடும் பறவை - எதிர்காலம்*

*பாடாத பைங்கிளி - எதிர்மறை பெயரெச்சம்*

**வினையெச்சம்:**

> "தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை
> ஒழிய நிற்பது வினையெச்சமே"

*வினைச்சொல் திணை, பால் காட்டும் விகுதி குறைந்து, எச்சமாய் நின்று வினையைக் கொண்டு முடியுமானால் அது வினையெச்சம் எனப்படும்.*

***எ.டு:***

*படித்து முடித்துச் சென்றான்.*

*வந்து பார்த்தான் - இறந்தகாலம்*

*வர எழுகிறான் - நிகழ்காலம்*

*வந்தால் மகிழ்வான் - எதிர்காலம்*

# 3. வேற்றுமைகள்

ஒரு தொடரில் வரும் பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமையாகும். பெயர்ச்சொல்லின் இறுதியில் வரும் இடைச்சொல், வேற்றுமை உருபு எனப்படும். இவ்வேற்றுமை பற்றி நன்னூலார்,

**"ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்ப்பொருள்**
**வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை"**

என்கிறார்.

## வேற்றுமையின் பெயரும் முறையும்

**"பெயரே ஐ ஆல் கு இன் அது கண்**
**விளி என்றாகும் அவற்றின் பெயர் முறை"**

என வேற்றுமை எட்டு ஆகும் என்கிறது நன்னூல்.

## முதல் வேற்றுமை

முதல் வேற்றுமை 'பெயர் வேற்றுமை' எனப்படும். பெயர்ச்சொல் தொடரில் முதலாவதாக வருவதால் எழுவாய் வேற்றுமை' எனவும் அழைக்கப்படும். இவ்வேற்றுமைக்கு உருபு இல்லை. வினை, பெயர், வினாக்களைக் கொண்டு அவற்றின் வினை முதலாய் நிற்பதே அதன் பொருள்.

**எ.டு:**

சாத்தன் வந்தான், அவன் பெரியன் - வினைகொண்டு முடிந்தன.

சாத்தன் இவன், ஆ ஒன்று - பெயர் கொண்டு வந்தன.

அவன் யார்? ஆ யாது - வினாக் கொளநின்றன.

## இரண்டாம் வேற்றுமை

பெயர்ச் சொல்லின் பொருளைச் செயப்படுபொருளாக வேறுபடுத்தக் கூடிய இரண்டாம் வேற்றுமையின் உருபு 'ஐ' ஆகும்.

**"இரண்டாவதன் உருபு ஐயே அதன் பொருள்**
**ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்**
**ஒத்தல் உடைமை ஆதி யாகும்"**

என்கிறது நன்னூல்.

**சான்று:**

*குடத்தை வனைந்தான் - ஆக்கல் பொருள்*
*கோட்டையை இடித்தான் - அழித்தல் பொருள்*
*வீட்டை அடைந்தான் - அடைதல் பொருள்*
*வீட்டைத் துறந்தான் - நீத்தல் பொருள்*
*புலியை ஒத்தான் - ஒப்புடை பொருள்*
*பொன்னை உடையான் - உடைமை பொருள்*

## மூன்றாம் வேற்றுமை

**"மூன்றா வதன் உருபு ஆல் ஆன் ஒடு ஒடு**
**கருவி கருத்தா உடனிகழ்வு அதன் பொருள்"** *என்கிறது நன்னூல்.*

**சான்று:**

*வேலால் எறிந்தான் - ஆல் (கருவி)*
*ஆசிரியரோடு சென்றான் - ஓடு (உடனிகழ்ச்சி)*
*தலைவியொடு சென்றான் - ஒடு (உடனிகழ்ச்சி)*

*கருவியாவது முதற்கருவி, துணைக்கருவி என இருவகைப்படும், முதற்கருவியாவது செயப்படு பொருளோடு ஒற்றுமை உடையது சான்று மண்ணால் குடத்தை வனைந்தான் - மண் முதற்கருவி. அதைச் செய்வதற்கும் திரிகை துணைக்கருவி கருத்தா இயற்றுதல் கருத்தா. ஏவுதல் கருத்தா என இருவகைப்படும், சான்று தச்சனால் கோவில் கட்டப்பட்டது (இயற்றுதல் கருத்தா)*

*அரசனால் கோயில் கட்டப்பட்டது (ஏவுதல் கருத்தா)*

*உடனிகழ்ச்சிப் பொருள் தலைமைப் பொருளும் தலைமையில் பொருளும் என இருவகைப்படும்.*

**சான்று :**

*ஆசிரியனொடு மாணவன் வந்தான் - தலைமைப்பொருள் மாணாக்கனோடு ஆசிரியன் வந்தான் - மாணாக்கன் தலைமையில் பொருள்.*

## நான்காம் வேற்றுமை

**"நான்கா வதற்கு உருபு ஆகும் குவ்வே**
**கொடை பகை நேர்ச்சி தகவு அது வாதல்**
**பொருட்டு முறை ஆதியின் 'இதற்கு இது' எனல் பொருளே"**

*என்கிறது நன்னூல்.*

*'கு' என்பது நான்காம் வேற்றுமை உருபாகும், இவ்வுருபிற்கு அடுத்து வல்லினம் வந்தால் ஒற்று மிகும்.*

**சான்று:**

| | |
|---|---|
| *அவளுக்குக் கொடுத்தான்* | *- கொடைப் பொருள்* |
| *பரணருக்கு நண்பர் கபிலர்* | *- நட்புப் பொருள்* |
| *நட்புக்குப் பகை ஐயம்* | *- பகை* |
| *மனிதனுக்கு அழகு கல்வி* | *- தகவு* |
| *கட்டடத்துக்குச் செங்கல்* | *- அதுவாதல்* |
| *கூழுக்குப் பாடினாள் ஔவை* | *- பொருட்டு* |
| *சிவனுக்கு மகன் கந்தன்* | *- முறை* |

## ஐந்தாம் வேற்றுமை

**"ஐந்தா வதன் உருபு இல்லும் இன்னும்**
**நீங்கல் ஒப்பு எல்லை ஏதுப் பொருளே"**

*என்கிறது நன்னூல்.*

*(இல், இன் என்பன ஐந்தாம் வேற்றுமை உருபுகளாகும். இதன் பொருள் நீங்கல், ஒப்பு எல்லை, ஏது முதலான பல பொருள்களை உணர்த்தி வரும்).*

**சான்று:**

| | |
|---|---|
| *மலையின் வீழருவி* | *- நீக்கல் பொருள்* |
| *வீரத்தில் சிறந்தோர் தமிழர்* | *- ஒப்புப்பொருள்* |
| *பாரதத்தின் தென் எல்லை குமரி* | *- எல்லைப்பொருள்* |
| *கல்வியில் பெரியர் கம்பர்* | *- ஏதுப்பொருள்* |

## ஆறாம் வேற்றுமை

*அது, ஆது, அ என்பன ஆறாம் வேற்றுமையின் உருபுகளாகும். கிழமைப் பொருளில் வரும். இது தற்கிழமை, பிறிதின் கிழமை என இரு வகைப்படும். அது, ஆது ஒருமையிலும் அ - பன்மையிலும் வரும்.*

### தற்கிழமை

**எ.டு:**

*சாத்தனது கருமை - குணப் பொருள்*

*சாத்தனது வரவு - தொழிற் பொருள்*

| | |
|---|---|
| *சாத்தனது கை* | *- உறுப்புத்தற்கிழமை* |
| *மாந்தரது தொகுதி* | *- ஒன்றன் கூட்டத்தற்கிழமை* |
| *படைகளது தொகுதி* | *- பலவின் ஈட்டத்தற்கிழமை* |
| *நெல்லினது பொரி* | *- ஒன்று திரிந்து ஒன்றாய்தன் தற்கிழமை* |

**பிறிதின் கிழமை**

**எ.டு:**

| | |
|---|---|
| *முருகனது வேல்* | *- பொருள் பிறிதின் கிழமை* |
| *சாத்தனது வீடு* | *- இடப் பிறிதின் கிழமை* |
| *மாரனது வேனில்* | *- காலப் பிறிதின் கிழமை* |
| *எனாது கை, நினாது தலை* | *- ஆது உருபு* |
| *என கைகள், தன தாள்கள்* | *- அகர உருபு* |

## ஏழாம் வேற்றுமை

**"ஏழன் உருபு கண் ஆதியாகும்.**
**பொருள் முதல் ஆறும் ஓரிரு கிழமையின்**
**இடனாய் நிற்றல் இதன் பொருள் என்பர்"**

*என்கிறது நன்னூல்.*

*கண் என்னும் ஏழாம் வேற்றுமை உருபு பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்களும் தற்கிழமை, பிறிதின் கிழமை என்னும் பொருளில் வரும்.*

**சான்று:**

| | | |
|---|---|---|
| *மணியின் கண் இருக்கின்றது ஒளி* | - | *தற்கிழமை* |
| *பனையின் கண் வாழ்கின்றது அன்றில்* | - | *பிறிதின் கிழமை - பொருள் இடமாயிற்று* |
| *ஊரின் கண் உள்ளம் இல்லம்* | - | *தற்கிழமை* |
| *வானின்கண் பறக்கின்றது பருந்து* | - | *பிறிதின் கிழமை - இடம் இடமாயிற்று* |
| *நாளின் கண் உள்ளது நாழிகை* | - | *தற்கிழமை* |
| *வேனிற்கண் பாதிரி பூக்கும்* | - | *பிறிதின் கிழமை - காலம் இடமாயிற்று* |
| *கையின்கண் உள்ளது விரல்* | - | *தற்கிழமை* |

| | | |
|---|---|---|
| *கையின்கண் உள்ளது கடகம்* | - | *பிறிதின் கிழமை - சினை இடமாயிற்று* |
| *கறுப்பின் கண் மிக்குள்ளது அழகு* | - | *தற்கிழமை* |
| *இளமையின் கண் வாய்ந்தது செல்வம்* | - | *பிறிதின் கிழமை குணம் இடமாயிற்று.* |
| *ஆடற்கண் உள்ளது சதி* | - | *தற்கிழமை* |
| *ஆடற்கண் பாடப்பட்டது பாட்டு* | - | *பிறிதின் கிழமை தொழில் இடமாயிற்று* |

## எட்டாம் வேற்றுமை

> **"எட்டன் உருபே எய்துபெயர் ஈற்றின்**
> **திரிபு குன்றல் மிகுதல் இயல்பயல்**
> **திரிபும் ஆம் பொருள் படர்க்கை யோரைத்**
> **தன்முக மாகத் தானழைப் பதுவே"**

*என்கிறது நன்னூல்.*

*பெயர்ச் சொல்லின் பொருளை விளிப்பொருளாக வேறுபடுத்திக் காட்டும். எனவே, இது விளி வேற்றுமை எனப்படும்.*

**சான்று:**

| | | | | |
|---|---|---|---|---|
| *அன்னை* | - | *அன்னாய்* | - | *ஈறுதிரிதல்* |
| *அரசன்* | - | *அரச* | - | *ஈறுகுன்றல்* |
| *மகன்* | - | *மகனே* | - | *ஈறுமிகுதல்* |
| *தம்பி, தோழி* | - | *இயல்பாதல்* | | |
| *மக்கள்* | - | *மக்காள்* | - | *ஈற்று அயல்திரிதல்* |
| *அப்பன்* | - | *அப்பா* | - | *ஈறுகுன்றி, ஈற்றயல்திரிதல்* |
| *அண்ணன்* | - | *அண்ணாவோ* | - | *ஈறுகுன்றி ஈற்றயல் திரிந்து ஈறுமிகுதல்* |

# 4. வினா, விடை வகைகள்

*தாம் எதிர்பார்க்கும் கருத்தைப் பெறுவதற்கு ஒருவரிடம் எவ்வாறு வினவ வேண்டும் என்பதை விளக்குவது வினா. வினா ஆறு வகைப் படும். அவை,*

1. *அறிவினா*
2. *அறியாவினா*
3. *ஐயவினா*
4. *கொளல்வினா*
5. *கொடைவினா*
6. *ஏவல் வினா என்பனவாகும்.*

**அறிவறி யாமை ஐயுறல் கொளல்கொடை**
**ஏவல் தரும்வினா ஆறும் இழுக்கார்** **(நன்னூல் - 385)**

## அறிவினா

*விடையை நன்கு அறிந்த ஒருவர் மற்றவர்க்கு அந்த விடை தெரிந்திருக்கிறதா என்பதைக் கண்டறிய வினவும் வினா அறிவினா எனப்படும்.*

***எ.டு:*** *திருக்குறளை எழுதியவர் யார்?*

*என ஆசிரியர் மாணவரிடம் கேட்பது இத்தகைய வினாவாகும். திருக்குறளை எழுதியவர் திருவள்ளுவர் என ஆசிரியர் விடையை அறிந்திருந்தும் மாணவர் அதனை அறிந்திருக்கின்றனரா என்பதைக் கண்டறிய வினவுவதால் இதனை அறிவினா என்பர்.*

## அறியாவினா

*தெரியாத ஒரு கருத்தைத் தெரிந்துகொள்வதற்காக அக்கருத்தை நன்கு அறிந்த ஒருவரிடம் வினவி அறிதல் அறியாவினா எனப்படும்.*

***எ.டு:*** *திருக்குறளை எழுதியவர் யார்?*

*என மாணவர் ஆசிரியரிடம் கேட்பது அறியாவினா எனப்படும். மாணவர் இவ்வினாவிற்கான விடை தமக்குத் தெரியாத நிலையில் அதன் விடையை அறிவதற்காக ஆசிரியரிடம் வினவி அறிவது அறியாவினா ஆகும்.*

## ஐயவினா

*இதுவா? அதுவா? எனத் தெளிய முடியாத நிலையில் ஒரு பொருளை ஐயுற்று வினவும் வினா ஐயவினா எனப்படும்.*

**எ.டு:** *அங்கே கிடப்பது பாம்பா? கயிறா?*

*இவ்வெடுத்துக்காட்டில், கிடப்பது ஒரு பொருள் எனத் தெரிகிறது. ஆனால் அது பாம்பு போலவும் தெரிகிறது. கயிறு போலவும் தெரிகிறது. இவ்வாறு இரண்டில் எது எனத் தெளிவு பெற முடியாத நிலையில் அடுத்தவரிடம் தமக்கு ஏற்பட்ட ஐயத்தைத் தீர்த்துக்கொள்ள வினவப்படும் வினா ஐயவினா எனப்படும்.*

## கொளல்வினா

*ஒரு பொருளைப் பிறரிடம் இருந்து பெறுவதற்காக வினவப்படும் வினா கொளல்வினா எனப்படும்.*

**எ.டு:** *துவரம் பருப்பு உள்ளதா?*

*என ஒருவர் கடைக்காரரிடம் வினவுவதன் காரணம், அப்பருப்பை வாங்க வேண்டும் என்பதே ஆகும். இவ்வாறு ஒரு பொருளைக் கொள்வதற்காக வினவப்படும் வினா கொளல்வினா எனப்படும்.*

## கொடைவினா

*பிறருக்குக் கொடுப்பதற்காக ஒருவர் மற்றவரிடம் வினவுவது கொடை வினா எனப்படும்.*

**எ.டு:** *நண்பா சாப்பிடுகிறாயா?*

*என ஒருவர் தன் நண்பனிடம் வினவுவதன் நோக்கம், அவர்க்கு உணவு அளிப்பதே ஆகும். இவ்வாறு கொடுக்கும் நோக்கத்தோடு வினவப்படும் வினா கொடைவினா எனப்படும்.*

## ஏவல்வினா

*ஒருவர் ஒரு செயலை மற்றவரைச் செய்விக்க வேண்டும் என்பதற்காக வினவுவது ஏவல்வினா எனப்படும்.*

**எ.டு:** *எழிலா பள்ளிக்குப் போகிறாயா?*

*எனத் தந்தை தன் மகனை வினவுவது ஏவல்வினா ஆகும். இவ்வினாவின் நோக்கம், தன் மகன் பள்ளிக்குப் போகிறானா என்பதை அறிவதற்காக வினவுவது அன்று. பள்ளிக்கு மகன் போக வேண்டும் என்பதே அவ்வினா வினவப்பட்டதன் நோக்கமாகும். எனவே இத்தகைய வினா ஏவல்வினா எனப்படும்.*

## விடை வகைகள்

*வினவியதற்கு மறுமொழி கூறுதல் விடை ஆகும். அது செவ்வன் இறை, இறை பயப்பது என இரு வகைப்படும், செவ்வன் இறை என்பது நேராக விடை தருவது, இறை பயப்பது என்பது விடையைக் குறிப்பால் தருவது ஆகும். இதை,*

**"சுட்டு மறை நேர் ஏவல் வினா எதிர்வினாதல்**
**உற்றது உரைத்தல் உறுவதுகூறல்**
**இனமொழி எனும் எண் இறையுள் இறுதி**
**நிலவிய ஐந்தும் அப் பொருண்மையின் நேர்ப"**

*என இந்நூற்பா விளக்குகிறது. சுட்டு, மறை, நேர் எனும் மூன்றும் வெளிப்படையாக விடையைக் கூறுவது. எனவே, இது செவ்வன் இறை எனப்படும். ஏவல், வினாஎதிர் வினாதல், உற்றது உரைத்தல் உறுவது கூறல், இனமொழி எனும் ஐந்தும் எதிர்மறைப் பொருள் தரும். குறிப்பாக விடை தருவது இறை பயப்பது எனப்படும்.*

### 1. சுட்டுவிடை

*வினவும் வினாவிற்கு சுட்டி விடையளிப்பது சுட்டுவிடை ஆகும்.*

**எ.டு:**

*தென்காசிக்கு வழியாது? எனும் வினாவிற்கு 'இது' என்பது விடையாயின் சுட்டு விடை ஆகும்.*

### 2. மறைவிடை

*வினவும் வினாவிற்கு எதிர்மறைப் பொருளில் விடை தருவது மறைவிடை ஆகும்.*

**எ.டு:**

*நீ செல்வாயா? எனும் வினாவிற்குச் 'செல்லமாட்டேன்' என்பது மறைவிடை.*

### 3. நேர்விடை

*வினவும் வினாவிற்கு உடன்பாட்டுப் பொருளில் விடையளித்தால் நேர்விடை ஆகும்.*

**எ.டு:**

*நீ நாளை பள்ளி செல்வாயா? என்ற வினாவிற்கு 'செல்வேன்' என்பது நேர் விடை*

## 4. ஏவல் விடை

*வினவப்படும் வினாவிற்கு வினவியவரையே ஏவுவது ஏவல் விடை எனப்படும்.*

**எ.டு:**

*நீ கடைக்குச் செல்வாயா? எனும் வினாவிற்கு 'நீயே செல்' என்பது ஏவல் விடை.*

## 5. வினா எதிர் வினாதல் விடை

*வினவும் வினாவிற்கு விடையாக வினாவையே கூறுவது வினா எதிர் வினாதல் எனப்படும்.*

**எ.டு:**

*நீ படித்தாயா? என்ற வினாவிற்கு 'படிக்காமல் இருப்பேனா?' என்பது வினா எதிர் வினாதல் விடை.*

## 6. உற்றது உரைத்தல் விடை

*வினவும் வினாவிற்குத் தனக்கு உற்றதை விடையாகக் கூறுவது உற்றது உரைத்தல் என்னும் விடையாகும்.*

**எ.டு:**

*நீ கடைக்குச் செல்வாயா? எனும் வினாவிற்கு 'கால் வலிக்கிறது' என்று தனக்கு நேர்ந்ததைக் கூறுவதால் உற்றது உரைத்தல் விடை.*

## 7. உறுவது கூறல் விடை

*வினவும் வினாவிற்குத் தனக்கு நிகழப்போவதை விடையாகக் கூறுவது உறுவது கூறல் என்னும் விடையாகும்.*

**எ.டு:**

*நீ கடைக்குச் செல்வாயா? என்பதற்கு 'கால்வலிக்கும்' என்று கூறுவது உறுவது கூறல் விடை*

## 8. இனமொழி விடை

*வினவும் வினாவிற்கு இனமான வேறொன்றை விடையாகக் கூறுவது இனமொழி விடை ஆகும்.*

**எ.டு:**

*நீ பாடுவாயா? எனும் வினாவிற்கு, 'நான் ஆடுவேன்' என்று பாடலுக்கு இனமான ஆடலைக் கூறுவதால் இனமொழி விடையாகும்.*

# 5. மொழிபெயர்ப்புச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | abbot | - | மடாதிபதி |
| 2. | abdomen | - | அடிவயிறு |
| 3. | access | - | வழி |
| 4. | aerography | - | வாயு மண்டல விவரக் கலை |
| 5. | annoy | - | தொந்தரவு |
| 6. | bang | - | பலத்த அடி |
| 7. | bile | - | பித்த நீர் |
| 8. | bond | - | பந்தம் |
| 9. | brat | - | குழந்தை |
| 10. | buffoon | - | விகடகவி |
| 11. | catarrh | - | ஜலதோசம் |
| 12. | cede | - | ஒப்புக்கொள் |
| 13. | charm | - | மந்திரம் |
| 14. | civil | - | சமூகம் |
| 15. | coffer | - | கருவூலப்பெட்டி |
| 16. | decorum | - | நல்லொழுக்கம் |
| 17. | depot | - | பண்டகசாலை |
| 18. | doom | - | விதி |
| 19. | dweller | - | வசிப்பவர் |
| 20. | dynasty | - | ராஜவம்சம் |
| 21. | effort | - | பிரயத்தனம் |
| 22. | elusion | - | தவிர்த்தல் |
| 23. | era | - | சகாப்தம் |
| 24. | ewe | - | பெண் ஆடு |
| 25. | eye wash | - | கண்துடைப்பு |
| 26. | Fairness | - | நேர்மை |
| 27. | fiction | - | கட்டுக்கதை |

| | | |
|---|---|---|
| *28.* fondle | - | சீராட்டு |
| *29.* fulfil | - | நிறைவேற்று |
| *30.* fuss | - | சந்தடி |
| *31.* genius | - | அதிபுத்திசாலி |
| *32.* go-cart | - | நடைவண்டி |
| *33.* grace | - | மதிப்பளி |
| *34.* greenroom | - | தங்கும் அறை |
| *35.* gyve | - | விலங்கு |
| *36.* handicraft | - | கைத்தொழில் |
| *37.* headline | - | தலையங்கம் |
| *38.* hinder | - | தடைசெய் |
| *39.* honour | - | புகழ் |
| *40.* humility | - | பணிவு |
| *41.* illusion | - | பொய்த்தோற்றம் |
| *42.* idol | - | விக்கிரகம் (அ) சிலை வடிவம் |
| *43.* intent | - | உள்நோக்கம் |
| *44.* isolation | - | தனிமை |
| *45.* ivory | - | தந்தம் |
| *46.* Jeer | - | கேலி செய் |
| *47.* jubilation | - | பெருமகிழ்ச்சி |
| *48.* Jungle | - | புதர்க்காடு |
| *49.* Juvenile | - | இளைஞர் |
| *50.* Joy | - | உல்லாசம் |
| *51.* kingdom | - | ராஜ்யம் |
| *52.* knoll | - | சிறுகுன்று |
| *53.* knack | - | சாமர்த்தியம் |
| *54.* kin | - | உறவினர் |
| *55.* knout | - | சாட்டை |
| *56.* Ladle | - | அகப்பை |
| *57.* lever | - | நெம்புகோல் |
| *58.* lexicon | - | அகராதி |

| | | |
|---|---|---|
| *59.* limit | - | எல்லை |
| *60.* limestone | - | சுண்ணாம்புக்கல் |
| *61.* marsh | - | சதுப்புநிலம் |
| *62.* medley | - | குழப்பம் |
| *63.* mine | - | சுரங்கம் |
| *64.* muse | - | ஆலோசனை செய் |
| *65.* myth | - | புராணக்கதை |
| *66.* nab | - | சிறுதுயில் |
| *67.* navy | - | கப்பற்படை |
| *68.* nylon | - | செயற்கைப் பட்டு |
| *69.* oddity | - | புதுமை |
| *70.* omen | - | நிமித்தம் |
| *71.* out cry | - | கூக்குரல் |
| *72.* peak | - | சிகரம் |
| *73.* pile | - | குவியல் |
| *74.* perfume | - | வாசனைப் பொருள் |
| *75.* phial | - | சிறுபுட்டி |
| *76.* placard | - | விளம்பர அட்டை |
| *77.* quisling | - | தேசத்துரோகி |
| *78.* quiver | - | அம்புக்கூடு |
| *79.* quality | - | தகுதிபெறு |
| *80.* reparation | - | நஷ்ட ஈடு |
| *81.* rig | - | பாய்மரம் |
| *82.* recdie | - | வசி |
| *83.* riot | - | கலவரம் |
| *84.* ryot | - | உழவன் |
| *85.* saltern | - | உப்பளம் |
| *86.* skill | - | திறமை |
| *87.* sow | - | விதை |
| *88.* throne | - | சிம்மாசனம் |
| *89.* Trend | - | நோக்கம் |

| | | |
|---|---|---|
| *90.* typhoon | - | சூறாவளி |
| *91.* ultimate | - | மிகச்சிறப்பு |
| *92.* unify | - | ஒன்றுபடுத்து |
| *93.* universe | - | பிரபஞ்சம் |
| *94.* valley | - | பள்ளத்தாக்கு |
| *95.* venture | - | துணிந்துசெய் |
| *96.* vine | - | திராட்சைக் கொடி |
| *97.* wager | - | பந்தயம் |
| *98.* whip | - | சாட்டையால் அடி |
| *99.* wisdom | - | மெய்யறிவு |
| *100.* yardstick | - | அளவுகோல் |
| *101.* yield | - | விளைச்சல் |
| *102.* yard | - | முற்றம் |
| *103.* xylem | - | கட்டை |
| *104.* zest | - | நற்சுவை |
| *105.* zephyr | - | மென்பூங்காற்று |

அலகு : V - இலக்கிய வரலாறு

# 1. சைவ இலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

*களப்பிரர் காலத்திற்குப் பிறகு சோழர் ஆட்சியில் கி.பி. 7,8,9 ஆம் நூற்றாண்டுகளில் ஆலயப் பணியே ஆண்டவன் பணி என்னும் சிந்தனை வேரூன்றியது. சங்க இலக்கியங்கள் மன்னரையும் மக்களையும் பாடின: பக்தி இலக்கியங்கள் இறைவனையும் இறையடியாரையும் சிறப்பித்தன, கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம். '(திரு) நீறில்லா நெற்றி பாழ்' என்னும் எண்ணம் மக்கள் மனத்தில் ஊன்றப்பட்டது. நாடெங்கும் கோயில்கள் எழுப்பப்பட்டன, இயற்றப்பட்ட இலக்கிய வகைமைகள் அனைத்தும் சைவ சமயம் சார்ந்ததாகவே உருவாக்கப்பட்டன.*

## தொடக்க நிலை

*தொல்காப்பியர் காலம் முதல் பக்தி இலக்கிய வித்துக்கள் விதைக்கப்பட்டன.*

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்"**

*எனும் தொல்காப்பிய நூற்பா அக்காலக் கடவுள் பற்றிய சமயச் சிந்தனைகளை வெளிப்படுத்துவதாக அமைகிறது, சங்க இலக்கியங்கள் அகம், புறம் என்ற வாழ்வியல் அடிப்படையில் அமைந்தது, புலவர் தம் பாடல்களில் கலந்து பாடியுள்ளனர். முக்கணான் (புறம் 6), நீலகண்டமுடையவன். (புறம் 9), உமையரு கூறன் (புறம் கடவுள் வாழ்த்து), சிவன் நாள் திருவாதிரை (மதுரைக் காஞ்சி 150 வது வரி), ஆலமர் செல்வன் (மதுரைக்காஞ்சி - 81 வது வரி), முப்புரம் எரித்தமை (திருமுருகாற்றுப் படை - 154 வது வரி) என்று சிவன் இயல்புகளாகச் சில குறிப்புக்கள் காணப்படுகின்றன.*

## வளர்ச்சி நிலை

*சைவ சமயம் சார்ந்த பக்தி இலக்கியம் பன்னிரு திருமுறை என்று அழைக்கப்படுகின்றது, இப்பன்னிரு திருமுறையில் முதல் பதினொரு திருமுறைகளைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி ஆவார். தொகுப்பித்தவர் முதலாம் இராஜராஜசோழன், இதனைத் திருமுறைச் சான்றோர் இருபத்து எழுவர் பாடியுள்ளனர்.*

## சைவத் திருமுறைகள்

*இறைவனைப் பற்றி சைவ அடியார்கள் பாடியுள்ள திருநூல்கள் 'திருமுறை' என வழங்கப்படுகின்றன. தமிழ் உயிர் எழுத்துக்கள் 12 இதைப் போல சைவத்தின் உயிர் நூல்கள் 12 திருமுறைகள்.*

## பன்னிரு திருமுறைகள்

| திருமுறை பகுப்பின் பெயர் | பாடியவர் |
|---|---|
| *1, 2, 3 திருக்கடைக் காப்பு* | *திருஞான சம்பந்தர்* |
| *4, 5, 6 தேவாரம்* | *திருநாவுக்கரசர் சுந்தரர் மூவர்* |
| *7, திருப்பாட்டு* | *தேவாரம் அடங்கல் முறை* |
| *8, திருவாசகம்<br>திருக்கோவையார்* | *மாணிக்கவாசகர்* |
| *9, திருவிசைப்பா<br>திருப்பல்லாண்டு* | *1. திருமாளிகைத் தேவர்<br>2. கருவூர்த் தேவர்<br>3. சேந்தனார்<br>4. பூந்துருத்தி காடவ நம்பி<br>5. கண்டராதித்தர்<br>6. வேணாட்டடிகள்<br>7. திருவாலி அமுதனார்<br>8. புருடோத்தமநம்பி<br>9. சேதிராயர்* |
| *10. திருமந்திரம்* | *திருமூலர்* |
| *11. பக்திப் பாடல்கள்* | *1. திருவாலவாயுடையார்<br>2. காரைக்காலம்மையார்<br>3. கல்லாடதேவ நாயனார்<br>4. நக்கீர தேவ நாயனார்<br>5. கபில தேவ நாயனார்<br>6. பரணதேவ நாயனார்<br>7. அதிரா அடிகள்<br>8. எம்பெருமானடிகள்<br>9. ஐயடிகள் காடவர்கோன்<br>10. சேரமான் பெருமாள்<br>11. பட்டினத்தடிகள்<br>12. நம்பியாண்டார் நம்பிகள்* |
| *12. பெரிய புராணம்* | *சேக்கிழார்* |

## திருஞான சம்பந்தர்

*இயற்பெயர் ஆளுடைய பிள்ளை 16 ஆண்டுகள் மட்டுமே ஞானசம்பந்தர் வாழ்ந்தார். ஒவ்வொரு தலமாகச் சென்ற இடங்களில் 16,000 பதிகங்கள் பாடப்பட்டன. தற்போது கிடைப்பன 4213 பாடல்கள்.*

*காயத்ரி மந்திரம் ஓதவந்த அந்தணர்க்குத் திருவைந்தெழுத்து ஓதியதைப் போலவே, சோதிடக்கட்டுகளில் பிணிக்கப்பட்டுள்ள மக்களை விடுவிக்க,*

**வேயுறுதோளி பங்கன் விடமுண்ட கண்டன்.**
**மிக நல்ல வீணைதடவி**
**மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்துஎன்**
**உளமேபுகுந்த அதனால்**
**ஞாயிறுதிங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி**
**சனிபாம்பு இரண்டுமுடனே**
**ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல**
**அடியார் அவர்க்குமிகவே.**

*என்னும் பாடலின் மூலம் வழிகாட்டுகிறார் திருஞானசம்பந்தர்.*

*மூடக்கட்டுகளைத் தகர்த்தெறியப்பாடுபட்டவர், அவரது சிந்தனை, சொல், செயல் அனைத்திலும் நேர்மை இருந்தது.*

*திருஞான சம்பந்தர் மேற்கொண்ட சமத்துவ சமுதாயப் பணிகள் சத்புத்திர மார்க்கம் எனச் சிறப்பிக்கப்படுகின்றது. இவர் மேற்கொண்ட இத்தகைய செயலாக்க நெறி கிரியை நெறி எனப்படுகின்றது.*

## திருநாவுக்கரசர்

*இயற்பெயர் மருள்நீக்கியார். இவர் பாடியது 4900 பாடல்கள். கிடைப்பன 3066 பாடல்கள். திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் முதலான நூல்களைப் பாடியுள்ளார். இவரது நெறியைத் தாசமார்க்கம் என்பர். இவர் மேற்கொண்ட இறைப்பணி நிலையைச் சரியை என்பர்.*

*என் கடன் பணிசெய்து கிடப்பதே என்னும் கொள்கையில் நின்று உழவாரப்பணி மேற்கொண்டார்.*

*திருநாவுக்கரசர் சமணத்தில் இருந்து சைவரானதும் மன்னன் மகேந்திரவர்ம பல்லவன் திருநாவுக்கரசர்க்கு எண்ணரிய தீங்குகள் இழைத்தான்.*

*கொதிக்கின்ற சுண்ணாம்புக் காள வாயில் (நீற்றறை) உயிரோடு நாவுக்கரசரை இட்டனர், இறைவன் மீது கொண்ட மாறாத நம்பிக்கையில்*

**மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்குஇள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நிழலே**

*என்று பாடி வாழ்த்தினார். இறைவன் நாவுக்கரசரை வேகாமல் உயிரோடு நலமாகக் காத்துத் தந்தார்.*

## சுந்தரர்

*இயற்பெயர் ஆரூரர். சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையே பெரிய புராணத்திற்கு அடிப்படை. இவர் பாடியன 38000 பாடல்கள், கிடைப்பன 1026 பாடல்கள். இறைவனுடன் தோழமை உறவு பூண்டிருந்ததால் தம்பிரான் தோழர் எனப்படுகிறார். இவர் நெறி சகமார்க்கம் என்னும் யோக முறையாகும்.*

*மன்னர் மகனாக அனைத்து இன்பங்களும் பெற்று வாழ்ந்தவர் சுந்தரர், இறைவன் தடுத்தாட்கொண்டபின்*

**வாழ்வாவது மாயம்இது மண்ணாவது திண்ணம்**
**பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்**
**தாழாதுஅறம் செய்மின்தடங் கண்ணான்மல ரோனும்**
**கீழ்மேலுற நின்றான்திருக் கேதாரம் எனீரே** - *மாணிக்கவாசகர்*

*என்று பாடும் மனப்பக்குவம் கொண்டார்.*

*மாணிக்கவாசகர் தனது இறையனுபவங்களைத் திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரு நூல்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.*

## திருவாசகத்தின் சிறப்பு

*திருவாசகத்தில் நெஞ்சம் நெகிழ்ந்த ஜி.யு. போப் இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இராமலிங்க வள்ளலார் திருவாசகத்தின் இனிமையை*

**தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவைகலந்து**
**ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே**

*எனப் போற்றுகிறார்.*

## திருக்கோவையார்

*ஆன்மாவைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் நாயகன் நாயகி பாவம் அமைந்த 400 அகத்துறைக் கோவை பாடல் இது, தொல்காப்பியம், திருக்குறளுக்கு ஒப்பானது திருக்கோவையார் என இலக்கணக்கொத்து இயம்புகின்றது.*

## ஒன்பதின்மர் பாடியன (9 - ஆம் திருமுறை)

*ஒன்பதின்மர் பாடிய 29 பதிகங்களும் திருவிசைப்பா எனப்படும், பாடல்கள் மொத்தம் 301. காலம் 10 (அ) 11 ஆம் நூற்றாண்டு. சேந்தனார், தில்லையில் தேர் ஓடாது நின்றுபோனது, அத்தகைய தேரை வடமின்றித் தானே ஓடும் வண்ணம் ஒரு பதிகம் பாடினார்.*

**“பண்டும் இன்றும் என்றும்உள்ள**
**பொருள்என்றே பல்லாண்டு கூறுதுமே**
**பல்லாண்டு என்னும் பதங்கடந்**
**தானுக்கே பல்லாண்டு கூறுதுமே”**

*என்பது அப்பதிகத்துள் ஒன்று ‘பல்லாண்டு’ என வருவதால் அப்பாடல்கள் அனைத்தும் திருப்பல்லாண்டு எனப்படுகிறது.*

## திருமூலர் (10ஆம் திருமுறை)

*திருமந்திரம் ஒன்பது தந்திரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. எளிமையும் இனிமையும், ஆழமும் நிறைந்த பாடல்கள். நிலையாமை உண்மைகள், கள்ளுண்ணாமை முதலான வாழ்வியல் அறங்கள், அட்டமா சித்திகள் சோதிடம், சைவ உண்மைகள் முதலானவை நூலுள் காணப்படுகின்றன. சைவசித்தாந்தம், தத்துவமசி என்னும் சொற்கள் முதன்முதலில் திருமந்திரத்தில் காணப்படுகின்றன.*

**‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’**

*என்னும் புகழ்பெற்ற தொடர் திருமந்திரத் தொடரே.*

**உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே**

*என்னும் பாடல் உடல், உயிர், ஞானம் இவற்றின் தொடர்பு என்னும் அரிய கருத்தினை எளிய முறையில் விளக்குகிறது.*

## பன்னிருவர் பாடியன (11 - ஆம் திருமுறை)

*பன்னிருவர் பாடிய 40 நூல்களே பதினொன்றாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன.*

## பெரியபுராணம்

*சமணத்தின் பால் ஈடுபாடு கொண்ட அநபாயன் சோழ மன்னனின் மனத்தைச் சைவத்தின் மீது திருப்பவே சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பாடினார் என்பர். திருத்தொண்டர் புராணமே பெரியர் புராணம் என ஆகி நாளடைவில் பெரியபுராணம் என வழங்கப்பட்டு வருகிறது.*

*மதநாயன்மார்களைப் பற்றிப் பாடும்முன் அவ்வந்நாயனாரின் வரலாறு முதலான தரவுகளை அவரவர் ஊருக்கே சென்று சேக்கிழார் திரட்டினார். திரட்டிய தகவல்களைக் கொண்டு, 4286 விருத்தப் பாடல்கள் பாடியுள்ளார். இரண்டு காண்டங்கள். 13 சருக்கங்கள் கொண்டுள்ளன.*

## பெரியபுராணக் கருத்துக்கள்

*திருநாட்டுச் சிறப்பில், சைவ அடியார் ஒருவர் ஒருவரை பக்தியினால் பணியும் பான்மை, முதிர்ந்த நெல் தலைவணங்கிக் கொள்ளும் தன்மையைப் போல் இருப்பதாகச் சேக்கிழார் சிறப்புறச் சித்திரிக்கின்றார்.*

*இறைவனை வணங்குவது வணங்குவதற்காகவே வேறு எந்த நலனும் தேவையில்லை என்னும் பக்தி வீரம் உடையோராக அடியவர் விளங்கும் சிறப்பினை.*

**கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்**
**ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்**
**கூடும் அன்பினில் கும்பிடலேஅன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினார்**

*என்னும் பாடல் பாங்குறப் பகர்கின்றது.*

*பெரிய புராணத்தின் பக்திச் சுவையிலே தன்னை மறந்த மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள். பக்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ என்று சேக்கிழாரைப் புகழ்கின்றார்.*

## சைவ பக்தி இலக்கியப் புலவர்கள்

*சைவப் புலவர்கள் தமிழைக் கருவியாகக் கொண்டு பக்தி நூல்கள் பல எழுதியுள்ளனர். அவை கலம்பகம், பிள்ளைத் தமிழ், உலா, அந்தாதி, இரட்டை மணிமாலை, மும்மணிக்கோவை முதலான பல சிற்றிலக்கிய வகைமைகளின் வளர்ச்சிக்குத் துணை நின்றன. கி.பி. 15, 16, 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த குறிப்பிடத்தக்க புலவர்கள் வளர்த்த சைவ பக்தி இலக்கியங்கள்.*

### 1. அருணகிரியார்

*கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், திருவெழுகூற்றிருக்கை, திருவகுப்பு (மந்திர நூல்), கந்தர் அந்தாதி எனப் பல நூல்களைப் பாடியுள்ளார்.*

### 2. இரட்டைப் புலவர்கள்

*தில்லைக் கலம்பகம், திருவாமாத்தூர்க் கலம்பகம், கச்சிக்கலம் பகம், மாதைக் கலம்பகம் முதலான பல கலம்பகங்களைப் பாடியுள்ளார்.*

### 3. காளமேகப் புலவர்

**இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும்**
**அம்மென்றால் ஆயிரம் பாட்டும்**

*பாடும் ஆற்றலினர், திருவானைக்கா இறைவன் மீது திருவானைக்கா உலா பாடியுள்ளார்.*

### 4. குமரகுருபரர்

*கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், மதுரைக் கலம்பகம், திருவாரூர் நான்மணிமாலை முதலிய 13 நூல்களை இயற்றியுள்ளார்.*

### 5. துறைமங்கலம் சிவப்பிரகாசர்

*திருவெங்கைக் கோவை, திருவெங்கைக் கலம்பகம் முதலிய 26 நூல்களை இயற்றியுள்ளார்.*

### 6. சைவ எல்லப்ப நாவலர்

**சைவத்தின் மேல்சமயம் வேறில்லை அதில்சார்**
**சிவமாம் தெய்வத்தின்மேல் தெய்வம் இல்லை.**

*என நிறுவ முனைந்தவர், பல புராணங்களைப் பாடியுள்ளார்.*

## 7. அந்தகக் கவி வீரராகவ முதலியார்

*திருக்கழுக்குன்ற மாலை, திருக்கழுக்குன்ற உலா, திருக்கழுக்குன்ற புராணம், திருவாரூர் உலா, சேயூர்க்கலம்பகம் முதலான சமய நூல்களை எழுதியுள்ளார்.*

## 8. படிக்காசுப் புலவர்

*புள்ளிருக்கு வேளூர் கலம்பகம், உமைபாகர் பதிகம், பாம்பு அலங்கார வருக்கக் கோவை, சிவந்தெழுந்த பல்லவன் உலா முதலான பல பாடல்களைப் பாடியுள்ளார்.*

## 9. சாந்தலிங்க அடிகளார்

*சாந்தலிங்கர், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார் என்னும் நூல்களை எழுதியுள்ளார்.*

## 10. திரிகூடராசப்பக் கவிராயர்

*குற்றாலக் குறவஞ்சி, குற்றால மாலை, யமக அந்தாதி, குற்றாலத் தலபுராணம் பாடியுள்ளார்.*

## 11. தாயுமான சுவாமிகள்

*இறைவன் உரு, கோயில் வழிபாடு என்னும் வட்டத்தை விட்டுச் சமரச சன்மார்க்கம் என்னும் விரிந்த நோக்கினைக் கொண்டிருந்தார்.*

**'எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே**
**அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே'**
**'நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே**
**மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே'**

*என்பன தாயுமானவர் பராபரக் கண்ணிகளுள் புகழ் பெற்றன. தாயுமானவர் பாடல்களின் தொகுதி தாயுமானார் பாடல்கள் எனப்படுகிறது. 'இது தமிழ்மொழியின் உபநிடதம் எனப் பாராட்டப் படுகிறது.'*

## 12. சிவஞான முனிவர்

*இவர் இலக்கண இலக்கிய தருக்க, வடநூல் புலமைமிக்கவர். அகிலாண்டேசுவரி பதிகம், தொல்காப்பியச் சூத்திர விருத்தியுரை முதலிய 21 நூல்கள் எழுதியுள்ளார்.*

## 13. இராமலிங்க வள்ளலார்

*இவர் சமரச சன்மார்க்க சங்கம் என்னும் அமைப்பைத் தோற்றுவித்து சன்மார்க்க நெறியை நிழல் தரும் செழித்த மரமாக்கினார். மனுமுறை கண்ட வாசகம், திருவருட்பா, இங்கிதமாலை, அருட்பெருஞ்சோதி, அகவல் முதலிய நயம் மிக்க நூல்களை இயற்றியுள்ளார்.*

## 14. பட்டினத்தார்

*கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை. திருவிடை மருதூர் மும்மணிக்கோவை, திருவொற்றியூர் ஒருபா ஒரு பஃது முதலிய நூல்களை எழுதியுள்ளார்.*

## 15. தத்துவராயர்

*மெய்ஞ்ஞான தத்துவங்களை மட்டுமே பாடியுள்ளார். அஞ்ஞான வதைப் பரணி, மோகவதைப் பரணி ஆகிய நூல்கள் எழுதியுள்ளார்.*

*இப்புலவர்கள் தவிர மேலும் கச்சியப்ப சிவாசாரியார், கல்லாடனார், பரஞ்சோதி முனிவர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, அருணாசலக்கவிராயர், நிரம்ப அழகிய தேசிகர் ஆகியோரும் சைவ நூல்கள் பலவற்றை இயற்றியுள்ளனர்.*

# 2. வைணவ இலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

*திருமாலைச் சமயக் கடவுளாகக் கொண்ட சமயம் வைணவம் எனப்படும், வைணவ சமயத்து இறையடியார்கள் பன்னிருவரும் ஆழ்வார்கள் எனப்படுவர், திருமாலின் அருளில் அன்பில் ஆழ்ந்து தம்மை மறந்தவர்களே ஆழ்வார்கள் என வழங்கப்பட்டனர்.*

*கி.பி. 6ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டு முடிய பன்னிரு ஆழ்வார்களின் காலமாக அமைகின்றது, ஆழ்வார்களின் வரவு வைணவ உலகின் மறுமலர்ச்சிக் காலமாக இருந்தது, ஆழ்வார்களின் பாடல்களை நாதமுனிகள் தொகுத்தார், நாதமுனிகளுக்குப் பின் வந்த வைணவ அடியார்கள் ஆச்சாரியர்கள் எனப்படுகின்றனர். வைணவ நூலுக்கு உரையெழுதிய உரையாசிரியர்கள் வைணவ இலக்கியத்தின் பெருமை பரவக் கருவியானார்கள்.*

## தோற்றம்

*தொல்காப்பிய இலக்கண நூலிலும், அதன்பின் எழுந்த சங்க நூல்களிலும் பிற இலக்கியங்களிலும் வைணவம் பேசப்பட்டுள்ளது.*

## தொல்காப்பியத்தில் வைணவம்:

*தொல்காப்பியத்தில் நானிலங்களும் அவற்றிற்குரிய தெய்வங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. முல்லை நிலத்தைக் குறிப்பிடும்பொழுது,*

**'மாயோன் மேய காடுறை உலகம்'**
**'மாயோன் மேய மன்பெரும் சிறப்பில்**
**தாவா விழுப்புகழ் பூவை நிலையும்'**

*எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.*

## சங்க இலக்கியங்களில் வைணவம்

*சங்க இலக்கியங்களில் முல்லைக் கலி, மதுரைக் காஞ்சி, திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பரிபாடல் ஆகிய நூல்களில் திருமாலைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.*

*தன்னை அழிக்கக் கம்சன் விடுத்த கூந்தல் குதிரையை அழித்த கண்ணனை,*

**'மாயோன் என்று உட்கிற்றுஎன் நெஞ்சு'**

*என்று முல்லைக்கலி குறிக்கின்றது,*

*பரிபாடலில் 1, 2, 3, 4, 13, 15 ஆம் பாடல்கள் முழுக்க முழுக்கத் திருமாலைப் பற்றி பாடுகின்றன.*

## சிலம்பில் வைணவம்

*சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையில் மாயவன் குழல் ஊதும் சிறப்பு கூறப்பட்டுள்ளது, அதுவும் தொன்மை வாய்ந்த வடிவமான நாட்டுப்புறப் பாடல் வடிவத்தில் திருமாலின் சிறப்பினை வைத்துப் பாடுவதன் மூலம் வைணவத்தின் மக்கள் செல்வாக்கினை இளங்கோவடிகள் புலப்படுத்துகின்றார்.*

## பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் வைணவம்

*பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் நான்மணிக்கடிகை, திரிகடுகம், கார்நாற்பது, களவழிநாற்பது ஆகிய நூல்கள் வைணவ சமயப் புலவர்களால் இயற்றப்பட்டன. இதன் மூலம் வைணவ சமயப் புலவர்கள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் வாயிலாகவும் வைணவக் கருத்துக்களை ஆங்காங்கு கூறியுள்ளனர் என்பது புலனாகும்.*

## கம்பராமாயணத்தில் வைணவம்

*கம்பராமாயண பாலகாண்டத்தின் தொடக்கத்தில் உள்ள பாடல் வைணவ சமயத் தத்துவத்தை விளக்குகிறது,*

**உலகம் யாவையும் தாமுள வாக்கலும்**
**நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா**
**அலகி லாவிளை யாட்டுடை யாரவர்**
**தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே**

*என்னும் பாடல் முழுமையும் வைணவ தத்துவம் நிரம்பியுள்ளது.*

## வில்லிபாரதத்தில் வைணவம்

*பாண்டவர்க்குத் துணையாகக் கண்ணன் இருப்பதனை வில்லி பாரதம் கூறுகிறது, நல்லவர்க்குத் துணையாக இறையாற்றல் இலங்கும் என்பதனையே இது எடுத்துக்காட்டுகின்றது,*

*இவற்றின் மூலம் வைணவம் இழையோடுவதனை அறியலாம்.*

## வைணவ ஆழ்வார்கள் பன்னிருவர்

### அ. பொய்கையாழ்வார் : (கி.பி. 6 (அ) 8ஆம் நூற்றாண்டு)

*காஞ்சிபுரத்தில் திருவெஃகா என்னும் இடத்தில் உள்ள தாமரைப் பொய்கையில் தோன்றியமையால் பொய்கையாழ்வார் எனப்படுகிறார். திருமாலின் சங்காகிய பாஞ்சசன்னியத்தின் அவதாரம். இவர் பாடிய பிரபந்தம் முதல் திருவந்தாதியாக அமைகிறது, 100 பாடல்களால் ஆனது.*

**வையம் தகளியா வார்கடலே நெய்யாக**
**வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய**
**சுடராழி யான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை**
**இடர்ஆழி நீங்குகவே என்று**

*என்பது முதல் திருவந்தாதிப் பாடல்களுள் ஒன்று.*

### ஆ. பூதத்தாழ்வார் : (கி.பி 6 (அ) 8ஆம் நூற்றாண்டு)

*மாமல்லபுரம் எனப்படும் திருக்கடல் மல்லையில் குருக்கத்தி மலரில் தோன்றினார் என்பர். கதாயுதத்தின் அவதாரம். பூதம் என்னும் சொல்லைப் பாடல்களில் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளதால் இப்பெயர் பெற்றார், இவர் பாடிய பிரபந்தம் இரண்டாம் திருவந்தாதி யாக அமைகிறது.*

**அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக**
**இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி**
**ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு**
**ஞானத் தமிழ் புரிந்த நான்**

*என்பது இரண்டாம் திருவந்தாதிப் பாடல்களுள் ஒன்று.*

### இ. பேயாழ்வார் :

*சென்னை மயிலாப்பூரில் செவ்வல்லிப்பூவில் பிறந்தார், திருமாலின் நந்தகம் என்னும் வாளின் அம்சம். பக்திப் பரவசத்தில் மெய்மறந்து ஆடிப் பாடித் துள்ளிக் குதித்தபடி இருந்ததால் பேயாழ்வார் எனப்பட்டார், இவர் பாடிய 100 பாடல்கள் மூன்றாம் திருவந்தாதி எனப்படுகிறது.*

*திருமாலின் கோலத்தைக் கண்டு மகிழ்ந்த பேயாழ்வார்*

**திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்**
**அருக்கன் அணிநிறமும் கண்டேன் - செருக்கிளரும்**
**பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்**
**என்னாழி வண்ணன்பால் இன்று**

*என்று பாடினார்.*

## ஈ. திருமழிசை ஆழ்வார் : (கி.பி. 7 - ஆம் நூற்றாண்டு)

*தொண்டை நாட்டில் உள்ள திருமழிசை இவருக்குப் பக்திசாரர் என்னும் பெயரும் உண்டு, கோயில் பணியாளான மூதாட்டி ஒருத்தி பணிபுரிய இயலாமல் தள்ளாடினாள், அவள் மீது மனமிரங்கிய திருமழிசை ஆழ்வார் திருமாலிடம் வேண்டிப் பெற்ற ஆற்றலால், அம் மூதாட்டியை இளமை பெற உதவினார். இந்தச் செய்தி நாடெங்கும் பரவியது, ஆழ்வாரின் சீடர் கணிகண்ணன் இவரிடம் ஆழ்வாரை அரண்மனைக்கு அழைத்து வந்து தன்னையும் இளமை யாக்குமாறு மன்னன் கூறினான், கணிகண்ணன் மறுத்தார். உடனே தன்னைப் புகழ்ந்து பாட வேண்டும் என மன்னன் பணித்தான், மறுத்த கணிகண்ணன் நாராயணனைப் பாடும் வாயால் நரனைப் பாடேன் என்றார். கோபமுற்ற மன்னன் உடனே ஊரை விட்டுக் கணிகண்ணன் நீங்கவேண்டும் என உத்தரவிட்டான்.*

*இதனை அறிந்த திருமழிசை ஆழ்வார் கோயிலில் திருமாலிடம் சென்று,*

**கணிகண்ணன் போகின்றான் காமரும் பூங்கச்சி**
**மணிவண்ணா நீகிடக்க வேண்டா துணிவுடைய**
**செந்நாப் புலவன்யான் செல்கின்றேன் நீயும் உன்றன்**
**பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்**

*எனக் கூறினார், பயணம் மேற்கொண்ட திருமழிசையாழ்வார் மற்றும் கணிகண்ணனுடன் கோயிலில் குடிகொண்டிருந்த மணிவண்ணனும் மறைந்தான்.*

*உண்மை உணர்ந்த மன்னன் அஞ்சி திருமழிசை ஆழ்வார், கணிகண்ணன் காலில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டான். ஆதலால்,*

**கணிகண்ணன் போக்குஒழிந்தான் காமரும் பூங்கச்சி**
**மணிவண்ணா நீகிடக்க வேண்டும் துணிவுடைய**
**செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயும் உன்றன்**
**பைந்நாகப் பாய்விரித்துக் கொள்**

*எனத் திருமழிசை ஆழ்வார் கோயிலில் சென்று பாடினார். அதனால் அந்தக் கோயில் இறைவனைச் சொன்ன வண்ணம் செய்த பெருமாள் என இன்றும் அழைப்பர், குமரகுருபரர் தனது பாடலில் 'பைந்தமிழ்ப் பின்சென்ற எனத் திருமழிசை ஆழ்வாரைப் பச்சைப் பசுங்கொண்டலே எனப் புகழ்கின்றார்.*

## உ. நம்மாழ்வார் : (கி.பி. 9ஆம் நூற்றாண்டு)

*பிறந்தது முதல் பேசாதிருந்து புளிய மரத்தடியில் தவம் இயற்றித் திருமாலின் திருவருளால் பேசினார், பாடினார் திருமாலை மட்டுமே பாடுவது என்னும் கொள்கையர்.*

*குழந்தை முதலே யோகத்தில் இருந்த இவர் அசைவு தரும் காற்றாகிய சடம் என்னும் வாயுவைச் சினந்து அடக்கினமையால் சடகோபர் எனப்படுகின்றார். திருமாலே நம்சடகோபன் என அழைத்தமையால் நம்மாழ்வார் எனப்படுகின்றார். பிற சமயங்கள் என்னும் யானைகளுக்கு அங்கு சமமாகத் திகழ்ந்தமையால் பராங்குசர் எனவும் சிறப்பிக்கப் பெறுவார்.*

*உண்ணும் சோறும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணனே என்னும் பக்தி சான்றவர். இவரை வைணவத்து மாணிக்கவாசகர் எனச் சிறப்பிப்பர்.*

*இவர் திருவாசிரியம், திருவாய்மொழி, திருவிருத்தம், பெரிய திருவந்தாதி என்னும் நான்கு நூல்களைப் பாடியுள்ளார். இவற்றைச் சதுர்வேதத்திற்கு நிகர் எனக் கூறுவர். எனவே இவரை வேதம் தமிழ் செய்த மாறன் என்பர். இவரது நூல்களுள் திருவாய் மொழியைத் திராவிட வேதம் என்றே சிறப்பிப்பர்.*

## ஊ. மதுரகவி ஆழ்வார் : (கி.பி. 9ஆம் நூற்றாண்டு)

*ஊர் பாண்டியநாட்டுத் திருக்கோளூர். இவர் வடநாட்டில் பயணம் மேற்கொண்டிருந்த பொழுது ஓர் ஒளிப்பிழம்பு இவரை வழிநடத்தி வந்து நம்மாழ்வாரிடம் கொண்டு வந்து சேர்த்தது என்பர். யோக நிலையில் இருந்த நம்மாழ்வாரையே தனது ஞானாசிரியராக இவர் ஏற்றுக்கொண்டார்.*

*அது முதல் நம்மாழ்வாரை மட்டுமே இறைவனாகக் கொண்டு வாழ்ந்தார். வைணவம் வலியுறுத்தும் குருபக்தியின் சிறப்பு மதுரகவியாழ்வாரிடம் மண்டிக் கிடக்கிறது.*

*நம்மாழ்வார் மீது இவர் பாடிய பாடல்கள்* ***கண்ணி நுண்சிறுத்தாம்பு*** *என்னும் பாடலின் முதல் வரியால் பெயர் பெற்றுள்ளது. நம்மாழ்வாரின் பாடல்கள் அனைத்தையும் எழுத்து எழுத்தாகத் தன்கையாலே எழுதித் தொகுத்தார்.*

## எ. குலசேகர ஆழ்வார் : (கி.பி. 9ஆம் நூற்றாண்டு)

*ஊர் சேரநாட்டுத் திருவஞ்சைக்களம். திருடவரதன் என்னும் மன்னனின் மகன், தம் பாடல்களில் இவர் தம்மைக் (கொல்லிக் காவலன், கூடல் நாயகன், கோழிக்கோன்) எனக் கூறிக் கொள்வதால் பாண்டி சோழ நாடுகளுக்கும் தலைவராய் இருந்தார் எனத் தெரிகிறது. திருமால் பக்தியால் அரசு துறந்தவர்.*

*அதற்கும் பலபடி மேலே சென்று, திருவேங்கட மலையில் பறவையாய், மீனாய், ஆறாய், கொடி மரமாய், படியாய்ப் பிறக்கும் பேறு கிடைக்கவேண்டும் என வேண்டுகின்றார். இதனை,*

**செடியாய் வல்வினைகள் தீர்க்கும் திருமாலே**
**நெடியானே வேங்கடவா நின்கோயிலின் வாசல்**
**அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்துஇயங்கும்**
**படியாய்க் கிடந்துஉன் பவளவாய் காண்பேனே**

*என்னும் பாடலின் மூலம் தெற்றென உணரலாம். திருவேங்கடப் படிகள் இன்னும் குலசேகரப்படிகள் என்று அழைக்கப்படுகின்றன.*

*ஒருமுறை இராமாயணச் சொற்பொழிவில் 'தன்னைச் சூழ்ந்து கொண்ட கர, தூடணர்களுடன் இராமன் தனித்துப் போரிட்டான்' என்பதனைக் கேட்டு இராமனுக்குப் படை உதவிபுரிய தனது படைகளைத் தயார் செய்யப் புறப்பட்டார் என்பர். 'இராமன் அவர் களைச் சாதுரியமாய் வென்றான்' என்று புராணிகர் கூறிச் சமாளித்த பிறகே குலசேகரர் படைகொண்டு செல்லும் எண்ணத்தைக் கைவிட்டார் என்பர்.*

*இவர் தமிழில் பெருமாள் திருமொழியும் வடமொழியில் முகுந்த மாலையும் செய்துள்ளார். கண்ணனின் பிள்ளைமை இன்பங்கள் அனைத்தும் யசோதை பெற்றாளே எனத் தேவகி புலம்புவதாகக் கற்பனை செய்துள்ள செய்யுட்பகுதி தேவகிபுலம்பலாகும்.*

## ஏ. பெரியாழ்வார்: (கி.பி. 9ஆம் நூற்றாண்டு)

*ஊர் ஸ்ரீவில்லிபுத்தூர். இயற்பெயர் விஷ்ணுசித்தர். குழந்தைக் கண்ணனின் பிறப்பு, தாலாட்டு, அம்புலி, நீராட்டல், பூச்சூட்டல், காப்பிடல், இளமை விளையாட்டு அனைத்தையும் பெரியாழ்வார் உணர்ந்து பாடியுள்ளார்.*

*கண்ணன் குறும்பு செய்வதாக அயலகத்தார் கூறுவதை யசோதையால் தாங்க இயலவில்லை. 'இனி நீ அங்கெல்லாம் போகாதே; உன்னைப் பிறர் குறை கூறுவதை நான் கேட்க விரும்பவில்லை' என்று கூறுகிறாள். இதனை,*

**ஏதேனும் சொல்லி அசல கத்தார்**
**ஏதேனும் பேசநான் கேட்கமாட்டேன்**

*என்று யசோதை கூறுவதாகப் பெரியாழ்வார் கூறுவதன் மூலம் அவரது தாய்மையுணர்வு வெளிப்படுகிறது.*

*ஸ்ரீவில்லிபுத்தூரில் திருமாலுக்குப் பூமாலை கட்டி இறைப்பணி புரிந்தார்.*

**பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு**
**பலகோடி நூறாயிரம்**
**மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன்**
**செவ்வடி செவ்வி திருக்காப்பு**

*என்று திருமாலுக்குப் பல்லாண்டு பாடி பூமாலையும் சாத்தினார். திருப்பல்லாண்டு பாடியமையால் பெரியாழ்வார் என அழைக்கப்படு கின்றார்.*

## ஐ. ஆண்டாள்:

*பன்னிரு ஆழ்வாருள் பெண்பாலர் இவர் ஒருவர் மட்டுமே. பெரியாழ்வாரின் நந்தவனத்தில் துளசிச் செடிகளுக்கு இடையே கிடைக்கப் பெற்றார் என்பர். இவரைப் பெரியாழ்வார் பெற்றெடுத்த பைந்தொடி எனப் போற்றுவர்.*

*திருமாலையே மணக்க வேண்டுமென்று நினைத்தார். திருமாலுக்குக் கட்டிவைத்த மாலையைத் தினமும் தான் சூடிக் கண்ணாடியில் அழகு பார்த்தார். இதனை அறிந்த பெரியாழ்வார், வேறு மாலை கட்டித் திருமாலுக்குச் சாத்த முனைந்தனர். பெருமாள் மறுத்து ஆண்டாள் சூடிக் கொடுத்த மாலையையே விரும்பிக் கேட்டார். எனவே ஆண்டாள் சூடிக் கொடுத்த சுடர்க்கொடி எனப்படுகிறாள். இவ்வாறு ஆண்டவனையே ஆண்டதால் ஆண்டாள் என்றும் சிறப்பிக்கப்படுகின்றாள்.*

*ஆண்டாள் பாடிய திருப்பாவைப் பாடல்கள் பாவை நோன்பு பற்றியது. மார்கழித் திங்கள் வைகறையில் வைணவர்களால் பாராயணம் செய்யப்பெறும் சிறப்புமிக்கது. நாச்சியார் திருமொழி, ஆண்டாள் இறைவன் மீது கொண்ட காதல் மனத்தைக் காட்டும்.*

**மானிட வர்க்குஎன்று பேச்சுப்படில்**
**வாழகில்லேன் கண்டாய் மன்மதனே**

*என்னும் ஆண்டாள்,*

**மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத**
**முத்துடைத் தாமம் நிறைதாழ்ந்த பந்தர்க்கீழ்**
**மைத்துனன் நம்பிமதுசூத னன்வந்தென்னைக்**
**கைத்தலம் பற்றிக் கனாக்கண்டேன் தோழீ நான்**

*என்று உருகுவதையும் காணலாம்.*

## ஒ. திருப்பாண் ஆழ்வார்: (கி.பி. 9ஆம் நூற்றாண்டு)

*பாணர் குடியினர். எனவே இவருக்குக் கோயிலினுள் நுழைய அனுமதி இல்லை. எனவே காவிரிக்கரையிலிருந்தே கோயில் கோபுரம் பார்த்துத் தொழுது இசைபாடி இறைவனை வணங்கினார். பெருமாளுக்குத் திருமஞ்சனமாட்ட நீர் முகந்து செல்லப் பொற்குடத்துடன் லோகசாரங்கன் என்னும் அந்தணர் தலைவன் வந்தான். பாணாழ்வார் காவிரிக்கரையில் நிற்பதால் காவிரியே தீட்டுப் பட்டதாக அந்தணர் குழாம் சினமுற்றது. லோகசாரங்கனுடன் வந்தவர்கள் கல்லால் எறிந்து பாணாழ்வாரைக் காயப்படுத்தினர். அந்தணர்களின் அடாத செயலைக் கண்டிக்க விரும்பிய பெருமாள், பாணாழ்வார் பட்ட காயத்தின் குருதியைத் தன் நெற்றியில் காட்டினார். பாணரைத் தோளிலே சுமந்து கோயிலுக்கு வருமாறு லோகசாரங்கனைப் பணித்தார். அவ் அந்தணனும் அவ்வாறே செய்தார்.*

*இறைவனைக் கோயிலினுள் நேரே கண்ட பாணாழ்வார் இறைவனின் அழகில் மனதைப் பறிகொடுத்தார். திருமாலை வணங்கி அமலனாதிபிரான் என்னும் 10 பாசுரங்களைப் பாடினார். 'பாதகமலம்' என்று தொடங்கி கண்கள் முடிய பாதாதிகேச வர்ணனை செய்துள்ளார்.*

**"கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்**
**உண்ட வாயன் என்னுள்ளம் கவர்ந்தானை**
**அண்டர் கோன்அணி அரங்கன்என் அமுதினைக்**
**கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே"**

*என்பது அப்பாசுரப் பாடல்.*

## ஓ. தொண்டரடிப் பொடி ஆழ்வார்: (கி.பி. 9ஆம் நூற்றாண்டு)

*இயற்பெயர் விப்ரநாராயணர். திருவரங்கத்தில் மாலை சாத்தும் பொறுப்பினை மேற்கொண்டிருந்தார். தேவதேவி என்னும் விலைமாதின் வலையில் சிக்கி வழிபாடு மறந்து சிறைத்தண்டனைக்கு ஆளானார்.*

*அரங்கன், ஆழ்வாரை மீட்டார். தன் தவறுக்கு வெட்கினார் ஆழ்வார். பாவம் நீங்க திருமால் தொண்டர்களின் பாதத்துகளினை உட்கொண்டு பாவமன்னிப்புத் தேடினார். அது கொண்டே இவர் தொண்டரடிப் பொடி என அழைக்கப்படுகிறார்.*

*முன்னிலும் ஆழமான அன்பை இறைவன் மீது கொண்டார். இதனை,*

**பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்**
**அச்சுதா அமரர்ஏறே ஆயர்தம் கொழுந்தே என்னும்**
**இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்**
**அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே!**

*என்னும் பாடல் இவரது புகழ் சாற்றும்.*

*இவர், திருப்பள்ளியெழுச்சி (10 பாடல்கள்), திருமாலை (45 பாடல்கள்) ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். இவரது திருப்பள்ளி யெழுச்சி மாணிக்கவாசகரின் திருப்பள்ளியெழுச்சியுடன் ஒப்பிடும் சிறப்புப் பெற்றது.*

### ஔ. திருமங்கையாழ்வார்: (கி.பி. 9ஆம் நூற்றாண்டு)

*சோழநாட்டுத் திருமங்கை நாட்டில் திருக்குறையலூர் ஊரினர். நீலன் என்னும் படைத்தலைவனின் மகன், இவர் பிறருக்குக் காலன் போன்று இருந்ததால் பரகாலன் எனப்பட்டார். திருமங்கைப் பகுதியின் குறுநில மன்னனாக இருந்ததால் திருமங்கை மன்னன் எனப்பெயர் பெற்றார். குமுதவல்லி என்னும் வைணவ பக்தையை மணந்து கொண்டார். அவள் விரும்பியபடியே வைணவ அடியார்க்கு தினமும் உணவு படைக்க ஒப்புக் கொண்டார். அரசனுக்குச் செலுத்த வேண்டிய திறைப் பணத்தையும் இறைப் பணமாகவே கண்டார்; மன்னனிடம் சிறைப்பட்டு மீண்டார். பிறகு அடியார்க்கு நன்மைகள் புரிய வழிப் போக்கர்களிடம் கொள்ளை அடித்தார். திருமாலும் திருமகளுமே ஒரு முறை வழிப்போக்கர் போல் வந்தனர். இலக்குமியின் கால் விரலணி உட்படக் கடித்தெடுத்துக் கட்டிய மூட்டையைத் தூக்க முயன்றார். முடியவில்லை. பின்னர், இறைவன் உணர்த்திய ஓம் நமோ நாராயணா என்னும் மந்திரத்தை ஓதினார். பின்னரும் நாகை பௌத்த விகாரங்களைக் கொள்ளையடித்து, திருவரங்கத்தின் மூன்றாம் மதிலுக்குத் திருப்பணி செய்தார்.*

*இவர் பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந் தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்னும் நூல்களைச் செய்தார்.*

*இவருடைய பாடல்களில் நாட்டுப்புற வடிவங்கள் காணப் படுகின்றன.*

**கரையாய் காக்கைப் பிள்ளாய் - கரு**
**மாமுகில் போல் நிறத்தன்**
**உரையார் தொல்புகழ் உத்தமனை வரக்**
**கரையாய் காக்கைப் பிள்ளாய்**

*என்பதன் மூலம் இதனை அறியலாம். இதைப்போலவே இப்பாடலின் தொடர்ச்சியாகக் கொட்டாய் பல்லிக்குட்டி, சொல்லார் பைங்கிளியே என்று பிற உயிர்களிடத்துப் பேசும் நாட்டுப்புற வடிவினைக் காணலாம்.*

## III. நாலாயிர திவ்வியப் பிரபந்தமும் நாதமுனிகளும்

*பன்னிரு ஆழ்வார்களும் திருமாலின் அழகில், அருளில் மயங்கிப் பல பாடல்கள் பாடினர். ஆழ்வார்களின் காலத்திற்குப் பின் வந்த நாதமுனிகள் ஆழ்வார்கள் பாடிய பாடல்கள் அனைத்தையும் தொகுத்தார். அவை நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என அழைக்கப்படுகிறது. இந்நூல் வைணவ சமயத்தின் வழிபாட்டு நூலாக, இராமானுசர் உயர்த்தினார்.*

### நலாயிர திவ்வியப் பிரபந்தங்கள்

| **ஆழ்வார்கள்** | | **நூல்கள்** |
|---|---|---|
| *1. பொய்கையாழ்வார்* | → | *முதல் திருவந்தாதி* |
| *2. பூதத்தாழ்வார்* | → | *இரண்டாம் திருவந்தாதி* |
| *3. பேயாழ்வார்* | → | *மூன்றாம் திருவந்தாதி* |
| *4. திருமழிசை ஆழ்வார்* | → | *திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி* |
| *5. நம்மாழ்வார்* | → | *திரு ஆசிரியம், திருவாய்மொழி, திருவிருத்தம், பெரிய திருவந்தாதி* |
| *6. மதுரகவி ஆழ்வார்* | → | *கண்ணி நுண் சிறுத்தாம்புப் பதிகம்* |
| *7. குலசேகர ஆழ்வார்* | → | *பெருமாள் திருமொழி* |
| *8. பெரியாழ்வார்* | → | *பெரியாழ்வார் திருமொழி* |
| *9. ஆண்டாள்* | → | *நாச்சியார் திருமொழி, திருப்பாவை* |
| *10. திருப்பாண் ஆழ்வார்* | → | *‘அமலனாதிபிரான்’ பதிகம்* |

| | | |
|---|---|---|
| *11. தொண்டரடிப்பொடி ஆழ்வார்* | → | *திருமாலை, திருப்பள்ளி எழுச்சி* |
| *12. திருமங்கை ஆழ்வார்* | → | *பெரிய திருமொழி, திருக்குறுந் தாண்டகம், திருநெடுந் தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல்.* |

*வடமொழி வேதங்களைக் கொண்டு தெளிவியலாதவைகளைக் கூடச் செய்ய தமிழ்மாலைகளால் தெரிந்துகொள்ள முடியும், சொல் வளமும் சந்தநயமும் சொக்க வைப்பன. திருவாய்மொழி, தத்துவார்த்த புருஷர்களை ஐயந்திரிபறத் தெரிவிப்பதால், வேதங்களைப் போலவே இன்னும் சிறப்பாக நமக்கு உதவுவது. அனைவரும் சுவைக்கப் பாங்கானது.*

# 3. சிற்றிலக்கியங்கள் -

# பரணி, தூது, குறவஞ்சி, பள்ளு, கலம்பகம்

## 1. பரணி

*பண்டைத் தமிழ் இலக்கியத்தை அகம், புறம் என்று பிரிப்பர். தமிழர்களின் காதல் வாழ்க்கையைப் பாடுபவை அக இலக்கியங்கள். வீரம், கொடை, மானம் முதலியவற்றைப் பாடுபவை புற இலக்கியங்கள். பரணி புற இலக்கியம்.*

*புறத்திணையில் இடம் பெறும் களவேள்வி, களவாழ்த்து, முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை போல்வன பரணியிலக்கியம் தோன்ற அடிப்படைகளாகும். பழங்காலத்தில் ஏர்க்களம் பாடும் பொருநரேயன்றிப் போர்க்களம் பாடும் பொருநர்களும் இருந்தார்கள். அவர்களின் வாய்மொழிப்பாடலின் வழி வந்ததே பரணியிலக்கியம். போர்க்களத்தின் தெய்வம் காளி. அவ்வெற்றித் தெய்வத்தை வழிபடும் விழாவே பரணியாகும்.*

*பாட்டுடைத் தலைவனின் வீரமே இந்த இலக்கியத்தின் மையக் கருவாகும். இது பற்றிப் பன்னிரு பாட்டியல் கூறுவது வருமாறு:*

**“வஞ்சி மலைந்த உழிஞை முற்றி**
**தும்பையிற் சென்ற தொடுகழல் மன்னனை**
**வெம்புசின மாற்றான் தானை வெங்களத்தில்**
**குருதிப் பேராறு பெருகும் செங்களத்து**
**ஒருதனி ஏத்தும் பரணியது பண்பே”** **(பன்னிரு: 240)**

*மன்னன் பகைவனது நாட்டை வெல்வதற்காக வஞ்சிப் பூமாலை அணிந்து போர்க்களம் சென்றான். உழிஞைப் பூமாலை அணிந்து பகைவனது மதிலை முற்றுகை இட்டான். தும்பைப் பூமாலையைச் சூடிப் பகைவனுடன் போர் செய்தான். பகை வீரர்கள் மடிந்தனர்; குருதி ஆறு பெருக்கெடுத்து ஓடியது; பகைவனை வென்றான். இவ்வாறு படை எடுத்துச் சென்று வாகை மாலை சூடிய மன்னனின் வீரத்தைப் புகழ்வதே பரணி இலக்கியம் ஆகும்.*

*பரணி, வீரத்தைப் பற்றிப் பாடினாலும் காதல் இலக்கிய மரபையும் கொண்டு உள்ளது. மகளிரை அழைத்துப் போர் பற்றிய செய்திகளைக்*

*கூறும் பகுதி 'கடைதிறப்பு' எனப்படும். 'தலைவன் புகழைக் கேட்கக் கதவைத் திறவுங்கள்' என்று கூறுவது கடைதிறப்பு ஆகும். இப்பகுதி முழுவதும் காதல் இலக்கிய மரபை அடியொற்றி அமைந்துள்ளது.*

**பரணி பெயர்க் காரணம்:**

*பரணி என்பது நட்சத்திரத்தின் பெயர்; காளியையும் யமனையும் தெய்வங்களாகக் கொண்ட நாள். பரணி நாளில் பிறந்தவன் பெரும் வீரனாவான் என்பதும் நம்பிக்கை. எனவே போர்க்களத்தில் யானைகள் பலவற்றைக் கொன்று, பல உயிர்களையும் யமன் கவர்ந்து கொள்ளுமாறு செய்து, அரசனின் வீரம் வெளிப்பட, போர்க்களத்தில் காளிக்குக் கூழ் சமைத்து வழிபட்ட நிகழ்ச்சிகளைக் கூறுவதால் இந்நூல் பரணி என்று பெயர் பெற்றிருக்க வேண்டும். காளிக்கு உரிய நாள் பரணி. காளியைத் தெய்வமாகக் கொண்டு பாடப்படுவதால் இந்நூலுக்குப் பரணி எனப்பெயர் வந்தது என்றும் விளக்கம் கூறுவர்.*

*கலிங்கத்துப்பரணி என்ற நூல் பரணி வகையைச் சார்ந்த சிற்றிலக்கியம் ஆகும். இந்நூல் முதலாம் குலோத்துங்க சோழனின் கலிங்கப்போர் வெற்றி குறித்துப் பாடப்பட்ட நூல் ஆகும். குலோத்துங்கனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டது. அனந்தவர்மன் என்னும் வட கலிங்க மன்னன் திறை கொடாமலிருந்த பிழையின் காரணமாக முதலாம் குலோத்துங்க சோழனின் படைத்தலைவனும் அமைச்சனுமாயிருந்த கருணாகரத் தொண்டைமான் கி.பி. 1112ஆம் ஆண்டில் போரில் வென்ற செய்தியே. நூற்பொருள்: இது செயங்கொண்டார் என்னும் புலவரால் இயற்றப்பட்டது. இவர் தீபங்குடியைச் சேர்ந்த அருகர் ஆவார். இந்நூலின் காப்புச் செய்யுளால் இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என அறியலாம்.*

## 2. தூது

*ஒருவர் மற்றொருவரிடத்து மக்களையோ அல்லது அஃறிணை பொருட்களையோ தூது அனுப்புவதாக அமைந்த இலக்கியம் ஆகையால் இதற்கு தூது இலக்கியம் எனப் பெயர் ஏற்பட்டது.*

**தூதர்:**

*இருவரிடையே பேச்சு நிகழ்வதற்குச் செய்திகளை அல்லது கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதற்கு உறுதுணையாய் இருப்பவரைத் தூதர் என்று வழங்குவர். காதலர்களிடையே தூது அனுப்பும் பழக்கம் உண்டு. அரசர்களிடையே தூது அனுப்பும் மரபும் உண்டு. இன்றும்*

*அரசுகளுக்கு இடையே கருத்துப் பரிமாற்றங்களுக்காகத் தூதர்கள் நியமிக்கப்படுகின்றனர். நாடுகள் தோறும் பிறநாட்டுத் தூதரகங்கள் உள்ளன. தொன்று தொட்டு நடைமுறையில் இருக்கும் தூது பற்றி இலக்கியங்களும் படைக்கப்பட்டன.*

**தூது இலக்கியம் தோற்றமும் வளர்ச்சியும்:**

*எல்லா இலக்கிய வகைகளையும் போலவே தூது இலக்கியம், இலக்கணம், இலக்கியம் ஆகிய நூல்களில் காணப்படும் கருக்களிலிருந்து வளர்ச்சி அடைந்து தனி இலக்கிய வகையாகத் தோன்றியுள்ளது. இவ்வகையில் தூது இலக்கிய வகையின் தோற்றத்தையும் வளர்ச்சி யையும் காணலாம்.*

**தொல்காப்பியத்தில் தூது இலக்கியத்தின் வளர்ச்சி:**

*தொல்காப்பியர் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே பிரிவு நிகழ்வதற்கு உரிய காரணங்கள் கூறுகின்றார். கல்வி கற்கும் பொருட்டு செல்லுதல், மன்னனின் பகைவர்கள் மேல் போர் தொடுத்து செல்லுதல், தூது செல்லுதல் ஆகிய காரணங்களுக்காக தலைவன் செல்வான்.. அப்போது தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே பிரிவு ஏற்படும் என்று தொல்காப்பியர் கூறுகின்றார். இந்த இடத்தில் தூது செல்லுதல் பற்றி குறிப்பு உள்ளது. இந்தச் செய்தியைக் கூறும் தொல்காப்பிய நூற்பா,*

**“ஓதல் பகை தூது இவை பிரிவே”** **(அகத்திணையியல். 27)**

*தலைவனுக்கும், தலைவிக்கும் இடையே தூது செல்பவர்கள் யாவர் என்பதையும் தொல்காப்பியம் கூறுகின்றது. தோழி, தாய், பார்ப்பான், பாங்கன் (தோழன்), பாணன் என்போர் தூது செல்வர் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. இவை போன்று தூது பற்றிய செய்திகள் தொல்காப்பியத்தில் இடம்பெறக் காணலாம்.*

**இலக்கியங்களில் தூது இலக்கியத்தின் வளர்ச்சி:**

*இலக்கியங்களிலும் தூது பற்றிய செய்திகள் பல காணப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் அகப்பொருள் நிலையிலும், புறப்பொருள் நிலையிலும் தூதுச் செய்திகள் அமைவதைக் காணலாம்.*

**தூது இலக்கியத்திற்கு எடுத்துக்காட்டான மற்ற சிறப்புகள்:**

*அதியமான் என்ற மன்னனுக்கு அவ்வையார் என்ற புலவர் தொண்டைமான் என்ற அரசனிடம் போர் மேற்கொள்ள வேண்டாம். என்று வலியுறுத்துவதற்காக தூது சென்றதாக புறநானூற்றுப் பாடல் (95) ஒன்று உள்ளது. இதை புறப்பொருள் சார்பான தூதுக்கு சான்றாகக் கூறலாம்.*

## புலவரின் தூது:

"அன்னச் சேவல் அன்னச் சேவல்
ஆடுகொள் வென்றி அடுபோர் அண்ணல்
நாடு தலை அளிக்கும் ஒண்முகம் போலக்
கோடு கூடு மதியம் முகிழ்நிலா விளங்கும்
மையல் மாலையாங் கையறுபு இனையக்
குமரி அம் பெரும்துறை அயிரை மாந்தி
வடமலை பெயர்குவை ஆயின் இடையது
சோழ நன்னாட்டுப் படினே கோழி
உயர்நிலை மாடத்துக் குறும்பறை அசைஇ
வாயில் விடாது கோயில் புக்கு எம்
பெரும் கோக் கிள்ளி கேட்க இரும் பிசிர்
ஆந்தை அடி உறை எனினே மாண்ட நின்
இன்புறு பேடை அணியத்தன்
அன்புறு நன்கலம் நல்குவன் நினக்கே" (புறநானூறு : 67)

*இனி, இந்தப் பாடலில் உள்ள செய்தியைப் பார்ப்போம். இந்தப் பாடல் பிசிராந்தையார் என்ற புலவர் பாடியது. அவர், வானத்தில் பறந்து செல்லும் அன்னச் சேவலைப் (ஆண் அன்னத்தை) பார்த்து அன்னச்சேவலே! அன்னச் சேவலே! என்று அழைக்கிறார். அப்பொழுது மாலைநேரம். எப்படிப்பட்ட மாலை நேரம்? நிலவொளி வீசும் மாலை நேரம். துணையைப் பிரிந்து வாழ்வோரை மயங்கச் செய்யும் மாலை நேரம். அன்னச் சேவலானது தெற்குத் திசையில் உள்ள குமரித் துறையில் உள்ள அயிரை என்ற மீன்களைத் தின்று விட்டுச் செல்கின்றது. அப்போது பிசிர் ஆந்தையார் அந்த அன்னச் சேவலிடம் தன் செய்தியைக் கூறுகின்றார்.*

## தூதுவனாக அன்னச் சேவல்

*அன்னச் சேவலே! நீ வடதிசையில் உள்ள இமயமலைக்குப் போகின்றாயா? அவ்வாறு போவாய் ஆயின் இமயமலைக்கும் குமரித் துறைக்கும் இடையில் உறையூர் என்ற ஊர் உள்ளது. இந்த ஊர் சோழ நாட்டில் உள்ளது. நீ உறையூருக்குச் சென்றால் அங்கு உள்ள அரண்மனையின் உயர்ந்த மாடத்தில் தங்க வேண்டும்; அங்கு வாயில் காவலர்கள் இருப்பர்.*

## திருக்குறளில் தூது:

*திருவள்ளுவர் திருக்குறளில் தூது என்ற தலைப்பில் ஓர் அதிகாரத்தையே அமைத்துள்ளார். அந்த அதிகாரத்தில் தூதுவரின் இலக்கணம், பண்புகள், தூது சொல்லும் முறை என்பனவற்றைப் பத்துக் குறள்களில் விளக்குகின்றார். சான்றாக ஒரு குறளைக் காண்போம்.*

**"தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி**
**நன்றி பயப்பதாம் தூது"** **(திருக்குறள் : 685)**

*அதாவது, தூதனின் பண்புகளை இக்குறள் கூறுகின்றது. தூது செல்பவர்கள் தாம் சொல்ல வேண்டியவற்றைக் காரணவகையால் தொகுத்துக் கூறவேண்டும். கொடிய சொற்களை நீக்கிக் கூறவேண்டும். இனிய சொற்களால் கேட்பவர் மனம் மகிழும்படி சொல்ல வேண்டும். இவ்வாறு கூறித் தூது அனுப்புவோருக்கு நன்மை ஏற்படுத்துபவனே தூதன் என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.*

*பக்தி இலக்கியம் ஆகிய திருமுறைகளிலும், நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் தலைவனாகிய இறைவனிடம் அன்பு கொண்ட தலைவி தூது அனுப்புவதாக அமைந்த பாடல்கள் உள்ளன.*

*காப்பியங்கள் ஆகிய கம்பராமாயணம், சீவகசிந்தாமணி ஆகியவற்றிலும் தூதுச் செய்திகள் காணப்படுகின்றன.*

*கம்பராமாயணத்தில் அனுமன்தூது காணப்படுகிறது. சீவக சிந்தாமணியில் சீவகனிடம் குணமாலை கிளியை தூது அனுப்பும் செய்தி இடம்பெற்று இருக்கிறது. இவ்வாறு இலக்கணத்திலும், இலக்கியங்களிலும் இடம்பெறும் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு தூது என்ற தனியான ஓர் இலக்கியம் தோன்றியது எனலாம்.*

## முதல் தூது இலக்கிய நூல்:

*தூது இலக்கிய வகையின் முதல் நூல் நெஞ்சுவிடு தூது என்ற நூலாகும். இதனை இயற்றியவர் உமாபதி சிவாச்சாரியார். இவர் தமது ஞானாசிரியரிடம் சென்று தமது குறைகளை எடுத்துக் கூறுமாறு தமது நெஞ்சை தூது விடுகிறார். இதில் சைவ சித்தாந்தக் கருத்துகள் நிரம்ப உள்ளன. இந்த நூலின் காலம் கி.பி.14-ஆம் நூற்றாண்டு இப்போது நாம் ஒரு செய்தியை மனத்தில் கொள்ளவேண்டும். எந்த ஓர் இலக்கியமும் திடீர் என்று தோன்றிவிடாது. ஓர் இலக்கிய வகை தோன்றுவதற்கு உரிய கூறுகள் அதற்கு முன்னால் உள்ள இலக்கண நூல்களிலும் இலக்கிய நூல்களிலும் காணப்படும்.*

*இந்நூலைத் தொடர்ந்து பல நூல்கள் இயற்றப்பட்டன. இப்போது 300 க்கும் மேற்பட்ட தூது நூல்கள் உள்ளன.*

### தூது நூல் வகைகள்:

*தூது அனுப்புவோர், தூது பெறுவோர் ஆகிய அடிப்படையில் தூது நூல்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம் அவைகள், பின்வருமாறு:*

1. *ஆடவர் ஆடவர்க்குத் தூது அனுப்பும் நூல்கள்.*
2. *ஆடவர் பெண்களுக்குத் தூது அனுப்பும் நூல்கள்.*
3. *பெண்கள் ஆடவர்க்குத் தூது அனுப்பும் நூல்கள்.*

### தூதுவிடும் பொருட்கள்:

***உயர்திணை:*** *தோழி, விறலி.*

***அஃறிணை:*** *அன்னம், மயில், கிளி, வண்டு, பூ, மான், நெல்,*

***மற்றவை:*** *முகில் (மேகம்), தென்றல், பணம், தமிழ், நெஞ்சம்.*

### தூது நூல்கள்:

*கி.பி. 14ஆம் நூற்றாண்டில் தோன்றிய நெஞ்சுவிடு தூது என்ற நூலைத் தொடர்ந்து தமிழ்விடு தூது, அன்னம்விடு தூது, மேகம்விடு தூது, காக்கை விடு தூது, பழையது விடு தூது, மான்விடு தூது, கிள்ளை விடு தூது, செருப்பு விடு தூது போன்ற நூற்று ஐம்பதற்கும் மேற்பட்ட தூது நூல்கள் தோன்றியுள்ளன.*

## 3. குறவஞ்சி

### குறவஞ்சி இலக்கியத்தின் பெயர்க்காரணம்:

*குறவஞ்சி என்ற பெயர் இந்த இலக்கியவகைக்கு ஏன் வந்தது என்பதைக் காண்போம். குறவஞ்சி என்ற இந்த இலக்கிய வகையினுள் இடம்பெறும் செய்திகளில் குறத்தி குறி கூறுதல், குறவனுடன் உரையாடுதல் என்பன பெரும் பங்குவகிக்கின்றன. எனவே, இந்த இலக்கிய வகைக்குக் குறவஞ்சி என்ற பெயர் ஏற்பட்டது என்பர்.*

*இன்னொரு காரணமும் கூறப்படுகிறது. குறவஞ்சி என்ற சொல்லுக்குக் குறப்பெண் என்பது பொருள். வஞ்சி என்றால் பெண் என்று பொருள். இந்த இலக்கிய வகையில் குறத்தியின் செயல்களும், குறி வகைகளும் தலைமை இடம் பெறுகின்றன. எனவே, இந்த இலக்கிய வகைக்குக் குறவஞ்சி என்ற பெயர் ஏற்பட்டது என்றும் கூறுவர்.*

## நூல் பெயர் பெறும் முறை:

*குறவஞ்சி என்ற இலக்கியம் பெயர்பெறும் முறையைப் பார்ப்போம். குறவஞ்சி நூல் எந்த இடத்தை அடிப்படையாகக் கொண்டு பாடப் படுகிறதோ அந்த இடத்தின் பெயரை ஒட்டி நூலின் பெயர் அமையும். (எடுத்துக்காட்டு) திருக்குற்றாலக் குறவஞ்சி (திருக்குற்றாலம் என்ற இடம்). நூலில் இடம்பெறும் பாட்டுடைத் தலைவனின் பெயர் அடிப்படையிலும் நூல் பெயர்பெறும். (எடுத்துக்காட்டு) தியாகேசர் குறவஞ்சி.*

*இந்த நூலில் பாட்டுடைத்தலைவன் திருவாரூர் இறைவன் ஆகிய தியாகேசர் ஆவார். (தியாகேசர் - சிவன்)*

*பாடப்படும் இடத்தின் பெயரும் பாட்டுடைத் தலைவனின் பெயரும் இணைந்தும் நூல் பெயர் பெறும்முறை உள்ளது. (எடுத்துக்காட்டு) தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி. இந்நூல் பாடப்பட்ட இடம் தஞ்சாவூர். இது தஞ்சை என்றும் அழைக்கப்படும். பாட்டுடைத்தலைவன் தஞ்சாவூரில் உள்ள வெள்ளைப் பிள்ளையார்.*

*நூலினுள் இடம்பெறும் தலைவியின் பெயராலும் சில நூல்கள் பெயர் பெற்று உள்ளன. (எடுத்துக்காட்டு) தமிழரசி குறவஞ்சி. இந்த நூலுள் இடம்பெறும் தலைவியின் பெயர் தமிழரசி.*

## குறவஞ்சியின் தோற்றம்:

*இனி, குறவஞ்சி என்ற இலக்கிய வகை எவ்வாறு தோன்றியது என்று சுருக்கமாகப் பார்ப்போம்.*

## தொல்காப்பியத்தில் குறவஞ்சி

*குறவஞ்சி இலக்கிய வகையின் கரு தொல்காப்பியத்தில் காணப் படுகின்றது. களவுக் காலத்தில் தலைவி தலைவனைப் பிரிந்து வாடுகின்றாள். இதனை வளர்ப்புத் தாயும், பெற்ற தாயும் காண்கின்றனர். தலைவி ஏன் வாடிக் காணப்படுகின்றாள் என்பதை அறிய முயல் கின்றனர். எனவே, கட்டு, கழங்கு என்பன மூலம் குறி பார்க்கின்றனர். இதைத் தொல்காப்பியம்*

"கட்டினும் கழங்கினும் வெறி என இருவரும்
ஒட்டிய திறத்தால் செய்திக் கண்ணும்"

(தொல்காப்பியம்: பொருள் அதிகாரம்: களவியல் கூறுகிறது.)

### கட்டு

*மேலே கூறியவற்றுள் கட்டு என்றால் என்ன என்று பார்ப்போம். முறத்தில் அல்லது சுளகில் நெல்லைப் பரப்பி வைப்பர். அந்த நெல்லை எண்ணிக் குறி பார்ப்பர். இது கட்டு எனப்படும்.*

### கழங்கு

*கழங்கு என்றால் என்ன? இதுவும் ஒருவகையான குறிபார்த்தல் ஆகும். கழங்கு என்பது கழற்சிக்காய். இந்தக் காய்கள் மூலம் முருகனால் நோய் ஏற்பட்டு உள்ளதா என்று அறிவதற்காக வேலன் என்பவன் குறிபார்ப்பான்.*

*இவற்றால், குறிபார்த்தல் என்ற வழக்கம் தொல்காப்பியத்தில் சுட்டப்படுவதை அறியலாம். இதனைக் கருவாகக் கொண்டு பிற்காலத்தில் குறவஞ்சி இலக்கியம் தோன்றியது எனலாம்.*

### இலக்கியங்களில் குறவஞ்சி

*குறவஞ்சி இலக்கிய வகையின் கரு பழங்கால இலக்கியங்களிலும், காப்பியங்களிலும் காணப்படுகின்றது. அதற்கு ஒரு சான்றைக் காண்போம்.*

*சங்க இலக்கியங்களில் ஒன்றாகிய ஐங்குறுநூற்றில்*

**“பொய்யா மரபின் ஊர் முதுவேலன்**
**கழங்குமெய்ப் படுத்துக் கன்னம்தூக்கி**
**முருகுஎன மொழியும்”** **(ஐங் : 245)**

*என்று குறிக்கப்பட்டுள்ளது. இனி, இந்தப் பாடல் கூறும் கருத்தைப் பார்ப்போம். வேலன் வெறியாடுகின்றான். அவன் தன் உடம்பில் கழற்காயை அணிந்துள்ளான். படிமக் கலத்தைத் தூக்கி வைத்துள்ளான். தலைவியின் துயருக்கு முருகு என்னும் அணங்கின் குறையே காரணம் என்கின்றான். இப்பாடலில் குறி கூறும் செய்தி உள்ளது.*

*இதைப்போன்று பெருங்கதை போன்ற நூல்களிலும் குறி பார்க்கும் செய்திகள் இடம்பெறுகின்றன.*

*இத்தகைய செய்திகளைக் கருவாகக் கொண்டு குறவஞ்சி என்ற இலக்கிய வகை தோன்றியது எனலாம்.*

*குறவஞ்சி என்ற இலக்கிய வகையைப் பற்றி நன்கு அறிந்து கொள்ள, திருக்குற்றாலக் குறவஞ்சி என்ற நூலைச் சான்றாக எடுத்துக் கொள்வோம். இந்த நூலின் துணையால் குறவஞ்சி என்ற இலக்கிய வகையின் அமைப்பையும் பொருளையும் விளங்கிக் கொள்ளலாம்.*

*குறவஞ்சி ஒரு தமிழ்ப் பாடல் நாடக* (opera) *இலக்கிய வடிவமாகும். இது சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றாகும்.*

*பாட்டுடைத் தலைவன் உலாவரக் கண்ட தலைவி ஒருத்தி, அத்தலைவன் மீது காதல் கொண்டு அவனை அடையத் தவிக்கும் நிலையில், குறவர் குலத்தைச் சார்ந்த பெண் ஒருத்தி அத்தலைவிக்குக் குறி கூறிப் பரிசில் பெறும் செய்திகளைக் கூறுதலால் குறவஞ்சி என்னும் பெயர் பெற்றது. குறவஞ்சி இலக்கியம் பின்னாளில் குறத்திப்பாட்டு என்றும் வழங்கலாயிற்று.*

*குறவஞ்சி பாடல் நாடகங்கள் ஆரம்பத்தில் வசதிபடைத்தோருக்காக ஆடப்பெற்றாலும் அவற்றின் மையபாத்திரங்கள் நாடோடிகள் ஆவார்கள். குறவஞ்சியில் பல விதங்கள் உண்டு. அவற்றுள் "குறத்தி குறி கூறுவதுங் குறவனுடன் பேசி அளவளாவுவதுமாகிய செய்திகள் தலைமைபெறப் பாடும் குறவஞ்சி ஒரு பிரபல விதமாகும். குறிஞ்சி நிலத்துச் செய்திகளைக் குறவஞ்சி வருணிக்கும். சேரிவழக்கு முதலியன இதில் இடம்பெறும்."*

*திரிகூடராசப்பக் கவிராயர் இயற்றிய குற்றாலக்குறவஞ்சி முதல் குறவஞ்சி நூல் ஆகும். குற்றால நாதனே பாட்டுடைத் தலைவன். அவனைக் காதலிக்கும் வசந்தவல்லி கதைத் தலைவி ஆவாள். இந்நூலை எழுதிய ஆசிரியரை பாராட்டும் வகையில் 'குறவஞ்சிமேடு' என்னும் நிலப்பகுதியை மதுரையை ஆண்ட மன்னன் சொக்கலிங்க நாயக்கர் வழங்கினார்.*

**குறவஞ்சி நூல்கள்:**

*சரபேந்திர பூபாலக் குறவஞ்சி*

*அழகர் குறவஞ்சி*

*திருக்குற்றாலக் குறவஞ்சி*

*செந்தில் குறவஞ்சி*

*கும்பேசர் குறவஞ்சி*

*விராலிமலைக் குறவஞ்சி*

*தியாகேசர் குறவஞ்சி*

*பெத்தலகேம் குறவஞ்சி*

**ஈழத்துக் குறவஞ்சி நூல்கள்:**

*திருக்கோணேசர் மலைக் குறவஞ்சி*

*நகுமலைக் குறவஞ்சி*

*நல்லைக் குறவஞ்சி*

*நல்லைநகர்க் குறவஞ்சி*

*வண்ணைக் குறவஞ்சி*

*வண்ணை வைத்தியலிங்கக் குறவஞ்சி.*

## 4. பள்ளு

*பள்ளு எனும் நூல்வகை தமிழ் சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தது. இது மருதநில இலக்கியமாகும்.*

*பள்ளு இலக்கியங்கள் பழந்தமிழ் வேளாண்மைக் குடிகளான பள்ளர்கள் எனும் தேவேந்திரகுல வேளாளர்களின் வாழ்க்கை பற்றியவை. தமிழில் பெருந்தொகையான பள்ளு இலக்கியங்கள் உள்ளன. தமிழ் சிற்றிலக்கிய வகைகளிலே, பள்ளு இலக்கியங்களே அதிகமாக உள்ளன எனக் கூறப்படுகின்றது.*

**பள்ளு:**

*உழவுத் தொழிலை அடிப்படையாகக் கொண்டு பள்ளர்களின் வாழ்வை ஒட்டி அமைந்த இலக்கியமே பள்ளு இலக்கியம் ஆகும். இதில் வெள்ளம் வருவது, பலவகை மாடுகள், விதைத்தல், நாற்று நடுதல் பற்றி எல்லாம் இசையுடன் கூடிய இலக்கிய வடிவம் முக்கூடற்பள்ளு. இவ் இலக்கியங்களிலிருந்து பள்ளர்களின் வாழ்க்கை நிலையை மட்டுமன்றி, அக்காலப் பொதுவான நாட்டு நிலைமைகளையும், பண்பாட்டுத் தகவல்களையும் கூடப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. பல பள்ளு நூல்கள் இலக்கியச் சுவை மிக்கவை.*

***எடுத்துக்காட்டுகள்:***

*ஒரு பள்ளனுடைய இரண்டு மனைவியரில் ஒருத்தி சைவ சமயத்தவள், மற்றவள் வைணவ சமயத்தைச் சேர்ந்தவள். இவ்விருவருக்கும் ஏற்படுகின்ற சண்டையில் சிவனதும், திருமாலினதும் தலைகள் உருளுவதை முக்கூடற் பள்ளு ஆசிரியர் நகைச்சுவையுடன் எடுத்துக் கூறுகிறார். சுற்றிக்கட்ட ஒரு முழத்துண்டுமில்லாமல் புலித்தோலை உடுத்தானுங்கள் சோதி அல்லோடி என்று இளைய மனைவியின் இறைவனாகிய சிவனை, உடுத்துவதற்கு ஒரு முழத்துண்டு கூட இல்லாமல் புலித்தோலை உடுத்திருக்கிறான் என்று ஏசுகிறாள். அதற்கு இளையவள் திருமால்*

*மரவுரியும் சேலையும் கட்டிக்கொண்டது பற்றி இவ்வாறு சுட்டிக் காட்டுகிறாள். கற்றைச் சடைகட்டி மரவுரியும் சேலைதான் பண்டுகட்டிக் கொண்டான் உங்கள் சங்குக் கையன் அல்லோடிசிவன் நஞ்சுண்ட கதையைத் திரித்துப் பதிலடி கொடுக்கிறாள் மூத்தவள்.*

*நாட்டுக்குள் இரந்தும் பசிக்காற்ற மாட்டாமல் வாரிநஞ்சை யுண்டான் உங்கள் நாதனல்லோடி இளையவளிடமிருந்து பதில் வருகிறது இவ்வாறு:*

*மாட்டுப் பிறகே திரிந்தும் சோற்றுக்கில்லாமல் வெறும்மண்ணை யுண்டான் உங்கள் முகில் வண்ணனல்லோடி மண்ணையுண்டான் உங்கள் முகில் வண்ணனல்லோடி.*

**பள்ளு நூல்கள்:**

*அகத்தியர் பள்ளு*

*இரும்புல்லிப் பள்ளு*

*கங்காநாயக்கர் பள்ளு*

*கட்டி மகிபன் பள்ளு*

*கண்ணுடையம்மன் பள்ளு*

*கதிரை மலைப் பள்ளு*

*குருகூர்ப் பள்ளு*

*கொடுமாளூர்ப் பள்ளு*

*கோட்டூர் பள்ளு*

*பறாளை விநாயகர் பள்ளு.*

## 5. கலம்பகம்

*இறைவனையோ, அரசனையோ, தலைவனாகக்கொண்டு, செய்யுள்களால் பாடப்படும் ஒரு சிற்றிலக்கிய வகை கலம்பகம்.*

**பெயர்க் காரணம்:**

*கலம்பகம் என்பதற்குக் கலவை என்று ஒரு பொருள் உண்டு. சங்க இலக்கியங்களில் ஒன்றான பெரும்பாணாற்றுப்படை என்ற நூலில்,*

பல் பூ மிடைந்த படலைக்கண்ணி (பெரும்பாணாற்றுப்படை - 174)

*என்ற அடி இடம்பெற்றுள்ளது. இந்த அடியின் பொருள், இந்த அடிக்கு உரை ஆசிரியராகிய நச்சினார்க்கினியர் பல வகையாகிய*

*பூக்கள் கலந்து நெருங்கிய கலம்பக மாலை என்று பொருள் கூறுகிறார். கதம்பம் என்று ஒரு வகையான பூ மாலையை நாம் இப்பொழுதும் காண முடிகிறது. பல வகையான பூக்களைச் சேர்த்துத் தொடுத்த மாலையே கதம்பம் எனப்படுகிறது. கலம்பகம் என்பதே பேச்சு வழக்கில் கதம்பம் என்று மாறி வழங்கப்படுகிறது எனலாம்.*

*வைணவ பக்தி இலக்கியத்தை வழங்கியவர்கள் பன்னிரண்டு ஆழ்வார்கள். அவர்களுள் ஒருவர் தொண்டரடிப்பொடி ஆழ்வார். அவர், 'கலம்பகம் புனைந்த அலங்கல் அம் தொடையல் புனைந்த அலங்கல் -அம் தொடையல்' (திருப்பள்ளியெழுச்சி.5) என்று குறிப்பிடு கின்றார். பல மலர்கள் கலந்து தொடுக்கப்பட்ட மாலை என்பது இதன் பொருள் ஆகும். பல்வேறு மலர்கள் கலந்து தொடுக்கப்பட்ட மாலை கலம்பகம் என்று குறிப்பிடப்படுகிறது அல்லவா? அதுபோலப் பல்வேறு உறுப்புகளால் ஆன இலக்கிய வகை கலம்பகம் என்று கூறப்படுகிறது எனலாம்.*

## பல்வேறு உறுப்புகளின் கலப்பு:

*கலம்பகம் என்பதைக் கலம்பு + அகம் என்று பிரித்தும் விளக்கம் கூறலாம். கலப்பு என்பது கலம்பு என்று ஆகி உள்ளது. நூலின் உள்ளே பல்வேறு உறுப்புகள் கலந்து வருவதால் கலம்பகம் என்று பெயர் பெற்றது எனக் கருதலாம்.*

*கலம்பகம் என்பதைக் கலம் + பகம் என்று பிரித்தும் பொருள் கூறலாம். கலம் என்றால் பன்னிரண்டு என்று பொருள். பகம் என்றால் ஆறு என்று பொருள். கலம்பகம் என்றால் பதினெட்டு என்று பொருள். இந்த இலக்கிய வகையில் புயம், அம்மானை, ஊசல், களி, மறம், சித்து, காலம், மதங்கியார், வண்டு, மேகம், சம்பிரதம், தவம், பரணி, தழை, இரங்கல், தூது, குறம், தென்றல் போன்ற பதினெட்டு உறுப்புகள் கலந்து வருவதால் இது கலம்பகம் என்று பெயர் பெற்றது என்றும் கருதப்படுகிறது.*

*என்றாலும், இக்கருத்துப் பொருந்தாது எனலாம். ஏனெனில்,*

1. *எல்லாக் கலம்பக நூல்களிலும் 18 உறுப்புகள் காணப்படவில்லை.*
2. *சில நூல்களில் பதினெட்டுக்கும் குறைவான உறுப்புகளே உள்ளன.*
3. *வேறு சில நூல்களில் பதினெட்டுக்கும் அதிகமான உறுப்புகள் காணப்படுகிறன.*

*எனவே, கலம் + பகம் = கலம்பகம் என்று விளக்கம் கூறுவது, அவ்வளவு பொருத்தமாக இல்லை என்று கூறலாம்.*

## கலம்பகத்தின் தோற்றம்:

*பல கலம்பக இலக்கிய வகையின் உறுப்புகளின் கருக்கள் தமிழின் தொன்மையான இலக்கண நூல் ஆகிய தொல்காப்பியத்தில் காணப் படுகின்றன. தொல்காப்பியத்தில் பல கலம்பக உறுப்புகள் அகத்துறை களாகவும், புறத்துறைகளாகவும் காட்டப்பட்டுள்ளன. இவ்வாறு காட்டப்பட்டுள்ளதை,*

## கலம்பகம் உறுப்புகள்

1. *தொல்காப்பிய அகத்துறைச் சார்ந்தவை - அம்மானை, ஊசல், காலம், வண்டு, மேகம், தவம், பாண், தழை, இரங்கல், தூது, குறம், தென்றல்.*

2. *தொல்காப்பியப் புறத்துறை சார்ந்தவை - களி, மறம் புயம்.*

*இவ்வாறு தொல்காப்பியர் கூறும் அகத்துறை, புறத்துறை சார்ந்த உறுப்புகளின் கலவையாகக் கலம்பகம் என்ற இலக்கிய வகை தோன்றியது எனலாம்.*

## நந்திக் கலம்பகம்:

*முதல் கலம்பக நூலாக நந்திக் கலம்பகம் என்ற நூல் காணப்படு கின்றது. நந்திக் கலம்பகம் என்ற நூல் பல்லவ மன்னர்களில் ஒருவன் ஆகிய மூன்றாம் நந்திவர்மன் என்பவன் மீது பாடப்பட்டது ஆகும். இந்நூலை இயற்றிய ஆசிரியரின் பெயர் தெரியவில்லை. நந்திவர்மனின் மாற்றாந்தாய் மகன் ஒருவன் புலமைமிக்கவன் என்றும் அவன் நந்தியைக் கொல்வதற்கு 'அறம்' வைத்துப் பாடியதே இந்நூல் என்றும் கூறுவர். அது தெரிந்தும் இந்நூலை அரங்கேறச் செய்து, தமிழ்ச்சுவை பருகி மகிழ்வுற்று, இறுதிப் பாடலைப் படிக்கும்போது பந்தல் தீப்பிடித்து, நந்திக் கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும். "கலம்பகமே கொண்டு காயம்விட்ட தெள்ளாறை நந்தி" என்றும் தமிழ் நூல்கள் நந்தியைப் போற்றும்.*

## கலம்பக நூல்கள்:

*ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம், திருவரங்கக் கலம்பகம், திருவாமாத்தூர்க் கலம்பகம், தில்லைக் கலம்பகம்.*

# 4. நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

*இயல், இசை, நாடகம் என்ற மூன்று கூறுபாடுகளையும் தன்னகத்தே அடக்கிய 'முத்தமிழ்' என்று தமிழ்மொழி சிறப்பிக்கப் படுகிறது. மனத்தின் வெளிப்பாடு இயல்; நாவின் புலப்பாடு இசை; உடலின் செயற்பாடு நாடகம் என முத்தமிழும் மனம், மொழி, செயற்பாடுகளோடு நெருங்கிய தொடர்புடையன.*

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம் (தொல், 999)

*என்ற தொல்காப்பிய அடிகளால் நாடகக்கலை மிகப்பழங்காலந் தொட்டு தமிழகத்தில் மேம்பட்டிருந்ததை அறியலாம். இயலும், இசையும், நாடகத்தில் இணைந்திருக்கின்றன. தனிப்பாடலுக்கு அபிநயம் பிடித்து ஆடுவது நடனம் என்றும் கதைப்பாடலுக்குத் தக்க வேடம் புனைந்து ஆடுவது நாடகம் என்றும் வேறுபடுத்தப்பட்டது.*

## பண்டை இலக்கியங்களில் நாடகம் பற்றிய செய்திகள்

*சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் வகுத்த உரையால் சயந்தம், செயிற்றியம், முறுவல், பரத சேனாபதியம், மதிவாணர் நாடகத்தமிழ் நூல் முதலான நாடகத்தமிழ் இலக்கண நூல்கள் இருந்தன என்றறிய முடிகிறது. இவற்றுள் பெரும்பகுதி அழிந்தனவாக எஞ்சிய பாடல்களை உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டியுள்ளனர். இவை நாடகத்தமிழிலக்கண நுல்களாகையால் இவற்றிற்கு முன்பு நாடக இலக்கியங்கள் இருந்திருக்க வேண்டும் என்றும் உணர முடிகின்றது.*

*தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் எட்டுவகை சுவைகள் பற்றியும் அவை பிறக்கும் நிலைக்களன்கள் பற்றியும் விரிவாகக் கூறுகின்றார். சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய பதினோராடல்களும், எண்வகை விரிக்கூத்துக்களும் பற்றிய விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன. குன்றக்குரவர்கள் ஆடுகின்ற குரவைக் கூத்தும் வேட்டுவ வரியில் கொற்றவைக் கோலம் பூண்டு மறக்குடிப்பெண் ஆடும் கூத்தும் நாடகக் கூறுபாடுகளையுடையன. மாதவி, "நாடக நன்னூல் நன்கு கடைப்பிடித்துக் காட்டினள்" என்கிறார் இளங்கோ. நாடக அரங்குகள் அமைய வேண்டிய முறை, தூண்களின் நிழல் விழாத வகையில் விளக்குகள் வைக்கின்ற முறை,*

ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி என்ற மூன்று வகையான திரைச்சீலைகள் அமைகின்ற முறை ஆகியன பற்றிச் சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் விரிவான செய்திகள் இடம் பெற்றுள்ளன.

பௌத்த சமணர்கள் வரவால் களப்பிரர் ஆட்சிக்காலத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சி குன்றியது போன்று நாடகக்கலை வளர்ச்சியும் குன்றியது. இசையும், நாடகங்களும் சிற்றின்ப உணர்வைத் தூண்டி விடும் என்பது இம்மதங்களின் கோட்பாடு.

## சோழர்கள் காலத்தில் நாடகங்கள்

இராசராசனுடைய வெற்றியைச் சிறப்பிக்கும் வகையில் இராசராசேச்சுவர நாடகம் நடிக்கப்பட்டதாகத் தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டு குறிப்பிடுகிறது. நாடகக் கலைஞர்களுக்கு அரசு மானியம் வழங்கியதாகவும் சாசனங்களால் அறிய முடிகின்றது. குலோத்துங்க சோழ நாடகம், பூம்புலியூர் நாடகம் முதலானவை கோயில்களில் நடிக்கப்பட்டன. நெல்லை மாவட்டத்தில் கிடைத்த கல்வெட்டு மூலம் உய்யவந்தாள் யசோதை என்பாள் ஆண்டுதோறும் திருவிழாக்காலத்தில் நாடகங்களை நடித்து வந்ததாகவும், அதற்கென மானியம் பெற்றதாகவும் அறிகிறோம்.

சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் வேத்தியல் என்ற பிரிவு வேந்தன் முதலாய உயர்ந்தோருக்கான நாடகம், பொதுவியல் என்ற பிரிவு பொதுமக்களுக்கான நாடகம். பின்னாளில் இவ்விரு பிரிவுகளும் முறையே நாடகம் எனவும் கூத்து எனவும் பெயரிடப்பட்டன.

## 17, 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் நாடகங்கள்

16, 17ஆம் நூற்றாண்டுகளில் தஞ்சையை மராட்டியர்கள் ஆண்ட காலத்தில் கோயில்களில் நாடகங்கள் நடிக்கப்பட்டன. குற்றாலக் குறவஞ்சியும், சரபோஜி மன்னர் பற்றிய பாடப்பட்ட சரபேந்திர பூபாலக் குறவஞ்சியும், பள்ளு நாடகங்களும் நடிக்கப்பட்டன. 18ஆம் நூற்றாண்டு அருணாச்சலக் கவிராயரின் இராமநாடகக் கீர்த்தனையும், கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனையும் பள்ளு, குறவஞ்சி போன்றே இசைநாடக நூல்களாக எழுந்தன. இசையோடு பாடவும், நடிக்கவும் ஏற்புடைய வகையில் இவை எழுதப்பட்டிருந்தன.

செல்வக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் வேசையர் வலைப்பட்டு, நோயும் வறுமையும் அடைந்து துன்புறுவதாகவும், இறுதியில் மனம்

*திருந்துவதாகவும் பாடுகின்ற நொண்டி நாடகம் இந்நூற்றாண்டுகளில் எழுதப்பட்டது. சீதக்காதி வாழ்ந்த காலத்தில் இவ்வாறு மனந்திருந்திய ஒருவன் மெக்கா சென்று முடமான கால் சரியாகி வாழ்ந்ததாக எழுதப்பட்ட நாடகம் சீதக்காதி நொண்டி நாடகம். இது சிந்து என்ற யாப்பு வகையில் பாடப்பட்டது. இத்தகைய நொண்டி நாடகங்களில் பாடப்பட்ட சிந்து என்னும் யாப்புக்கு நொண்டிச் சிந்து என்ற பெயர் ஏற்பட்டது. மாரிமுத்துப் புலவர் இயற்றிய திருக்கச்சூரி நொண்டி நாடகம் புகழ்பெற்ற நாடகம். ஐயனார் நொண்டி நாடகம் குறிப்பிடத் தக்கது. இந்த நொண்டி நாடகக் கதையமைப்பில் எழுதப்பட்ட இரத்தக்கண்ணீர் நாடகம் பின்னாளில் புகழ்பெற்றது. மாரிமுத்துப் பிள்ளை என்பவர் கருநாடக நவாபுகளின் காலத்தில் ஆட்சியிலிருந்த வர்கள் செய்த கொடுமைகளை மையமிட்டு அநீதி நாடகம் என்ற நாடகத்தை இயற்றிப் புகழ்பெற்றார்.*

*19-ஆம் நூற்றாண்டில் நாடக நூல்கள் பல எழுதப் புகழ்பெற்றவர் காசிவிசுவநாத முதலியார். இவருடைய டம்பாச்சாரி நாடகம், தாசில்தார் நாடகம், பிரம்மசமாஜ நாடகம் முதலியன புகழ்பெற்ற நாடகங்கள். அப்பாவுப்பிள்ளை இயற்றிய அரிச்சந்திர விலாசம் மிகுந்த வரவேற்புப் பெற்ற நாடகமாக அமைந்திருந்தது. அரிச்சந்திர விலாசம் என்ற பெயரில் நால்வரும், அரிச்சந்திரன் நாடகம் என்ற பெயரில் அறுவரும் அரிச்சந்திரன் கதையை நாடகமாக எழுதியுள்ளனர். இராமச்சந்திரக் கவிராயர் சகுந்தலை விலாசம், பாரத விலாசம், ரங்கோன் சந்தை நாடகம் முதலான நாடகங்களை எழுதினார்.*

*மராட்டியருடைய 'சங்கிலி நாடகக் கம்பெனி' தஞ்சாவூரில் சில நாடகங்களை நடத்தியது. இவற்றைக் கண்டு கோவிந்தசாமி ராவ் பாடல்களைக் குறைத்தும் வசனங்களைக் கூட்டியும், நாடகங்களைப் படைத்தார். இவர் 'மனமோகன நாடகக் கம்பெனி' என்ற ஒன்றை நிறுவி திரௌபதி வஸ்திராபகரணம், அபிமன்யு சண்டை, சிறுத்தொண்டர் நாடகம், ராமதாஸ் சரித்திரம் முதலான புராண நாடகங்களை நடத்தினார்.*

## மனோன்மணியமும் கவிதை நாடகங்களும்

*தத்துவப் பேராசிரியராகப் பணிபுரிந்த சுந்தரம்பிள்ளை (1855-1897) 'படிப்பதற்கும் நடிப்பதற்குமான நாடக இலக்கியத்தின் தேவையுணர்ந்து மனோன்மணீய நாடகத்தை எழுதினார். தமிழ்நாடக வரலாற்றில் இந்நூல் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. லிட்டன் பிரபு எழுதிய* Lost tales of Miletus *என்ற தொகுப்பில் உள்ள* The Secret Way

என்ற பகுதியைத் தழுவி ஷேக்ஸ்பியருடைய நாடகங்களின் அமைப்பில் 5 அங்கங்கள், உட்பிரிவான களங்கள் என்ற வடிவில் இந்நாடகம் எழுதப்பட்டது. படிப்பதற்கு எளிய ஆசிரியப்பா அமைப்பில் தமிழ்நாட்டுக் கதையாகவே தோன்றுகிற வகையில் இந்நாடகம் அமைந்துள்ளது. ஆசிரியருடைய மொழிப் பற்றும், நாட்டுப் பற்றும் நூலில் மிகச் சிறப்பாக வெளிப்படுகின்றன. 'நீராருங் கடலுடுத்த' என்ற தமிழ்த்தெய்வ வணக்கப் பாடல் தமிழக அரசின் தமிழ்த்தாய் வாழ்த்தாக இசைக்கப் பெற்றுப் போற்றப்படுகிறது. கோல்டுஸ்மித் எழுதிய (The Her) அவள் என்ற நூலையும் சைவ சித்தாந்தக் கருத்துக்களின் பிழிவாக அமையும் 'சிவகாமியின் சரிதம்' என்ற பகுதியாக உருமாற்றி மிக அழகாக நாடகத்தில் இணைத்துள்ளார்.

சுந்தரம்பிள்ளை எழுதிய நூற்றொகை விளக்கம் இலக்கிய ஆராய்ச்சிக்குத் துணை புரிகின்ற நூல். மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை என்று குறிக்கப்படும் அளவிற்குத் தம் கவிதை நாடகத்தால் புகழ்பெற்ற இவருடைய பெயரால் நெல்லையில் மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் இயங்கி வருகிறது. மனோன்மணீயம் தமிழில் தோன்றிய கவிதை நாடகங்களுக்குத் தாய் என்று போற்றப் படுவது. பின்னாளில் கவிதை நாடகங்கள் எழுதியவர்களுள் பலரும் மனோன்மணியத்தையே முன்மாதிரியாகக் கொண்டனர். பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் மிருச்சகடிகா என்ற வடமொழி நாடகத்தை மண்ணியல் சிறுதேர் என்ற பெயரில் தமிழில் தந்தார்.

மனோன்மணியம் போன்று நல்ல தமிழ் நாடகங்கள் தமிழில் தோன்ற வேண்டுமென்ற விழைவுடன் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் மனோன்மணியம் சுந்தரனார் பெயரால் பரிசுத்திட்டம் ஒன்றை அறிவித்தது. இப்போட்டியில் பரிசுபெற்ற 'அனிச்ச அடி' என்ற நாடகம் ஆ.பழனி என்பவர் எழுதியது. சங்க கால நன்னன் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது.

ஐசக் அருமைராசனின் 'முல்லைமாடம்' சி.எஸ். முத்துசாமி ஐயரின் 'விசுவநாதம்' ஆகிய இரண்டு கவிதை நாடகங்களும் மனோன் மணியத்தைப் பின்பற்றி எழுந்தவை. உருத்திரங்கண்ணனின் 'கரிகால் வளவன்' பெ. தூரனின் 'ஆதிஅத்தி' சொ. சிங்காரவேலனின் 'ஊமைக் குயில்' (தித்தனை மையமிட்டது) மு. உலகநாதனின் வாள்விழி (குமணன் கதை) முதலாய கவிதை நாடகங்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்க மாந்தர்களின் கதைகளை மையமிட்டு எழுதப்பட்டன.

கா. அரங்கசாமி கும்பகருணன் மனைவி கனகையின் ஊமைத் துயரை மையமாக்கிக் 'கனகை' என்ற நாடகத்தையும், புத்த ஞானப்பேரொளியின்

அருள்வீச்சுக்கு ஆட்பட்ட அம்பாபலியின் வரலாற்றை மையமிட்டு ‘அம்பாபலி’ கவிதை நாடகத்தையும், வ.த. இராமசுப்பிரமணியம் ‘செம்பியன் செல்வன்’ என்ற நாடகத்தையும், சிற்பிபாலசுப்பிரமணியம் கொங்கு நாட்டில் சமண சமயம் புகுந்த வரலாற்றுச் சூழலை மையமிட்டு ‘ஆதிரை’ என்ற கவிதை நாடகத்தையும் எழுதியுள்ளனர். இவையனைத்தும் அங்கம், களம் என்ற அமைப்பினில் அமைந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. இதை மனோன்மணியத்தின் செல்வாக்கிற்குச் சான்றாகக் கொள்ளலாம். மேற்குறித்தவற்றுள் முல்லைமாடம் தவிர்த்த அனைத்தும் பழைய வரலாற்றுச் செய்திகளின் புதிய வடிவங்கள் என்பதும் கவனிக்கத்தக்கது.

கோனூர் பெருமாள் எழுதிய வன்னியூர் பொன்னன் (1994) ஒரு கற்பனை நாடகம். சுற்றுப்புறச் சூழல் பற்றிய அக்கறையுடன் ‘காடு வளர்ந்தால் நாடு வளரும்’ என்ற சமகாலச் செய்தியை ஆசிரியர் அழகிய கவிதை நாடகமாக்கியுள்ளார். மனோன்மணியம் வகுத்துத் தந்த பாதையில் எழுதப்பட்ட இக்கவிதை நாடகங்கள் படித்து மகிழ்வதற்காக எழுதப்பட்டவையேயாகும். மேடைக்குத்தக்க மாற்றங் களோடு நடிப்பதற்கும் ஏற்றவை.

பரிதிமாற்கலைஞர் என்ற புனைபெயரைச் சூட்டிக்கொண்ட சூரிய நாராணய சாஸ்திரியார் ‘நாடகவியல்’ என்ற நாடக இலக்கண நூலை எழுதினார். தமது இலக்கண நூலுக்கு ஏற்புடையதாக ரூபாவதி, கலாவதி, மானவிஜயம் என்ற நாடக நூல்களையும் இயற்றினார். இவருடைய மாணவர் ந. பலராம ஐயர் மகேந்திர பல்லவன் எழுதிய மத்தவிலாசப்பிரகசனம் என்ற நாடகத்தைத் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார்.

## மேடை நாடக வளர்ச்சி

சங்கரதாஸ் சுவாமிகள் (1867-1922) தமிழ் நாடக உலகில் ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியவர். நாடகமேடையை ஒழுங்கு நிறைந்த தொழில் முறை வாழ்வாக்கினார். நாடு முழுவதும் சென்று பலர் நாடகத்துறைக்கு வரக் காரணமானார். தம் அமைப்பை ஒரு நாடகக் கல்விச் சாலையாக்கினார். நாற்பதுக்கும் மேற்பட்ட நாடகங்கள் எழுதினார். இவற்றுள் பெரும்பாலானவை புராண நாடகங்கள். வள்ளி திருமணம், பிரகலாதன், பவளக்கொடி, லவகுசா, சதி அனுசுயா முதலாய நாடகங்களைப் பாடல்களும் பொருள் பொதிந்த வசனங்களும் நிரம்பியனவாக எழுதி மேடையேற்றினார். அச்சில் வெளிவந்த நாடகங்கள் மிகச் சிலவேயாகும். நான்கு மணி நேரம் நடக்கக் கூடிய நாடகத்தை ஒரே இரவில் அடித்தல் திருத்தலற்று எழுதும் ஆற்றல் படைத்தவராக விளங்கினார். தமிழ் நாடகத் தலைமையாசிரியர் என்று போற்றப்படுகின்றார்.

***பம்மல் சம்பந்த முதலியார்*** *(1873-1964) 18-ஆம் வயதில் தமது முதல் நாடகமான புஷ்பவல்லியை எழுதி நடித்தார். நீதிபதியாக இருந்த காலத்திலும் நாடகக்கலை மீதுள்ள தீராத விருப்பத்தினால் பிறமொழி நாடகங்களை மொழி பெயர்த்தும், தாமே எழுதியும் மேடையேற்றினார். 1891-இல் சுகுணவிலாச சபா என்ற நாடக சங்கத்தை நிறுவினார். நடிகர்கள் என்றால் கூத்தாடிகள் என்ற சமூகப் பார்வையை மாற்றிக் கற்றறிந்தவர்களையும் இத்துறையில் ஈடுபடுத்தினார். தாமும் நடித்தார். 90 நாடங்கள் எழுதியுள்ளார். நாடகம் என்றால் புராணக் கதைகள் தாம் என்றிருந்த நிலையை மாற்றிச் சமூக நடப்புக்களையும் நாடகப் பொருளாக்கினார். ரத்னாவளி, மனோகரா, வேதாள உலகம், சபாபதி, லீலாவதி சுலோசனா, கள்வர் தலைவன் முதலாயவை இவரது புகழ்பெற்ற நாடகங்கள். மாக்பெத், ஹாம்லெட், வெனிஸ் வணிகன், சிம்பலின், விரும்பிய விதமே* (As you like it) *முதலாய ஷேக்ஸ்பியரின் நாடகங்களைத் தமிழாக்கி மேடையேற்றினார். சாகுந்தலம், மாளவிகாக்னி மித்ரம், விக்கிரமோர் வசியம் போன்ற வடமொழி நாடகங்களையும் தமிழில் மொழிபெயர்த்து மேடையேற்றினார். தம் அனுபவங்களை 'நாடகத்தமிழ்', 'நாடக மேடை நினைவுகள்' 'நாடகக் கலையில் தேர்ச்சி பெறுவது எப்படி?' முதலாய நூல்களாக எழுதியுள்ளார். நாடகங்களின் நேரத்தையும் பார்வையாளர் வசதிக்கேற்ப 3 மணி நேரமாக்கினார். பம்மல் சம்பந்த முதலியார் 'தமிழ் நாடகத் தந்தை' என்று பாராட்டப்படுகிறார்.*

*தொ.பொ.கிருஷ்ணசாமிப்பாவலர் 'பாலமனோகர சபா' வை நிறுவினார். இவருடைய 'கதரின் வெற்றி' என்ற தேசிய சமுதாய நாடகம் பெருத்த வரவேற்பைப் பெற்றிருந்தது. விசுவநாததாஸ் நாடகமேடையைத் தேசிய உணர்வைப் பரப்பப் பயன்படுத்திக் கொண்டார். "கொக்கு பறக்குதடி பாப்பா அதைக் கோபமின்றிக் கூப்பிடடி பாப்பா, மக்களை ஏமாற்றும் கொக்கு அதன் மமதை அழியவேண்டும் பாப்பா..." முதலாய பாடல்கள் தேசபக்தியைத் தூண்டுவனவாக அமைந்திருந்தன. எம். கந்தசாமி முதலியார் புகழ்பெற்ற புதினங்களை நாடகமாக்கினார். சி. கன்னையா நாயுடு மேடை நாடகத்தில் அரங்கு, திரை, இசை முதலானவற்றில் புதுமைகள் சேர்த்தார். எஸ்.ஜி. கிட்டப்பா மேடை நாடகங்களில் இசைக்கு முதன்மை சேர்த்தார் என்.எஸ். கிருஷ்ணன் சீர்திருத்தக் கருத்துக்கள், மூடநம்பிக்கையொழிப்பு, சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றை முன்நிறுத்தி நாடகங்களை அரங்கேற்றினார்.*

*சி.என்.அண்ணாதுரை தமது நாடகங்களில் ஒரு மொழிப் புரட்சியை ஏற்படுத்தினார். கூறவந்த சீர்திருத்தக் கருத்துக்களுக்கேற்ப கூர்மையான வசனங்களால் நாடகங்களுக்கு வலுவூட்டினார்.*

சந்திரோதயம், சந்திரமோகன் அல்லது சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்ஜியம், வேலைக்காரி, ஓர் இரவு முதலாய நாடகங்கள் சமூக மாற்றத்திற்கு வித்திட்டன. வேலைக்காரி நாடகத்தில் இடம்பெறும். ‘கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு’ என்ற அறிவுரைத் தொடர் அழியாமல் நிற்கிறது. அறிஞர் அண்ணா வழியில் கலைஞர் கருணாநிதி சீர்திருத்த நாடகங்களைச் செம்மாந்த தமிழ் நடையில் எழுதினார். மணிமகுடம், மந்திரி குமாரி, பராசக்தி, தூக்குமேடை, பூம்புகார் முதலியன இவருடைய புகழ்மிக்க நாடகங்கள்.

டி.கே.எஸ். சகோதரர்கள் மற்றும் நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை குழுவினரின் நாடகங்கள் வெற்றிகரமாக அமைந்தன. பெண்கள் நாடக மேடைக்கு வராத காலகட்டத்தில் ஆண்கள் பெண்கள் பாத்திரத்தையும் ஏற்று நடித்தனர். டி. கே. சண்முகம் ஔவையார் நாடகத்தில் உணர்ச்சிகரமாக நடித்து ஔவை சண்முகம் என்று பாராட்டப்பட்டார். வீரபாண்டிய கட்டபொம்மன் வரலாற்றை ‘முதல் முழக்கம்’ என்ற பெயரில் ரா.வேங்கடாசலம் எழுதி மேடையேற்றினார்.

எஸ்.டி. சுந்தரம் எழுதிய நாடகங்களுள் ‘கவியின் கனவு’ இலக்கிய நயமிக்க தேசிய நாடகம்; பெரும் வரவேற்புப் பெற்றது. டி.கே.முத்துசாமியின் ‘குமாஸ்தாவின் பெண்’, ‘கவிகாள மேகம்’ முதலாய நாடகங்கள் குறிப்பிடத்தக்கவை. தேவனின் ‘கோமதியின் காதலன்’, ‘துப்பறியும் சாம்பு’ முதலானவை நகைச்சுவை நாடகங்கள் பி.எஸ்.ராமையா ‘தேரோட்டியின் மகன்’, ‘மல்லியம் மங்களம்’ ‘போலீஸ்காரன் மகள்’, ‘பிரசிடென்ட் பஞ்சாட்சரம்’ முதலாய உணர்ச்சிமிக்க நாடகங்களை எழுதி மேடையேற்றினார். அருராமநாதனின் ‘இராஜராஜசோழன்’ நாடகம் பலமுறை மேடையேற்றப்பட்டது. கு.சா. கிருஷ்ணமூர்த்தியின் ‘அந்தமான் கைதி’, திருவாரூர் தங்கராசுவின் ‘ரத்தக் கண்ணீர்’ முதலாயவை குறிப்பிடத்தக்கவை.

எஸ்.வி.சகஸ்ரநாமத்தின் ‘சேவா ஸ்டேஜ்’, ஆர்.எஸ். மனோகரின் ‘நேஷனல் தியேட்டர்ஸ்’ சோ இராமசாமியின் ‘விவேகா ஃபைன் ஆர்ட்ஸ்’ முதலாய நாடக மன்றங்கள் வெற்றிகரமாக நாடகங்களை அரங்கேற்றின. கே. பாலசந்தர் எழுதி மேடையேற்றிய சர்வர் சுந்தரம், எதிர் நீச்சல் முதலான சமூக நாடகங்களும், கோமல் சாமிநாதனின் தண்ணீர் தண்ணீர், ஓர் இந்தியக் கனவு முதலான அரசியல் நாடகங்களும் நடைமுறை வாழ்வின் அம்சங்கள் பற்றி எழுதப்பட்டவை. சோ அரசியல் அங்கத நாடகங்களால் புகழ்பெற்றவர். அவருடைய ‘முகமதுபின் துக்ளக்’ கால் நூற்றாண்டுக்குப் பிறகும் நடைமுறையோடு ஒட்டிப் போகின்ற அரசியல் அங்கத நாடகம்.

*புராணம், சரித்திரம், சமூகம் என்ற தளங்களில் படிப்படியாகப் பயணப்பட்டு வந்த மேடை நாடகங்கள் நகைச்சுவை நாடகங்களில் காலூன்றி நிற்கின்றன. கிரேஸி மோகன், கோவை அனுராதா, எஸ்.வி.சேகர், மௌலி முதலானோரின் நாடகங்கள் மக்களிடையே வரவேற்புப் பெற்றுள்ளன.*

*இக்கால மேடை நாடகங்களில் புகழ்பெற்றவை நூலாக வெளியிடப் பட்டுள்ளன. மெரினாவின் நாடகங்கள், கோமல் சுவாமிநாதனின் 'தண்ணீர் தண்ணீர்', 'சோ'வின் 'முகமது பின் துக்ளக்' 'சம்பவாமி யுகே யுகே' 'மனம் ஒரு குரங்கு' முதலாய நாடகங்கள் நூலுருப் பெற்றுள்ளன. சுஜாதா, ஜெயந்தன், இந்திரா பார்த்தசாரதி ஆகியோரின் நாடகங்கள் நூல் வடிவு பெற்றவை. படிக்கப்படுகின்ற இந்நாடகங்கள் நடிக்கப்பட்டவையும்கூட இந்திரா பார்த்தசாரதி எழுதிய 'இராமானுஜர்' மேடையேற்றப்பட்ட நாடகம். இந்நாடகத்திற்காக இந்திரா பார்த்தசாரதிக்கு 'சரஸ்வதி சம்மான்' விருது வழங்கப்பட்டது.*

*ஸ்டாலின், கிரேக்க நாடகாசிரியராகப் புகழ்பெற்ற சோபக்ளிஸின் நாடகங்களைத் தமிழில் படைத்து வருகிறார். ஈடிபஸ் மன்னன், கலோனஸில் ஈடிபஸ், ஆன்டிகனி, எலக்ட்ரா, அஜகஸ், டிரச்சிப் பெண்கள் (2002) என்ற ஆறு நாடகங்களை மிக இயல்பான எளிய நடையில் தமிழாக்கம் செய்துள்ளார்.*

*தெருக்கூத்து நாடங்கள் சென்ற சில நூற்றாண்டுகளில் நாடக அரங்குகளின்றி வீதிகளில் நடிக்கப்பட்டு வந்தன. இரவில் தொடங்கி விடிய விடிய நடைபெறும் இந்நாடகங்களில் கட்டியங்காரன் பாத்திரங்களை அறிமுகப்படுத்தி, நாடகக் காட்சிகளை விளக்குவான். ஊருக்கும், மக்களுக்கும் ஏற்றபடி கோமாளி நகைச்சுவையோடு பேசுவான்; பாடுவான். கிராம மக்களின் நாடகக் கலையுணர்வின் வெளிப்பாடு தெருக்கூத்து நாடகங்கள்.*

*நாடகம் என்பது ஒரு நிகழ்கலை* (Performing art) *என்பதால் நடிப்பதுதான் நாடகம்; படிப்பதன்று என்பது ஒரு முக்கியமான கருத்தாக விளங்குகிறது. நாடகப் பிரதிக்கு, நடிப்பவன், பார்வையாளன், நிகழிடம் மூன்றும் இருந்தால்தான் சிறக்கும் என்பது ஒரு வாதம். தமிழின் நவீன நாடக இயக்கம் 1980-ன் பிற்பகுதியில் எழுச்சி பெற்றுச் சபாநாடகங்களைப் புறங்காண விழைந்தது. தொலைக்காட்சியின் முன்பிருந்த ஆதரவு குறைந்திருக்கிறது. மேடை நாடகங்களுக்கு முன்பிருந்த ஆதரவு குறைந்திருக்கிறது. நவீன நாடகம் பற்றிய அக்கறையோடு 'கூத்துப்பட்டறை' என்ற அமைப்பை நடத்தி வருகின்ற ந.முத்துசாமி. 'பரீக்ஷா' என்ற அமைப்பை நடத்தி வரும் ஞாநி, மு.ராமசாமி, கே.ஏ.குணசேகரன் ஆகியோர் செயல்பட்டு வருகின்றனர். இவர்கள்*

சமூக அக்கறை மிகுந்த நாடகங்களை மக்களிடம் எடுத்துச் செல்லும் நல்ல முயற்சியைச் செய்து வருகின்றனர். மக்களோடு மக்களாக நின்று வீதி நாடகங்களாக இவை அமையும்போது நாடகம் ஒரு சமூகக் கருவியாக மட்டுமின்றி வலுவானதோர் ஆயுதமாகவும் மாறுகிறது. அரசியல், குழந்தைத் தொழிலாளர் வாழ்க்கைப் பிரச்சினைகள், மதுவொழிப்பு, சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு முதலான சமுதாயத் தொடர்புடைய செய்திகள் வீதி நாடகங்களுக்குப் பொருளாகின்றன. ந.முத்துசாமியின் 'நாற்காலிக் காரர்' நாடகம் அரசியல் ஒரு விளையாட்டு ஆகிவிட்ட அவலத்தையும் அதில் பொதுமக்கள் சிக்கிச் சிதறுண்டு போவதையும் விளக்குகிறது.

புராண நாடகங்களைப் பிரமிப்புடன் மக்கள் பார்த்து நின்ற போக்கிற்கு மாற்றாகச் சமூக நாடகங்கள் வந்தன. இவை சகமனிதனின் பிரச்சினைகளைப் பேசி பார்வையாளனோடு ஒரு நெருக்கத்தை ஏற்படுத்தின. நவீன நாடகங்களும், வீதி நாடகங்களும் மக்களோடு மக்களாகக் கலந்து நின்று மக்களின் பிரச்சினையைப் பேச முயற்சி செய்கின்றன.

## வானொலி நாடகங்களும், தொலைக்காட்சி நாடகங்களும்

வானொலி நிலையங்கள் கட்புலனாகக் கண்டு மகிழும் நாடகங் களைச் செவிப்புலனாக ஒலி பரப்புகின்றன. ஓரங்க நாடகங்களும், ஒரு மணிநேர நாடகங்களும், தொடர் நாடகங்களும் வானொலியில் ஒலிபரப்பப்படுகின்றன. வானொலி நாடக நடிகர்கள் வசனங்களால் வெளிப்படுத்தும் உணர்ச்சி வேறுபாடுகள் நேயர்களுக்கு ஒரு கற்பனைக் காட்சியைத் தோற்றுவிக்கின்ற வகையில் திறமையானதாக அமைய வேண்டும். பூர்ணம் விசுவநாதன், துறைவன், ச.து. சுப்பிரமணிய யோகி, சுத்தானந்த பாரதியார், கோமல் சுவாமிநாதன், எஸ்.டி. சுந்தரம், சோ ஆகியோர் பிரபலமான வானொலி நாடகங்களை எழுதியுள்ளனர்.

தொலைக்காட்சி நாடகங்கள் மேடை நாடகங்கள் என்ற வகையில் மட்டுமின்றி வெளிப்புறப்படப்பிடிப்புக்கள் நிறைந்ததாக தொழில்நுட்ப ரீதியில் எடுக்கப்பட்டு ஒளிபரப்பப்படுகின்றன. ஒரு நீண்ட தொடர் வருடக் கணக்கில் பார்வையாளர்களைச் சின்னத்திரைக்கு முன்னர் ஈர்த்து வைக்கிறது. தனியார் தொலைக்காட்சிகளின் பெருக்கம் இத்துறையைப் போட்டிகள் நிறைந்ததாக மாற்றியுள்ளது. சில நல்ல சிறுகதைகளும், புதினங்களும் தொலைக்காட்சி நாடகங்களாக ஒளிபரப்பப்படுகின்றன.

★ ★ ★